
# காத்திருக்கிறேன் ராஜகுமாரா

ரமணிசந்திரன்



# மகிழ்வுரை

ஆசிரியர் ரமணிசந்திரன் அவர்களுக்கு,

வணக்கம்.

உங்களுடைய நாவல்கள் 35 படித்திருக்கிறேன். எத்தனை அற்புதமானது. உங்களுடைய பெயரை எங்கு எந்தப் புத்தகத்தில் பார்த்தாலும் சந்தோஷம். அப்படியே குதிக்க வேண்டும் போல் எண்ணம். உங்கள் புத்தகத்தைப் படித்தாலும், படித்ததை மீண்டும் படிக்க ஆவல்.

எத்தனை முறை உங்கள் நாவலைப் படித்திருப்பேன் தெரியுமா? உங்கள், மயங்குகிறாள் ஒரு மாது 25 தடவையும், பால் நிலா 30 தடவையும், மானே மானே 25 தடவையும், வைரமலர், என் கண்ணில் பாவையன்றோ 50 தடவையும் படித்திருக்கிறேன். ஒரு சின்னக் குழந்தை தன் தாயிடம் சென்று எவ்வளவு சந்தோஷப்படுமோ அவ்வளவு சந்தோஷம்; உங்கள் புத்தகத்தின் மீதும், உங்கள் மீதும். நீங்கள் மட்டும் என் கையில் கிடைத்தால் உங்கள் கைகளுக்கு கோடி முத்தம் கொடுத்திருப்பேன்.

A lot of thanks to my God.
Because He Gives me.

அன்புள்ள
தேவி
சேலம்.

# காத்திருக்கிறேன் ராஜகுமாரா...

## 1

அந்தப் பழைய கால அரண்மனையின் அலங்கார மாடிப்படியில் தடதடவென்று இறங்கி வேகமாக ஓடிவந்தாள் அவள். மற்றவர் பார்க்குமுன் சென்று, வாயில் புறத்துத் தூணை தொட்டு விட்டால் அன்று அவளே வென்றவள் ஆவாள்.

பின்புறமாய்ப் பார்வையைச் செலுத்தியபடியே விரைந்தோடி இறங்கியவள், மாடிப்படி வளைவில் நிதானமாக ஏறி வந்து கொண்டிருந்த அவன் மேல் நன்றாக மோதிக் கொண்டு விட்டாள்.

அவள் ஓடிவந்த வேகத்துக்கு இருவருமே மிச்சப்படிகளை உருண்டுதான் கடந்திருக்க வேண்டும்.

ஆனால் அவள் ஓடிவந்த சத்தம் கேட்டு ஏறி வந்தவன் தயாராயிருந்ததால் இருவருமே ரத்த காயமின்றித் தப்பினர்.

அப்போதும் கால் தடுமாறியவளின் தோளை அழுந்தப் பற்றி, அவள் விழுந்து விடாமல் நிறுத்தினான் அவன்.

மூச்சு வாங்க நின்றவளை ஏற இறங்க நோக்கியவனின் பார்வை கடைசியாக அவளது பூமுகத்தில் வந்து நிலைத்தது.

பளீரிட்ட புன்னகையுடன், "என்ன அழகான முக அமைப்பு! இன்னும் கொஞ்சம் வளர்ந்து, இன்னும் கொஞ்சம் மெலிந்து மேலே ஓர் ஐந்தாறு வயதேனும் கூடுதலாகவும் ஆகியிருந்தால், இப்போதே என் ராணி என்று அறிந்திருப்பேனே! பரவாயில்லை. அப்படி வளர்ந்த பிறகு வருகிறேன். அப்போது என்னையே மணப்பாயில்லையா, பிரின்சஸ்?" என்று ஆவலாகக் கேட்டவன், குனிந்து, அவளது பிரமித்த இதழ்களில் மென்மையாக முத்தமிட்டான்.

அவள் திகைத்து விழிக்கவும், சிரித்து, அவளது குண்டுக் கன்னத்தில் லேசாக வருடி, அவளை வழியிலிருந்து விலக்கி, நிறுத்தி விட்டு மேலே ஏறிச் சென்றான்.

கனவில் நடப்பது போல எங்கோ வெறித்தபடி நடந்து சென்றாள் மடந்தைப் பருவத்தில் அடியெடுத்து வைத்திருந்த அந்தச் சிறுமி.

## 2

"இப்படி அழிச்சாட்டியம் செய்கிறாள், இந்தப் பெண். வந்து இரண்டு அதட்டல் போடுங்கள் என்றால் உங்களுக்கும் கையால் ஆகவில்லை. ஒரோரு பையனுக்கும் ஒரோரு குறை சொல்லிக் கொண்டே இருந்தால் என்றைக்குக் கல்யாணம் ஆகும்? டாக்டர் என்றால் எந்நேரமும் நோயாளிகள் பற்றியே பேசி மூடைக் கெடுத்து விடுவானாம். வக்கீல் என்றால் வாதாடுவானாம். இஞ்சினீயர் என்றால் மிஷின்களோடு மாரடிப்பானாம். ஏண்டி, இந்த டாக்டர், வக்கீல், இஞ்சி



னியர்கள் எல்லாம் கல்யாணம் ஆகாமல் பிரம்மச்சாரிகளாகவா இருக்கிறார்கள்? அவர்களைக் கட்டிக் கொண்டு, பிள்ளைக்குட்டி என்று பெற்றுக் கொடுத்திருப்பவர்களும் பெண்கள்தான். தெரியுமா?" என்றாள் கவுசல்யா கோபத்துடன்.

ஸ்டைலாகத் தோளைக் குலுக்கி, "அது அவர்கள் இஷ்டம். என்னவோ எனக்குப் பிடிக்கவில்லை" என்று மிடுக்காகக் கூறிவிட்டு, இந்து பத்திரிகையில் ஸ்போர்ட்ஸ் பகுதியில் கண்களை ஓட்டினாள் நயனதாரா.

"அதுதான், ஏன் பிடிக்கவில்லை என்றுதான் கேட்கிறேன்? திரும்பவும் தோளைக் குலுக்கினாயோ, ஓங்கி ஒன்று போட்டு விடுவேன் சொல்லிவிட்டேன்." என்றாள் தாயார் சினத்துடன்.

"என்னவோ பிடிக்கவில்லை என்றால் பிடிக்கவில்லைதான், அத்தோடு ஆளை விடுங்களேன். டேய், நரேன், இங்கே பார்த்தாயா? நான் தான் ஜெயித்தேன். சவுத் ஆப்ரிக்கா, ஆஸ்திரேலியாவை ஐந்து ரன் வித்தியாசத்தில் ஜெயித்திருக்கிறது பார், எடு ஐந்து ரூபாயை" என்று தம்பியிடம் பந்தயத் தொகையை வசூலிப்பதில் முனைந்தாள் தமக்கை.

"எங்கே பார்ப்போம்?" என்று பத்திரிகைக்காகக் கையை நீட்டினான் நரேந்திரன், அவளுடைய தம்பி.

"அந்தப் பேப்பரைப் பிடுங்கி அடுப்பில் வைத்து விடுவேன்", என்று பல்லைக் கடித்தாள் தாயார். எவ்வளவு முக்கியமான விஷயம் பேசிக் கொண்டிருக்கிறேன்.. "அதன் இடையில் இது என்ன பைசா பிரயோசனப்படாத பேச்சு?"

"பைசா பிரயோசனப்படாத பேச்சா? இதில் வென்றதற்காக இந்த சவுத் ஆப்ரிக்கா டீமுக்கு எத்தனை லட்சம் டாலர் கிடைக்கும் தெரியுமா?" என்று நரேந்திரன் இடைபுகுந்து பேசவும் நல்லதாய்ப் போயிற்று என்று மெதுவாக நழுவத் தொடங்கினாள் நயனதாரா.

''அது அவனுக்கு லாபம். உனக்கு என்ன கிடைக்கும்? அதைச் சொல்லு... ஏய், நீ எங்கேடி ஓடுகிறாய்? முதலில் எனக்கு ஒரு நல்ல பதிலைச் சொல்லி விட்டுப் போ. இந்தப் பையன் பாங்கில் ஆபிசர் ராங்க். நல்ல சம்பாத்தியம்.. அடக் கழுதை நான் சொல்லுகிறவள் மனுஷியாகத் தெரியவில்லை, போய்க் கொண்டே இருக்கிறாயே'' என்று அதட்டினாள் தாய்.

தாயாருக்கு பதில் சொல்லாமல் ''பாருங்கள் அப்பா, அம்மா என்னைக் கழுதை என்கிறார்கள்'' என்று தந்தையிடம் புகார் செய்தாள் பெண்.

''அதைப் பற்றி நான் அப்புறமாய் விசாரிக்கிறேன். முதலில் நீ அம்மாவின் கேள்விக்குப் பதிலைச் சொல்லி விட்டு வா'' என்றார் மகேசுவரன்.

''என்னப்பா நீங்களும்...'' என்று தொடங்கியவள், தந்தையின் முகம் லேசாகக் கருக்கக் கண்டதும், குரல் மாறி, ''எனக்கு இப்போது கல்யாணம் வேண்டாம். அதனால் இந்த மாப்பிள்ளை பார்க்கிற வேலையையே நிறுத்தி விடுங்கள்'' என்றாள் அமைதியாக.

''இருபத்து மூன்று வயதாகிறது. இப்போது வேண்டாம் என்றால் பிறகு எப்போது பண்ணிக் கொள்வதாக இருக்கிறாயாம்? முகமெல்லாம் சுருக்கம் விழுந்து முடிநரைத்த பிறகா?'' என்றாள் கவுசல்யா கிண்டலாக.

ஒருகணம் நயனதாராவின் கண்களில் கலக்கம் தெரிந்தது. உடனேயே சமாளித்து, ''எப்படியோ இப்போது வேண்டாம். அவ்வளவுதான்'' என்றாள் உறுதியோடு.

''அதுதான் ஏன் என்று கேட்கிறேன். வயது ஏறிக் கொண்டு போகிறதா இல்லை, உனக்கு மட்டும் இறங்குவதாக நினைப்பா? உனக்கு அடுத்தவளுக்கும் இருபத்தொன்று முடிந்து விட்டது...''

''அய்யோ, ஏனம்மா போர்? நான் ஆஃபீசுக்குக் கிளம்புவதா இல்லையா? பிடிக்கவில்லை என்றால் விடாமல் அறுக்கிறீர்களே'' என்று வெடுவெடுத்தாள் மகள். ''நான் குளிக்கப் போகிறேன்''



''எல்லாம் போகலாம். முதலில் ஏன் பிடிக்கவில்லை? என்ன பிடிக்கவில்லை? என்று சொல்லி விட்டு அதற்கு அப்புறமாய்ப் போ போதும்.''

அன்னை விடுவதாக இல்லை என்று உணர்ந்து, ''நீங்கள் பார்க்கும் மாப்பிள்ளை யாரும் பிடிக்கவில்லை.. அவ்வளவு தான்'' என்றாள் அவள் எரிச்சலை வெளிப்படையாகவே காட்டி.

''ஆங்! பிடிக்கவில்லையா! டாக்டர், இஞ்சினியர், பாங்க் ஆபீசர்! இவர்கள் எல்லாம் பிடிக்கவில்லை என்றால் கிறுக்காடி உனக்கு? இவர்களுக்கெல்லாம் மேலாக அப்படி எந்த ராஜகுமாரன் உனக்காக வரப் போகிறானாம்?'' என்றாள் பெற்றவள், கோபமும் கேலியுமாக.

நயனதாராவின் சிப்பி இமைகள், அவளது கண்களின் குமுறலை மறைத்து விசிறியாய்ப் படிந்தன. வருவான் என் ராஜகுமாரன்.. ஒருநாள் கட்டாயம் வந்தே தீருவான் என்று உள்ளூரச் சொல்லிக் கொண்டாள். அவன் வரும் வரை காத்திருந்தே தீருவேன், யார் என்ன சொன்னாலும் சரிதான்!

ஒருவழியாகக் குளித்துக் கிளம்பினால், சாப்பாட்டு மேசையில் வேறு, தாயார் திரும்பவும் இதே பேச்செடுத்து எரிச்சல் மூட்டினாள்.

''நீ ஒருத்திதானா மகள்? அடுத்தவளை நினைக்க வேண்டாம்?'' என்று தங்கை முன்னிலையிலேயே கேட்கவும் பொறுமையிழந்து, ''அப்படி அவளுக்கு அவசரம் என்றால் அவளுக்கு மாப்பிள்ளை பார்த்து முடியுங்கள். எனக்குச் சம்மதம்'' என்று வெடுவெடுத்து விட்டு அதற்காக அப்பாவிடமும் வாங்கிக் கட்டிக் கொண்டாள்.

யாரிடம் என்ன பேசுவது என்று இல்லாமல் பேசுகிறாளாம். ஒழுங்குமுறை, மரியாதை ஒன்றும் இல்லையாம்.

ஏதோ, இவரும் திருமணப் பேச்செடுக்காமல் இத்தோடு விட்டாரே, என்று ஓர் அரைகுறை நிம்மதியோடு வீட்டை விட்டுக் கிளம்பியவள், வெளியே வந்ததும் சுற்றுமுற்றும் பார்த்தாள். நாலாபுறமும் அலைந்து தேடிய பார்வை சோர்ந்து திரும்பியது. "என் ராஜகுமாரா, நீ எங்கே இருக்கிறாய்? எப்போது வருவாய்? உனக்காக நான் எவ்வளவு காலமாகக் காத்திருக்கிறேன்?

அன்று அலுவலகத்திலும் நயனதாராவுக்கு ஒன்றுமே பிடிக்கவில்லை.

பெரிய மேனேஜரில் இருந்து கடை நிலை ஆஃபீஸ் பெருக்குகிற ஆயா வரை எல்லோரும் பரபரப்புற்றிருந்தார் கள்.

பழையன கழிதலும் புதியன புகுதலும் சமாசாரம் தான்.

நிறுவனத்தின் பழைய எம்.டி. விலகிக் கொள்ள, புதிய எம்.டி.யாக அவருடைய மகன் பொறுப்பேற்கப் போகிறார்.

பெரியவர் ஒருமாதிரி, குடும்பத் தலைவர் போலவே பணிபுரிவோரிடம் பழகி விட்டவர். "என்னம்மா, நயனா, எப்போது கல்யாணச் சாப்பாடு போடப் போகிறாய்?" என்று கூடக் கேட்டிருக்கிறார். தப்பே செய்தால் கூடப் பெரும்பாலும் தட்டிக் கொடுத்தே செல்கிறவர்.

ஆனால் மகன் நேர் எதிர்மறை என்று சொன்னார்கள். வெளிநாட்டில் எம்.பி.ஏ. பண்ணியவனாம். எள் என்னுமுன் எண்ணையை எதிர்பார்ப்பான் என்றார்கள். அலுவலகத் தையே தலைகீழாக மாற்றி அமைக்கப் போகிறான் என்றார் கள். அவர்களுடைய ஆந்திரா நிறுவனத்தை அப்படித்தான் செய்தானாம்!

அன்று நயனதாரா அலுவலகம் சென்ற போது யார் வீட்டி விருந்தோ கொணர்ந்திருந்த வாக்குவம் க்ளீனர் 'விர்'ரென்று ஒலியெழுப்பிக் கொண்டிருந்தது. ஃபைல் ரூமில் தூசி தட்டி



விட்டுத் தும்மிக் கொண்டிருந்தார் அட்டெண்டர். ஹெட் கிளார்க் கையில் ஒட்டடைக் குச்சி இருந்தது.

அவனுக்குத் துளி அழுக்கு இருந்தாலும் பிடிக்காதாமே!

வாக்குவம் க்ளீனரால் ஒட்டடை அடித்தால் ரொம்பவும் சுத்தமாக இருக்கும் என்று சொல்லி, செய்யும் விதம் காட்டிக் கொடுத்து விட்டுத் தன் வேலையைப் பார்க்கப் போனாள் நயனதாரா.

உதவி மானேஜரின் காரியதரிசி அவள். அங்கே போனால், அவரும் தன் மேஜை, அலமாரிகளைத் தான் ஒதுக் கிக் கொண்டு இருந்தார். தலையில் அடித்துக் கொண்டு, அவ ருக்கு உதவி செய்தாள் அவள்.

ஆனால் அலுவலக வேலையை விட்டு விட்டு, அலங்கா ரத்தைக் கவனித்ததன் பயன், மதியம் பார்க்கையில் அலுவல கம் பளிச்சென்றிருந்தது. அதன் பிறகே வழக்கமான வேலை தொடங்கினார்கள்.

பாக்கி விழுந்து விட்ட அலுவல்களை மறுநாள் அரை மணி நேரம் சீக்கிரமாக வந்து முடித்து விட வேண்டும் என்ற எச்சரிக்கையுடன் அரை மணி தாமதமாகவே எல்லோரையும் அனுப்பி வைத்தார் மானேஜர்.

ஏனென்றால் புது எம்.டி.க்கு வேலையில் பாக்கி வைத்தா லும் பிடிக்காதாம்!

பெரிய கொம்பன் என்று புகைந்தபடியே கையைத் திருப்பி 'டைட்டா'னைப் பார்த்தாள் நயனா. மணி ஆறை நெருங்கிக் கொண்டு இருந்தது.

இதற்கு மேல் பஸ் பிடித்து, வீட்டுக்குப் போய், மீண்டும் ரெடியாகி வெளியே போவதானால் மிகவும் தாமதமாகி விடும். அனிதா சொன்ன நேரத்துக்கு ஓட்டலுக்குப் போய்ச் சேர முடியாது!

ஓர் ஆட்டோ பிடித்து வீடு சென்றால், வெயிட்டிங் போட்டு நிறுத்தி வைத்து விட்டு அவசர அவசரமாக உடை மாற்றியபடி, ''ம்ம்... ஊரில் எல்லார் வீட்டிலும் நிச்சயதார்த் தம், கல்யாணம் என்று நடக்கிறது!'' என்ற அம்மாவின் பெரு மூச்சையும் சகிக்க வேண்டியிருந்தது.

அத்தோடு நில்லாமல், ''ஏன் நயனி, உன் ஃபிரண்டு அனிதா சமூகத்தில் எல்லாம் கொஞ்சம் லேட்டாகத்தானே திருமணம் செய்வார்கள்? அவளுக்கே நிச்சயம் என்கிறா யே...'' என்று கவுசல்யா தொடங்கவும் நயனதாரா பொறுமை இழந்தாள்.

''அம்மா ப்ளீஸ், இப்போது தொடங்காதீர்கள். அனிதா என்னை விட இரண்டு வயது பெரியவள். ஒரு நல்ல காரியத் தில் கலந்து கொள்ளக் கிளம்பும் போது மூடு அவுட் ஆக்காதீர் கள். இரவு கொஞ்சம் லேட்டானாலும் ஆகக்கூடும். நானே ஆட்டோ பிடித்துக் கொண்டு வந்து விடுவேன். வீணாக அப் பாவை அலைய வைத்து விடாதீர்கள். வரட்டுமா?'' என்று ஆத்திரத்துடன் தொடங்கி, அதைச் சமாளித்து, ஒருவாறு அமைதியாக பேசியபடியே வாயிலுக்கு விரைந்தாள்.

ஆட்டோவில் ஏறிச் செல்லும் போது நயனதாராவுக்கு மிகவும் மனதுக்குக் கஷ்டமாக இருந்தது.

குடும்பத்தில் அவள் முதல் மகள். அவளுடைய தந் தைக்கு ஆணோ, பெண்ணோ, எல்லோரும் சமம் என்பது எண்ணம். எனவே சேமிப்புகளையும் மூன்றாகப் பிரித்து மக னுக்கும் இரண்டு மகள்களுக்கும் சமமாகவே கொடுப்பதாக இருந்தார். பளிச்சென்ற தோற்றமும், இந்தப் பணத்தினால் செய்யக்கூடிய சீர் சிறப்புகளுமாக நல்ல நல்ல வரன்களை ஈர்த்து வந்தன.

பெருமையும், பூரிப்புமாகப் பெற்றவளுக்கு எத்த னையோ ஆசைகள். எதற்கும் இடம் கொடாமல் அந்த மகளே நந்தியாய் நிற்கவும் ஆத்திரப்படுகிறாள். பாவம் தான். ஆனால்...



சில சமயங்களில் நயனதாராவிற்கே உள்ளூர ஓர் அச்சம் வருவதுண்டு. வெறும் கானல் நீரைத் தேடுகிறாளோ? தேடி, இலவு காத்த கிளியாய் வாழ்க்கையை வீணாக்குகிறாளோ என்றெல்லாம் தோன்றும்.

ஆனால் அப்படி ஏதும் நடந்து விட்ட பிறகு அவளு டைய ராஜகுமாரன் வந்து நின்றால்? அப்புறம் அவளால் எப்படி உயிரோடு இருக்க முடியும்?

ரொம்பவும் மனம் சலித்து விடுமுன் சீக்கிரமாக வந்து விடேன் ராஜகுமாரா என்று மனதிற்குள் அவனிடம் வேண்டி னாள் அவள்.

இதையே எண்ணிக் கலங்காமல் பார்ட்டியை நினைத் தால் அதுவும் துன்பமாகத் தான் தெரிந்தது. மணப்பெண் தவிர யாரையும் தெரியாது. வரவில்லை என்றாலோ அனிதா விடவே மாட்டேனென்று விட்டாள். படிக்கிற காலத்திலி ருந்தே அவளுக்கு நயனதாராவிடம் ஒரு பைத்தியம். இரண்டு ஆண்டு தங்கிப் படித்தவளுக்கு மூன்றாவது ஆண்டில் டி.சி. கொடுக்கிற நிலையில், நயனதாராவோடு சேர்ந்து படித்து, அவளது எளிய விளக்கங்களால் தேர்வு பெற்றவள்.

அதிலிருந்து தாரா, தாரா என்று ஒட்டிக் கொண்டே இருப் பாள். நயனதாராவின் உயரத்தில், தோற்றத்தில், படிப்பில் அப்படி ஒரு பிரமை அனிதாவுக்கு.

நயனதாரா அவளது நிச்சயதார்த்த விழாவுக்கு வரச் சற்று தயங்கவும், ''நீ வராவிட்டால் நான் விழாவையே ரத்து செய்து விடுவேன்'' என்று அனிதா மிரட்டவும் நயனி பணிந்து விட் டாள்.

ஆட்டோவில் சென்று தாஜில் இறங்கி, 'லாபி'க்குள் செல் லும் போதே நயனதாராவுக்கு உள்ளூரக் கூசத் தொடங்கியது. 'லாபி'யின் அளவும் அலங்காரமும் காண்கையில் இதில் விழா நடத்தக்கூடிய அளவு பணக்கார சினேகிதியை உருவாக்கிக்

கொள்ளாமல் இருந்திருக்கலாமே என்று இருந்தது அவளுக்கு.

இத்தனைக்கும் நயனதாராவின் குடும்பமும் வசதியே இல்லாதது என்று சொல்ல முடியாது. மத்திய தரத்திலும் சற்று உயர்ந்ததே. அப்பர்மிடில் கிளாஸ் என்பார்களே, அந்த ரகம். ஆனால் இந்த தாஜ் பார்ட்டி எல்லாம் முடியாத, இயலாத விஷயம்.

அனிதாவின் நிச்சயதார்த்தம் நடந்த இடம் பால் ரூம் 2. அதனுள் சென்றதும் அங்கிருந்த வைரங்கள், பட்டு ஜரிகைக ளின் ஒளியில் அவளுக்குக் கண்களும் சேர்த்துக் கூசின. தன் அமெரிக்கன் டைமண்ட் நெக்லேஸ் கண்ணாடிக் கல்லாய்த் தோன்றுவது போல ஒரு பிரமை.

மூக்குக் கண்ணாடியைத் தூக்கிப் பார்த்து, "யார்...!" ஓர் அம்மாள் இழுக்கவும், திரும்பிப் போய் விடலாமா என்று நயனதாரா ஓர் எட்டு பின்னோக்கி வைத்த போது அனிதாவே அவளைக் கண்டுவிட்டு ஓடி வந்தாள்.

"என் உயிர்த்தோழி" என்று மாப்பிள்ளை உட்பட எல் லோரிடமும் அறிமுகப்படுத்தி வைத்தாள்.

அதற்கு ஓரளவு பலன் இருந்த போதும், அவளும் தோழி யின் அருகிலேயே இருந்து விட முடியாதில்லையா? அதிலும் அன்றையக் கதாநாயகியே அவள் என்பதால்!

உணவு முடிந்ததும் இருக்கைகளை ஒதுக்கிப் போட்டு விட்டு நடனமாடத் தொடங்கினார்கள். ஆணும் பெண்ணுமாய் ஜோடி ஜோடியாக... அனிதாவும் அவளுடைய வருங்காலக் கணவனும் ஆடினார்கள்.

மாப்பிள்ளையின் தோழன் ஒருவன் தன்னுடன் ஆடவரு மாறு நயனதாராவைக் கேட்டான்.

"ஆடிப்பழக்கம் இல்லை.. சாரி.." என்று மரியாதையுட னேயே மறுத்து விட்டு, அங்கங்கே ஆடாமல் ஒதுங்கி உட்



கார்ந்தவர்களுடன் ஒருபுறமாய் உட்கார்ந்து பார்த்துக் கொண் டிருந்தாள் அவள்.

ரொம்பவும் போர் அடித்தது. ஆனால் விழாவுக்கென்று வந்துவிட்டு, சாப்பிட்ட உடனேயே கிளம்பினால் நன்றாயி ராது. சற்று நேரம் உட்கார்ந்திருந்து விட்டுக் கிளம்ப வேண்டும் என்று மணியைப் பார்த்தபடியே அமர்ந்திருந்தாள்.

ஷாண்டலீயர், பூ அலங்காரம், கார்ப்பெட் என்று தேடித் தேடி ஒவ்வொன்றின் அழகையும் பிடிவாதமாய் ரசித்து முடித்த பிறகும் நேரம் பதினைந்து நிமிடங்களைத் தாண்ட வில்லை.

மிக மிக போரடித்ததால் வந்த சிறு கொட்டாவியைக் கைமறைவில் நாசூக்காக வெளியேற்றியபடி பார்வையை அலைய விட்டவள் திகைத்தாள்.

ஏனெனில் அங்கே, வாயில்புறமாய் வந்து கொண்டிருந் தவன் அவளுடைய ராஜகுமாரன்.

## 3

ஆண்டுக்கணக்கில் நயனதாராவின் கனவுகளின் நாயகன். அன்றுவரையும் மாற்றம் இல்லாமல் அதே உயரத் தோடு, அதே கம்பீரத்தோடு, அதேமுக அமைப்போடு நிதான மாக வந்து கொண்டிருந்தான்!

ஸ்விட்ச் போட்டாற்போல் முகமெல்லாம் விகசிக்க, இமைதட்டி விழிப்பது கூட பாவம் என்பது போல பார்வை அவன் மேலேயே நிலைத்திருக்க மெல்ல எழுந்தாள் நயன தாரா. கால்கள் தடுமாறிய போதும் பிடிவாதமாக அவன் பார்வைக்காகக் காத்து நின்றாள்.

இந்தப் பாதிப்பு அவனிடமும் இருக்குமா? இத்தனை ஆண்டுகளாக அவனும் கனவு கண்டிருப்பானா? அவள் கனவு காணத் தொடங்கிய முதல் நாளிலிருந்து அவன் மாற வில்லை தான். ஆனால் அவள் மாறியிருக்கிறாளே! உயரமாய் வளர்ந்து, குண்டு உடல் மெலிந்து, இந்த மாற்றங்களை எல் லாம் அவன் கனவில் கண்டிருப்பானோ? இல்லாவிட்டால் அவளை எப்படி இனம் கண்டுபிடிப்பான்? இல்லை. கண்டுபி டித்தே ஆக வேண்டும். கடவுளே, முருகா! காப்பாற்று.

அவனிடம் பாதிப்பு இருக்கிறதா இல்லையா என்பதில் தான் அவளது உலகமே இயங்குவது போல உணர்ந்தாள் நயனதாரா. மூச்சைப் பிடித்தபடி, வைத்த கண் வாங்காமல் அவனையே பார்த்தபடி காத்திருந்தாள்.

ஆனால் அவன் அவளைப் பார்த்தால் அல்லவோ கண்டு கொள்வதும் மற்றதும்! அவனுக்குத்தான் அவன் அருகில் வந்து சூழும் யார் யாரையோ பார்த்து, இனிக்க, சிரிக்கப் பேசவே நேரம் சரியாக இருந்ததே!

பாரேன், என்னைப் பாரேன் என்று டெலிபதியில் மன தால் அழைத்தாள் நயனதாரா. யாரோ ஏதோ கூற, அதைச் சற்றுக் குனிந்து கேட்டு, தன் வெண்பல் வரிசை பளீரிட முறுவ லித்தபடியே திரும்பியவனின் பார்வை அவளிடம் நிலைத்தது.

அவன் முகம் மேலும் மலரவும், உள்ளும் புறமும் பூவாய் மலர அவளும் அவனது முறுவலைத் திருப்பினாள்.

அவன் அவளைத் தெரிந்து கொண்டு விட்டானே? இது பூலோகமே அல்ல. தேவலோகம். அவன் தேவேந்திரன். அவள் இந்திராணி.. சீ. தேவேந்திரன் அகலிகை விஷயத்தில் தப்பு செய்தவன், வேண்டாம். இது வைகுண்டம்! அவள் ராதை, அவன் கண்ணன்.. ஊகூம். இதுவும் சரியில்லை. கண் ணனுக்கு எத்தனையோ கோபிகைகள்! இது கைலாசம் தான். அவன் பிறப்பிறப்பிலாத தெய்வம், சிவம். அவள் சக்தி....



அவளது நெஞ்சுத் துடிப்பின் வேகத்தை மேலும் அதிக ரித்தபடி அவன் அவள் அருகே வந்தான். கையை நீட்டி. "ஆட வருகிறாயா, ராஜகுமாரி?" என்று ஆங்கிலத்தில் கேட்க வும் அவளுக்கு உலகமே மறந்து போயிற்று.

தனக்கு ஆடத் தெரியாது என்ற நினைவே இல்லாமல், அவனது நீட்டிய கையுள் தன் கையை வைத்து, உடல் சிலிர்த் தாள்.

ஹாலின் நடுவில், ஆடுகிறவர்களோடு கலந்து கொள்ள ஓர் எட்டு எடுத்து வைத்த பிறகே நிலை உணர்ந்தவளாகி, எனக்கு ஆடத் தெரியாதே என்று இதைக் கற்று வைக்கவில் லையே என்ற தவிப்புடன், தடுமாறி உரைத்தாள் நயனதாரா.

அவன் இலகுவாக முறுவலித்து, "அதனால் என்ன? கூடச் சேர்ந்து ஆட ஆட எளிதாகக் கற்றுக் கொள்ளலாம். அதிலும்... உன் போல நளினமான உடலமைப்பு உள்ளவர்க ளுக்கு இதைக் கற்றுக் கொள்வது மிகவும் சுலபம். கற்றுக் கொடுப்பதே சுகமும் கூட. அந்த பாக்கியம் எனக்குத் தருவா யில்லையா?" என்று அவன் குரலில் கொஞ்சலுடன் கேட்ட போது அவளுக்கு மறுக்கத் தோன்றவில்லை.

அவனிடம் பாராட்டைப் பெற்றுவிடும் பிடிவாதத்தோடு இருந்ததாலோ என்னவோ, கால் ஸ்டெப்ஸ் அவளுக்கு விரை விலேயே பிடிபட்டுப் போயிற்று. அடுத்து இடையில் அவனது கையின் சிறு சிறு அழுத்தங்கள் அவள் எந்தப் பக்கமாய்ச் செல்ல வேண்டும் என்பதை உணர்த்தி விட, விரைவிலே அவனோடு இணைந்து ஆடத் தொடங்கி விட்டாள் நயனதாரா.

ஒன்றுமட்டும் அவளுக்கு ஆச்சரியமாய் இருந்தது. பொதுவாக யாரும் தன்னைத் தொட்டுப் பேச அவள் அனும தித்தது இல்லை. தாயார் தவிர, உடனொத்த தோழிகளோடு கூட விளையாட்டாகத் தோள் அணைத்து, மடியில் சாய்ந்து என்று பழக அவளுக்குப் பிடிக்காது. கூடக் கொஞ்ச நேரம்

காத்து நின்றாலும் பரவாயில்லை என்று முடிந்த அளவு கூட்டம் இல்லாத பஸ்களில் தான் ஏறுவாள். அப்படியும், எப்போதாவது ஏதாவது இடிமாடுகள் மோதி விட்டால் கூசிப் போவாள்.

ஆனால் இன்று அவனது அருகாமையும், தொடுகையும் இயல்பு போல உணர்வது குறித்து உள்ளூர வியப்புடன் உவகையும் கொண்டாள்.

எல்லாம் அவன் உடையவன் என்பதால் அல்லவா?

இத்தனைக்கும் இன்னமும் அவனுடைய பெயர் கூட அவளுக்குத் தெரியாது; அவளது பெயர் அவனுக்குத் தெரிந்திருக்கவும் வழி இல்லை என்பதை எண்ணும் போது சிரிப்பும் வந்தது.

ஆனால் இதுதானே இயற்கையின் ரசவாதம்? அன்றேக்கே அந்த ஸ்ரீராமனும் சீதையும் ஒருவரை ஒருவர் அவர் இன்னார் என்று அறிந்து கொண்ட பிறகா காதலித்தார்கள்? அண்ணலும் நோக்க அவளும் நோக்க என்று வெறும் ஒரு பார்வையில் அல்லவா 'இருவரும் மாறிப்புக்கு இதயம் எய்தி' மனம் பறி கொடுத்தார்கள்!

உள்ளங்கள் ஒன்றுபட்ட பிறகு ஊராவது, பேராவது? எல்லாம் முக்கியத்துவம் இழந்து ஒன்றுமில்லாமல் போய் விடுகின்றனவே!

இசை மாறி ஒலிக்கவும், அங்கே ஆடிக் கொண்டிருந்த மற்ற ஜோடிகளைப் போல அவளும் அவனோடு பின்னிப் பிணைந்து ஆடத் தொடங்கினாள்.

ஆடும்போது ஒருதரம் அனிதாவும் அவளுடைய வருங்காலக் கணவனும் நயனதாராவின் அருகில் வந்தனர்.

தோழியைக் கவனித்து விட்டு, வியப்பும் மகிழ்ச்சியுமாக அனிதா ஏதோ சொல்ல வாயெடுத்தாள்.



ஆனால் நயனதாராவுக்கு, அவளோடு கூட ஆடியவனின் முகம் தவிர வேறு எதுவும் கண்ணில் படாது போனதோடு, அனிதாவுடைய வருங்கால வாழ்க்கைத் துணையும் அவள் காதில் ஏதோ சொல்லத் தொடங்கவும் அனிதா சொல்ல வந்தது சொல்லப்படாமலே நின்று போயிற்று.

ஆட்ட வேகத்தில் இரு ஜோடியினரும் விலகியும் போய் விட்டனர்.

அந்த ஆட்டத்தின் முடிவில் அவளை ஓர் ஓரமாக அழைத்துச் சென்றான் அவன்.

வேகத்துடன் இடையிட்ட ஒரு ஜோடியின் மேல் இடித்து விடாமல் அவசரமாக அவள் ஒதுங்கிய போது சேலையின் உள் முனையின் சரிகை கால் கொலுசில் மாட்டிக் கொள்ளவே, சற்று ஒதுங்கிச் சென்று குனிந்து, சரிகை இழை அறுந்து விடாமல் கொலுசிலிருந்து சேலையை விலக்கலானாள்.

அருகில் கிடந்த நாற்காலியில் அமர்ந்து, அவனும் குனிந்து, ''லுக் இந்த ஆட்டம் நள்ளிரவு தாண்டியும் நடக்கும். அதுவரை இங்கேயே இருந்தாக வேண்டும் என்று ஒன்றும் இல்லையே'' என்றான் குரலில் ஒரு வேகத்துடன்.

'இல்லை' என்று தலையாட்டினாள் அவள். நள்ளிரவு வரை இங்கே இருந்தால் தாயார் கதிகலங்கிப் போவாள் என்பது கூட அப்போது நயனதாராவின் கவனத்துக்கு வரவில்லை.

இங்கே இத்தனை பேர் நடுவில் நின்று ஆடிக் கொண்டு இருப்பதை விட, இவர்கள் இருவருமாக மட்டுமாய் எங்காவது அமர்ந்து பேசலாமே. இங்கேயே 'லாபி'யில், அல்லது ஏதாவது பார்க்கில், ஏன், பீச்சுக்குக் கூடப் போகலாம். அங்கே கொஞ்ச நேரம் பேசிக் கொண்டு இருந்து விட்டு வீடு திரும்பலாம். பேசுவதற்குத்தான் எத்தனையோ, எத்தனை யுகத்து சமாசாரங்களோ இருக்கின்றனவே! இனியேனும் இருவரும் ஒருவரை ஒருவர் முதலில் அடுத்தவர் பெயரையாவது

அறிந்து கொள்ளத் தொடங்கலாம் என்று நினைக்கையில் அவளுக்கு உள்ளூரச் சிரிப்பு வந்தது. இதழ்களில் புன்னகையுடன் குனிந்து சேலை சரிகையை விடுவிக்கும் முயற்சியைத் தொடர்ந்தாள்.

''கவனி, இங்கே வந்தோம் என்று பேர் பண்ணி ஆயிற்று. இனி நாம் சென்றால் யாரும் கவனிக்க மாட்டார்கள். இருவரும் நைசாக நழுவி விடலாம். எங்கே போகலாம்... **உன்** இடத்தில் வசதியாக இருக்குமோ? அல்லது, இப்போது எனக்குச் சோழாவில் ரூம் இருக்கிறது. அங்கேயே போய் விடுவோமா? அதுதான் மேல். எனக்கு இரண்டு ஃபோன் கால் வேறு போட வேண்டும். அதனால் என் அறைக்கே போய் விடலாம். நீ காலையில் போனால் போதுமில்லையா?'' என்று எழுந்தான் அவன்.

சற்று நேரம் நயனதாராவின் மூச்சு நின்று போயிற்று. யாரோ கூடைத்தணலைக் கொண்டு வந்து அவள் தலையில் கொட்டினார்கள்! நெருப்பு ஆற்றில் இறக்கி முக்குளிக்கச் செய்தார்கள்! பொறி பறக்கும் கனல் மேல் நடக்க வைத்தார்கள்! தீ.தீ.தீ உள்ளும் புறமுமாய் அவள் உடம்பு முழுவதும் நெருப்பு பற்றிக் கொண்டது.

குனிந்து கொலுசில் மாட்டியிருந்த இழைகளைப் பிரித்து விட்டுக் கொண்டு இருந்ததால் நயனதாராவின் முகம் அவனுக்குத் தெரிய வாய்ப்பில்லை.

அதனாலேயே அவளால் பதில் சொல்ல முடியவில்லை என்பதையும் அவன் உணர்ந்தானில்லை.

அவளது பேச்சிழந்த நிலையை, மவுனமே சம்மதம் என்பதாகக் கொண்டு, ''ரொம்பவும் சிக்கிக் கொண்டு விட்டதாம்மா? நேரம் ஆகும் போல் இருக்கிறதா? பரவாயில்லை. அந்த நேரத்தை இன்னொரு விதமாய்ப் பயன்படுத்திக் கொண்டு விடலாம். கீழே கார் பார்க்கிங் தெரியுமல்லவா? அங்கே காரை எடுக்கச் சில சமயங்களில் நேரம் பிடிக்கும். நான் போய்க் காரை எடுக்கிறேன். நீ இந்த வேலையை முடித்துக் கொண்டு கீழே வந்து விட்டாயானால் உடனே கிளம்பி விடலாம். என்னுடையது கிரே கலர் கார். பென்ஸ். ஆந்திரா ரிஜிஸ்ட்ரேஷன், நம்பர் சொன்னால் நினைவு இருக்குமா? அல்லது.. இருக்கட்டும்.. நான் கீழே நீ வரும் வழியைக் கவனித்துக் கொண்டே இருக்கிறேன். சரிதானா? முடிந்த அளவு சீக்கிரம் வா'' என்றவன் ஒற்றை விரலால் அவள் தலையை வருடிவிட்டு அங்கிருந்து சென்றான்.



விலகிச் செல்லும் அவனது முதுகுப்புறத்தை வெறித்தவளுக்கு 'ஹோ'வென்று நெஞ்சை அடைத்துக் கொண்டு வந்தது.

சொகுசாக வான மண்டலத்தில் புஷ்பக விமானத்தில் பறந்து கொண்டிருந்தவளை யாரோ பிடித்து தள்ளி விட்டாற் போலவும், சுய உணர்வுடனேயே கீழே விழுந்து கிடந்து துடிப்பது போலவும் உணர்ந்தாள் அவள்.

வலி! வேதனை! அவமானம்!!

எல்லாம் ஒருசேரத் தாக்க, தொண்டை வலித்து, நாசி விடைத்துக் கண் கரித்தது. சீச்சி இத்தனை பேர் முன் அழுது அந்த அவமானமும் சேர வேண்டுமா?

பெரு முயற்சி செய்து சமாளித்து, எழுந்த போதுதான், இன்னமும் கொலுசில் சிக்கியிருந்த ஜரிகை நினைவு வந்தது.

இது அறுந்து போகாமல் நீக்குவதா வேலை? இங்கே வாழ்க்கையின் ஆதாரமே அறுந்து விட்டது!

சட்டெனச் சேலையை முரட்டுத்தனமாக இழுத்தாள். சரிகையோடு, சேலையும் கிழிந்தது தெரிந்தது. போய்த் தொலையட்டும் எப்படியும் இந்தச் சேலையை அவள் இனிக் கட்டப் போவது கிடையாது.

முதலில் இங்கிருந்து போயாக வேண்டும் என்று மடமடவென்று அந்த அறையிலிருந்து வெளியேறியவள் திகைத்தாள்.

அங்கே அவன் காரோடு நிற்பானே!

'உன்னோடு வர முடியாது' என்று மறுத்து விட்டு அவளால் செல்ல முடியாது என்று இல்லை. ஆனால் அவன் முகத்தைப் பார்த்துப் பேசுவதே வெறுப்பாயிருந்தது. மிகுந்த வேதனையாகவும் தான்.

இதைத் தவிர்ப்பது எப்படி என்று யோசித்தாள். அவன் இன்னமும் பெயர் தெரியாத அந்தப் பெரிய மனிதன் இப்போது 'கார் பார்க்கிங்'கில் இருப்பான். அது அடித்தளம். இவள் ஆட்டோவில் வந்த வழியே நடந்து சென்றால் கார் நிறுத்துமிடத்தைத் தவிர்த்து விடலாம். ஆனால் ஒருவேளை அவன் காரை எடுத்துக் கொண்டு வாயில் பகுதிக்கு வந்து விட்டான் என்றால் அது நடக்காத காரியம்.

இப்படியே நிற்பது சரியென்று படவில்லை.

'இங்கே ஏனம்மா நிற்கிறாய்?' என்று ஓட்டல் பணியாளர்கள் கேட்கக் கூடும். அல்லது அவனே கூட, சற்று நேரம் காத்திருந்து பார்த்து விட்டு மீண்டும் அவளைத் தேடி அங்கேயே வந்து விடக்கூடும்.

எல்லாம் தொல்லையே.

பெரிய வேதனை உள்ளே கரித்துக் கொண்டிருக்க, அதை முடிந்த அளவு ஒதுக்கி, சின்னச் சின்ன விஷயங்களைத் தேடிப் பிடித்து எரிச்சல்பட்டுக் கொண்டிருந்தாள் நயனதாரா.

செய்த பாவத்துக்கு ஒரு சிறு பிராயச்சித்தம் செய்பவன் போல நயனதாராவின் இந்தச் சங்கடத்தை அந்தப் பெயரில்லாப் பெரிய மனிதனே தீர்த்து வைத்தான்.

அவள் செய்வது அறியாமல் பார்த்துக் கொண்டு இருக்கையிலேயே, கிரே கலர் பென்ஸ் கார் ஒன்று வாயிலைத் தாண்டி வெளியே வந்து ஓரமாய்த் திரும்பி நின்றது.

காரிலிருந்து இறங்கி தாஜின் வாயில் பகுதியைப் பார்த்தபடி சில நிமிடங்கள் நின்றான் அவன்.



பொறுமைக்கும் அவனுக்கும் நல்ல வேளையாக, மிகவும் தூரம் போலும்.

கையைத் திருப்பிக் கைக்கடிகாரத்தில் மணி பார்த்தவன் மீண்டும் கார் பார்க்கிங் வழியாக உள்ளே சென்றான்.

அங்கேதானே வரச் சொன்னான்; வழியிலேயே எதிர்கொண்டு விடலாம் என்ற எண்ணம் போலும்! தொலையட்டும் என்று நினைத்தாள் நயனதாரா.

ஆனால் நினைக்குமுன் கண்ணீர் வந்தது.

கைக்குட்டையால் கண்ணை ஒற்றிக் கொண்டு அவசரமாக இறங்கி வந்தாள்.

நல்லவேளையாக ஓட்டல் வாயிலைத் தாண்டும் போதே ஒரு காலி ஆட்டோ வந்தது.

ஏறிச் செல்லுமிடம் சொல்லிப் பின்புறம் சாய்ந்த பிறகுதான், கண்ணிழந்தான் பெற்றிழந்தான் போல அவளது இழப்பின் அளவை முழுமையாக உணரத் தொடங்கினாள்.

எத்..த்தனை ஆண்டுத் தவம்? எந்த வயதில் இருந்து இதே நினைப்பு! வெளியே சொன்னால் சிரிப்பார்களோ, அல்லது திட்டுவார்களோ என்று உள்ளேயே பூட்டி வைத்துப் புதையலாகப் பாதுகாத்தேனே! புதையலைத் திறந்தால் பாம்பும் தேளுமல்லவா வெளிவருகிறது. வந்து கடிக்க வேறு செய்கிறது.

அப்பா பத்திரப்படுத்தி வைத்திருந்த பழைய ஸ்ரீவள்ளி காசட்டை எத்தனை தரம் யாருமில்லாத போது போட்டுப் பார்த்திருக்கிறாள்! அதில் வள்ளி சிறு வயதிலிருந்தே முருகனையே கணவனாக நினைத்து உறுதியோடு வளர்ந்து, அந்த முருகனையே கைப்பிடிப்பதைப் பார்த்து எத்தனை தடவை மனம் தேறியிருக்கிறாள்!

ஆக அத்தனையும் வீண்!

அவன் அவளை என்னவாக எண்ணி விட்டான்!

கண்டதே கோலமாய் வாழும் பட்டாம்பூச்சியாக? அல்லது காசுக்காக உடலை விற்கும் கடைநிலைப் பெண்ணாக?

இவனுக்காகவா ஏங்கினேன்?

ஐயோ! ஐயோ என்று கதறியது மனம்.

மற்ற உணர்வுகள் அத்தனையும் மரத்துப் போய் இதே வேதனையில் உழன்றபடி கண்மூடி அமர்ந்திருந்தாள் நயனதாரா. அந்த ஆட்டோ டிரைவர், இன்னோர், ஆட்டோசங்கராக இருந்து அவளை எங்கேனும் கொண்டு போய்க் கொன்று போட்டிருந்தால் அவள் அதைக் கூடக் கடைசிவரை உணர்ந்திருக்க மாட்டாள்.

அப்படி ஒரு தவிப்பு!

மெய்யாகவே ஆட்டோ டிரைவர் குரல் கொடுக்கும் வரை, ஆட்டோ வீட்டின் முன் நின்று விட்டதை அவள் அறியவே இல்லை.

ஆட்டோ டிரைவரின் குரலில் கண் திறந்தவளுக்கு முதலில் ஒன்றுமே புரியவில்லை.

''தூங்கிட்டியாம்மா? அல்லது உடம்பு கிடம்பு சரியில்லையா? நீ சொன்ன ஊடு வந்தாச்சே'' என்று சற்று வயசாளியான அவர், சற்று அக்கறையோடு நோக்கவும், சமாளித்துக் கொண்டு இறங்கினாள்.

ஆட்டோவுக்குப் பணத்தைக் கொடுத்து விட்டு திரும்பும் போதே வீட்டுக்கதவு திறந்தது.

''நயனிதானே.. வா வா மணி ஒன்பதரை ஆகிறது. இன்னும் காணோமே என்று இப்போதுதான் அப்பாவிடம் சொல்லிக் கொண்டிருந்தேன்'' என்று மகளை வரவேற்றாள் தாயார்.

ஒன்பதரை! மணி ஒன்பதரை தானா? வீட்டை விட்டுக் கிளம்பி மூன்று மணி நேரம் கூட ஆகவில்லை, அதற்குள் அவளது உலகமே அழிந்து போய் விட்டதே!



உள்ளே வந்த மகளை விளக்கொளியில் பார்த்து விட்டு, ''என்னடா, கண்ணு? ஏன் முகம் ஒரு மாதிரி இருக்கிறது?'' என்று கவலையுடன் விசாரித்தாள் கவுசல்யா.

பளிங்குபோல், அகத்தைக் காட்டி இந்த முகம் வேறு துரோகம் செய்ய வேண்டுமா?

உள்ளூர நொந்து கொண்டபடி, ''தலைவலி அம்மா.. அங்கே.. அங்கே ஒரேடியடியாய் லைட் போட்டு அலங்காரம் செய்திருந்தார்களா.. கண் கூசி.. தலைவலி வந்து விட்டது'' என்று உள்ளே சென்றாள் மகள்.

அவளுக்குத் தனிமை வேண்டும். கட்டிலில் குப்புற விழுந்து ஒரு மூச்சு அழ வேண்டும். கதற வேண்டும். கண்ணீர் சொரிய வேண்டும்.

ஆனால் இந்த வீட்டில் அது எப்படி முடியும்? இந்த அறையில் விம்மினால் அடுத்த அறைக்குக் கேளாதிராது. அடுத்த அறைக்குப் போனால் அருகே அப்பாவின் ஆபீஸ் அறை. மாடிக்குப் போனாலோ, நயனதாராவின் அறை அவள் தங்கைக்கும் பொது. இரவு படுத்தபிறகாவது பாரம்தீர அழலாம் என்றால் அப்போதும் தனிமைக்கு வழியில்லை. யாரும் எப்படியும் போகிறார்கள் என்று அழுதாலோ எல்லோருமே என்ன என்ன என்று வந்து விடுவார்கள். பாசம்தான். பரிவுதான். ஆனால் அதுவும் பெரும் தொல்லையாகவே தோன்றியது.

எதிர்பாராமல் இருந்த இந்தப் பெரிய இடியை அவளால் அடியோடு மறைத்து சாதாரணமாக இயங்கவும் முடியவில்லை.

''தலை ரொம்ப வலிக்கிறதா, கண்ணா?'' என்று தாயார் பரிவோடு நெற்றியைத் தொட்டுப் பார்க்கவும் எவ்வளவோ முயன்றும் அவளை மீறி உடைந்து போனாள்.

ஆதரவு தேடும் கொடியாக அன்னை மீது சாய்ந்து அவள் விசிக்கவும் பெற்றவள் மிகவும் பதறிப் போனாள். ''என்

னம்மா? என்ன செல்லம், அப்படியாம்மா வலிக்கிறது? காய்ச்சல் கீய்ச்சல் வரப் போகிறதோ என்னவோ தெரியவில்லையே. பேசாமல் போய்ப் படுத்துக் கொள்ளும்மா. நான் பால் சூடு பண்ணித் தருகிறேன். ஒரு ஆஸ்பரின் போட்டுக் கொண்டு தூங்கிவிடு. சரியாகவில்லை என்றால் காலையில் டாக்டரிடம் போகலாம். வாடா கண்ணு, நர்மதா, அக்காவைக் கூட்டிப் போய்ப் படுக்கவைம்மா'' என்று சின்ன மகளை ஏவினாள்.

தோளில் புதைத்த தலை தூக்காமல், கழுத்தைக் கட்டிய படி மகள் அசையாமல் நிற்கவும், ''சரி, சரி! நரூக்குட்டி.. நீ பாலைச் சூடு பண்ணி எடுத்து வா. நான் அக்காவைப் படுக்க வைக்கிறேன்'' என்று மூத்த மகளை அழைத்துச் சென்றாள்.

ஆனால் தாயின் சொல்படி படுத்து உறங்குவதற்கு சம்மதிக்கவில்லை. அவளுக்குக் குளிக்க வேண்டியிருந்தது. அவனோடு ஒட்டி ஒட்டி ஆடினாளே. அவன் என்ன நினைத்து அவளை அப்படி அணைத்து ஆடினான் என்று தெரிந்து விட்டதால் அவனது மேனி பட்ட இடமெல்லாம் தண்ணீர் விட்டுத் தேய்த்துக் கழுவ வேண்டியிருந்தது... கடைசியாக ஒரு விரலால் தலையைக் கூடத் தொட்டானில்லையா?''

கவுசல்யா என்ன தடுத்தும் பிடிவாதமாய்க் குளிக்கப் போனாள். ''அது மூடிய அறை அம்மா. சிகரெட் புகை, நிறையப் பேர் இருந்ததால் மூச்சுக்காற்று எல்லாம் சேர்ந்து வந்த தலைவலி. குளிரக் குளிரத் தண்ணீர் ஊற்றினாலே சரியாகி விடும்'' என்றபடி டவல், துணிமணிகளை எடுத்தாள்.

''தலையையாவது நனையாமல் பார்த்துக் கொள். கம்மாவே சத்தம் ஙஞனநமன போடுகிறது'' என்று உடம்பு கழுவும் அளவுக்கு விட்டுக் கொடுத்தாள் கவுசல்யா, வேறு வழியில்லாமல்.

''ம்ம்.. பாலை நானே குடித்துக் கொள்கிறேன். நீங்கள் தூங்கப் போங்கம்மா. நர்மதாவையும் படுக்கச் சொல்லுங்



கள். நான் குளித்து விட்டு வந்து பால் குடித்து விட்டுப் படுத்துக் கொள்கிறேன்'' என்று நல்லதனமாகவே பேசித் தாயாரை அனுப்பி விட்டுக் குளியல் அறைக்குள் புகுந்தாள் நயனதாரா.

அன்னையின் பேச்சை அடியோடு மறந்து, தலையை விரித்துப் போட்டு 'ஷாம்பூ' தேய்த்தாள். உடம்பு முழுவதும் சோப்பிட்டு பரபரவென்று பலமுறை தேய்த்துக் குளித்தாள். குளிக்கக் குளிக்க எதனால் அப்படிக் குளிக்கிறோம் என்ற எண்ணம் வர அழுது கொண்டே குளித்தாள்.

அவள் வெகு நேரம் குளித்திருக்க வேண்டும் மேலே தொட்டித் தண்ணீர் முழுவதும் காலியாகி, ஷவரில் நீர் விழுவது நின்றதும், தன் போக்கில் அவளது கை குழாயை மூடிய போது அவளுக்குக் குளிரில் வெடவெடக்கத் தொடங்கியிருந்தது.

தண்ணீர் போகத் தலை துவட்டி உடம்பு துடைக்க வேண்டும் என்று ஒருதரம் தோன்றிய போதும் அதைச் செயலாக்கும் அளவுக்கு அது பெரிதாகத் தோன்றவில்லை.

உள்ளே அரித்த பெரும் துக்கத்தில், வெடவெடக்கும் குளிரோ, ஈரமோ மனதில் எதுவும் படவில்லை.

கையோடு கொண்டு போயிருந்த நைட்டியை ஈர உடலிலேயே அணிந்து கொண்டு வந்து படுக்கையில் சாய்ந்தாள்.

## 4

வற்றாத ஜீவநதி போலக் கண்ணீர் மட்டும் பொங்கிக் கொண்டே இருந்தது.

அவளுடைய ராஜகுமாரனா? அவளை வெறும் ஓர் இரவுக்கா அழைத்தான்?

அவனைத் தன் ராமனாக எண்ணினாளே, அவன் அவளைச் சீதையாக நினைக்க வேண்டாம். ஒரு குடும்பத்துப் பெண்ணாகக் கூட எண்ணவில்லையே!

பல ஆண்டுகளாக மனதில் போற்றி வளர்த்திருந்த நம்பிக்கை இப்போது அஸ்திவாரம் இல்லாத கட்டிடம் போல் அவள் மீதே இடிந்து விழுந்த விதம் யாரோ நெருங்கிய உறவினரை அல்ல, பெற்ற தாயையே இழந்து விட்ட உணர்வு.

எண்ணும்போதே நெஞ்சு திக்கென்று விட, ஓங்கித் தன் தலையிலேயே ஒன்று போட்டுக் கொண்டாள் நயனதாரா.

தகுதியற்ற ஒருவனை இழந்ததைப் போய்த் தாயை இழப்பது போல என்றா எண்ணுவது என்று அதற்கும் அழுகைதான் வந்தது.

அழுது அழுது அழுதபடியே, ஒருவாறு அவளையும் மீறி இமைகள் மூடிய போது அவளுக்கு உடம்புச் சூடு மிகவும் ஏறிவிட்டிருந்தது.

**நா**லுநாள் காய்ச்சலில் நயனதாரா மிகவும் சோர்ந்து விட்டிருந்தாள். ஓரளவு மெலிந்துமிருந்தாள். இரண்டையும் விட, மகளின் கண்களில் இருந்த சோகமே தாயை உலுக்கியது.

திருமண விஷயத்தில் தன் பேச்சைக் கேட்கவில்லை என்று மகளை வறுத்தெடுத்துக் கொண்டு இருந்தவள், அந்த நினைவே மறந்து, ''என்னடா கண்ணு, அன்று கெட்டது ஏதும் நடந்ததா? எப்போதும் வருத்தமாய்த் தெரிகிறாயே'' என்று உருகியபடியே, மகள் படுத்திருந்த கட்டிலிலேயே அமர்ந்து, முன்னுச்சி மயிர்ச்சுருளை மிருதுவாய் ஒதுக்கி விட்டாள்.

நயனத்தாராவுக்கும் அப்போது தாயின் பரிவு மிகவும் தேவைப்பட்டது. தலையணையிலிருந்து தலையைத் தூக்கித் தாயின் மடியில் புதைத்து அப்படியே இடுப்பைக் கட்டிக் கொண்டு கிடந்தாள்.



மகளின் முதுகை ஆதரவாய் வருடியபடி, ''சொல்லும்மா, அம்மாவிடம் சொன்னால் மனது ஆறுமில்லையா? அதனால் தான் கேட்கிறேன்'' என்றாள் கவுசல்யா.

பதில் கிடைக்கும் வரை தாயார் திருப்தியுற மாட்டாள். ஆனால் அவளது சொந்த முட்டாள்தனத்தை என்னவென்று விளக்குவது? சொல்லப் போனால் இந்த வேதனையும் முட்டாள்தனம்தான். முட்டாளின் சொர்க்கத்தில் மகிழ்ந்தது போலவே தான் அங்கிருந்து முட்டாளின் நரகத்தில் விழுந்து உழல்வதும். ஆனால் அதையே இன்னொருவர் - பெற்ற தாய் என்றாலும் வார்த்தை வடிவம் கொடுத்துச் சொன்னால் அதையும் அவளால் தாங்க முடியாது தான்.

சற்று யோசித்து, ''ஏழெட்டு வருடங்களுக்கு முன் பார்த்த ஒரு... ஒரு சினேகிதி செத்துப் போய் விட்டாள் என்று தெரிந்து கொண்டேன் அம்மா...'' என்றாள் மெல்லிய குரலில்.

''யா...ர்..?'' என்று தாயார் யோசிக்கவும், ''உங்களுக்குத் தெரியாது, அம்மா.. தாத்தா வீட்டுக்குப் போன போது பழக்கம்.. அந்த நினைவில் தான் நான் ஆண்டுதோறும் அங்கே போவதே.. இப்போது இல்லை என்று ஆனதும் மனதுக்கு மிகவும்...'' என்று முடிக்குமுன் மீண்டும் தொண்டை அடைத்தது.

தாய் புரிந்துகொள்ளும்படியாக மேலே மேலே யோசித்து, உண்மையை ஒருவிதமாய்க் கூறியவளுக்கு மீண்டும் கண்ணீர் பெருகியது.

நயனதாரா அழுவதை உணர்ந்து, ''ஷ்.. அதற்காக இப்படியா அழுது அழுது உடம்பைக் கெடுத்துக் கொள்வது? வருத்தம் தான். வேதனைதான். ஆனால் கடவுள் இன்னாருக்கு இன்னபடி என்று பிறக்கும் போதே எழுதி விடுகிறார் என்று உன் பாட்டி சொல்வார்கள். நாம் என்ன முயன்றாலும் அது தான் நயனி, நடக்கும். பார், இன்றுவரையும் எந்த டாக்டராலும் போன உயிரைத் திருப்பிக் கொண்டு வர முடிந்ததா?

போய் விட்ட ஒன்றுக்காக வருத்தப்படாமல் இருக்க முடியாது தான். ஆனால் அதையே நினைத்து உடம்பைக் கெடுத்துக் கொள்வது சரியில்லை. கண்ணு'' என்று இதமாக அறிவுரை கூறி மகளை ஆறுதல்படுத்தினாள் கவுசல்யா.

நயனதாராவுக்கும் உள்ளூர ஏதோ ஒரு தெளிவு உண்டா னது போல தோன்றியது. இருக்கும் ஒன்று மறைவதற்கே உடம்பைக் கெடுத்துக் கொள்வது மதியீனம் என்கிறாள் தாயார். என்றுமே இல்லாத, அவளது கற்பனையில் மட்டும் இருந்த ஒன்று, அது இல்லை என்று தெரிந்து கொண்டதற்காக அழுது காய்ச்சலை இழுத்துக் கொண்டது எவ்வளவு அறிவற்ற செயல்!

நெஞ்சின் தெளிவு உடலில் பிரதிபலிக்க, மூன்றாம் நாள் அலுவலகத்துக்குக் கிளம்பி விட்டாள் நயனதாரா.

பழைய துள்ளலோடு என்று சொல்ல முடியாது. ஆனால் ஒரு திடத்துடன் என்று சொல்லலாம்.

அலுவலகத்துக்குள் சென்றதும் பலவித விசாரிப்புகள். அனாவசியமாய் லீவு எடுக்காதவள் என்பதால், 'சிக்' லீவை யாரும் சந்தேகப்படாமல், 'என்னம்மா, ஜுரமா, வைரஸா'? என்று ஆளாளுக்கு, ஏற்கனவே வந்தவர்களும், அடுத்து வர வர மற்றவர்களும் விசாரித்தார்கள்.

''இப்போது போய் லீவு போட்டாயே, நயனாம்மா, உன் னைப் புது எம்.டி. கேட்டாராம்'' என்றார் தலைமைக் கணக்கர்.

வந்ததும் வராததுமாக, இவள் அதிகமாய் லீவு எடுக்கிற பெண் என்ற எண்ணமல்லவா உருவாகியிருக்கும் என்று கொஞ்சம் கஷ்டமாக இருந்தது அவளுக்கு. ஆனால் இதில் இப்போதைக்கு ஒன்றும் செய்வதற்கு இல்லை. நாட்கள் செல் லச் செல்ல அந்தத் தப்பு எண்ணம் தானாக நேராகிக் கொள்ள வேண்டியதுதான் என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள். கண்ட கனவில் காலத்தை வீணாக்கியவளுக்கு இப்படி ஒரு தண்டனை அவசியம் தானே?



தன் வழக்கமான பத்துமணியை விடச் சற்று சீக்கிரமா கவே வந்தார் நயனதாராவுடைய நேரடி அதிகாரியான உதவி மானேஜர்.

வந்ததும், நயனதாராவைப் பார்த்து, ''அப்பாடி இன்றா வது வந்தாயேம்மா, புது எம்.டி. சும்மா துளைத்தெடுத்துக் கொண்டு இருக்கிறார்.. அட, மறந்து விட்டேனே, உடம்பு நன்றாகி விட்டதில்லையா? கொஞ்சம் மெலிந்து தெரிகிறாய். டானிக் ஏதானும் சாப்பிட்டுச் சரி செய்து கொள். முதலில் வா.. எம்.டி.யைப் பார்த்து விட்டு வரலாம்...'' என்று பரபரத்தார்.

வந்ததும் வராததுமாகச் சிங்கத்தை அதன் குகையி லேயே சந்தித்தாக வேண்டுமா என்று எண்ணியவளுக்கு இன் னொன்று உறைத்தது. ''எம்.டி. இங்கே இல்லையே சார்? நான் ஒன்பதரையிலிருந்து இருக்கிறேன். அவர் வந்தமாதிரி இல் லையே?'' என்றாள்.

''அம்மாடியோவ்! பிள்ளையாண்டான் வேறு தினு சம்மா. வேலை என்றால் அவருக்கு நேரம் காலம் கிடையா தாம். எட்டு எட்டரைக்கெல்லாம் வந்து, ஒரு கம்ப்யூட்டரோடு மாரடி.. அப்படிச் சொல்லக் கூடாது. கம்ப்யூட்டரை வைத்துக் கொண்டு ஏதோ வேலை செய்கிறார். அதுதான் உன்னைத் தேடிய காரணமும். நம் ஆபீசில் கம்ப்யூட்டர் விவகாரம் தெரிந்த ஒரே ஆள் நீதானே. அவர் அப்பாவின் செகரட்டரிக்கு இது தெரியாது என்பதால் வேறே இடத்துக்கு மாற்றப் போகி றாராம் இரு...'' என்று டெலிஃபோனை எடுத்துப் பேசினார்.

ஒன்றுமில்லை என்று ஒதுக்க மாட்டாமல் மீண்டும் தொண்டை அடைத்தது அவளுக்கு. அவளுடைய ராஜகுமார னுக்கு ஏற்றவளாக இருக்க வேண்டும் என்று அவள் பெருக் கிக் கொண்ட தகுதிகளில் ஒன்றுதான் இதுவும். கல்லூரிப் படிப்பின் போதே, ஃபினிஷிங் ஸ்கூல், நாட்டியம், கம்ப்யூட் டர் என்று ஓய்வின்றிப் பயின்றவை. ஆனால் எல்லாம் வீண். எத்தகைய விரயம்! சக தோழிகள் ஏன், தங்கை நர்மதா கூட

சினிமா, விளையாட்டு, குறைந்தபட்சம் ஸ்டார் டி.வி. என்று குதூகலமாகப் பொழுது போக்கிய போதெல்லாம் விழுந்து விழுந்து உழைத்துப் படித்தது! எவ்வளவு பெரிய சுயமறுப்பு!

''அப்படியானால் நீயே போய் விடுகிறாயாம்மா?''

''எ...என்ன சார்?'' அவருடைய பேச்சின் முதல் பகுதியைத் தன் விசாரத்தில் கவனியாது போனதால் அவளுக்கு மீண்டும் கேட்க வேண்டியதாயிற்று.

காரணத்தைத் தவறாக ஊகித்து, ''பயப்பட வேண்டாம், நயனதாரா. புது எம்.டி. அப்படி ஒன்றும் மோசம் இல்லை. தைரியமாகப் போ. நானும் கூட வர வேண்டிய அவசியம் இல்லை என்று அவர் சொல்லி விட்டதால் நானும் கூட வருவது சரியில்லை. பார்...'' என்று அவளுக்குத் தெம்பூட்டி அனுப்பினார் அவர்.

நயனதாராவும் அப்படி ஒன்றும் பயந்த ரகம் இல்லை என்பதால் சாதாரணமாகவே சென்றாள். எம்.டி.யின் கதவைத் தட்டி விட்டு, உள்ளே சென்ற போது ''உட்காரலாம்'' என்று பக்கவாட்டு, ஃபைல்கள் அறையிலிருந்து குரல் வந்தது.

உத்திரவுக்குப் பணிந்து உட்காரச் சென்றவளுக்கு அந்தக் குரல் ஏனோ உறுத்தியது. திரும்பிப் பார்த்தவள் திகைத்துப் போனாள்.

ஏனெனில் புது எம்.டி.யாக அங்கே நின்றவன் அவளுடைய ராஜகுமாரன்!.. இல்லையில்லை. மாஜிராஜகுமாரன்.

## 5

ஏன்னவோ, கடவுள் கொஞ்சம் அநியாயக்காரர் போல நயனதாராவுக்கு தோன்றியது. இவனைப் பார்க்க வேண்டும் என்று ஏங்கி, பார்க்கவே முடியாமல் போய்விடக் கூடுமோ என்று அவள் கலங்கிய காலம் ஒன்று உண்டு. அப்போது கண்டு கொள்ளாமல் சும்மா உட்கார்ந்திருந்த கடவுள், இனி அவனைப் பார்க்கும்படியாக நேராமலே இருந்துவிட வேண்டும் என்று அவள் வேண்டுகிற இந்த நேரத்தில் மீண்டும் கண் முன்னே கொண்டு வந்து நிறுத்துகிறாரே- அதுவும் அவளுக்கு முதலாளியாக.



எட்டு நாள் முன் அவனைப் பார்த்ததும் பிரிந்ததும் துல்லியமாக மனத்திரையில் ஓடியது.

இப்போதும் சட்டெனத் திரும்பி அறையைவிட்டு வெளியே ஓடிவிடலாமா என்றும் தோன்றியது. ஆனால் அப்படிச் சென்றால் வெளியே இருக்கும் மற்ற அலுவலகத்தினர் என்ன என்ன என்பார்கள், அவர்களிடம் என்னவென்று விளக்குவது?

அல்லது இவனே வெளியேறச் சொல்லி விடுவானோ? ஆனால் இவனும்தான் அதற்கு என்னவென்று காரணம் மற்றவர்களிடம் காட்டுவான்?

அவனுக்கும் அவளை அங்கே கண்டதில் வியப்புதான் என்று நன்றாகவே! தெரிந்தது. ஆனால் விரைவிலேயே சமாளித்துக் கொண்டான்.

''உட்காரச் சொன்னேன்'' என்றவன் மேசையின் பின் அவனது சுழல் நாற்காலியில் சென்று அமர்ந்தான்.

மேஜைமேல் இருந்த ஃபைலைப் பிரித்து லேசாக நோட்டமிட்டான். நிமிர்ந்து, ''நயனதாரா. அழகான பெயர், பெயருக்கு உடையவளைப் போலவே'' என்று விமரிசித்தான். மீண்டும் ஃபைலை நோக்கி, ''நோட் பாட் கொண்டு வந்திருக்கிறாயா? குறித்துக் கொள். முதல் வேலையாக நம் அலுவலக ஊழியர் அத்தனை பேர் ஃபைலிலும் அவரவர் ஃபோட்டோ ஒன்று வைக்கப்பட வேண்டும்''. என்றான்.

அவள் குறுக்கெழுத்தில் குறித்துக் கொண்டதும், "ஃபோட்டோ வைக்கிற பழக்கம் இருந்திருந்தால், உன்னை அப்போதே கண்டுபிடித்திருப்பேன்'' என்று முறுவல் செய்தான்.

'கண்டுபிடித்து?'

வெறுப்புற்று, அவள் பேசாதிருக்கவும், சற்று நேரம் அவனையே பார்த்துவிட்டு, "அன்று எப்படிப் போனாய், நயனதாரா? ஏன் போனாய்?'' என்று கேட்டான்.

"கம்ப்யூட்டர் கோர்ஸ் எடுத்தவள் என்பதால் என்னை வரச் சொன்னீர்கள் என்று சொக்கலிங்கம் சார் சொன்னார்.'' என்றாள் அவள்.

"சொக்கலிங்கம்... அசிஸ்டன்ட் மானேஜர். உன் நேரடி மேல் அதிகாரி. அவர்தானே? கரெக்ட். ஆனால் இப்போது நான் கேட்டது அதுவல்ல. அன்று ஏன் அப்படி மறைந்தாய்? உன் பெயரும் தெரியாமல், நீ போன விதமும் புரியாமல், உன்னைப் பற்றி விசாரிக்கவும் வழியில்லாமல் திணறிப்போனேன். என்னைச் சரியாக முட்டாளடித்து விட்டாயே!''

என்னவோ, எல்லாம் ஒரு ஜோக் மாதிரி அவன் பேசியது அவளை உள்ளூர வருத்தியது. ஆனால் தாயின் பேச்சினால் விளைந்த மனத்தெளிவின் பயனாக அவளால் இன்னொரு விதமாகவும் யோசிக்க முடிந்தது.

அவளுக்கு அவன் ராஜகுமாரனாக இருக்கலாம். வாழ்நாள் முழுவதும் காத்திருக்குமளவு தகுதி வாய்ந்தவனாக இருக்கலாம். (அது தவறு என்றானது வேறு விஷயம்) ஆனால் அவனைப் பொறுத்தவரையில் அவளைப் பற்றிய எண்ணம் அவனுக்கு இல்லையே. அனிருத்தனைக் கனவில் கண்டு காதல் கொண்டு மணந்த உஷை, அன்னத்தின் வாயிலாக நளனைப் பற்றி அறிந்து தேவர்களையும் ஒதுக்கி அவனையே மணந்த தமயந்தி, வாளுக்கு மாலையிட்டு மணந்து,



அந்த நாயகனோடு சிதை ஏறிய ராஜபுத்திரப் பெண்கள் என்று தாத்தா வீட்டில் படித்த பழைய கதைகளின் பாதிப்பால் அவள் பைத்தியக்காரத்தனம் செய்தால் அதற்கு அவனா பொறுப்பு?

அவளைப் பற்றி அவனுக்குச் சற்றும் அந்தமாதிரி நினைவே இல்லை எனும்போது எப்படி அவனைத் தப்பு சொல்ல முடியும்?

அவன் பொம்பளை சிரித்தால் போச்சு என்று நினைக்கிற ரகமாயிருக்கும். எனவே அவள் சிரித்ததும் அவனுக்குத் தெரிந்த விதமாய் அர்த்தம் செய்து கொண்டான். வெள்ளத்தனைய 'மலர்நீட்டம். அவனுக்குத் தெரிந்தது அவ்வளவே.

இதற்குப் போய் அவனிடம் குற்றம் காண்பது பிழையல்லவா என்று எண்ணம் ஓடும்போதே நயனதாரா திடுக்கிட்டாள். தன்னை மகாக் கேவலமாக நினைத்த ஒருவனைப் போய் நியாயப்படுத்திக் கொண்டு இருக்கிறாளே!

ஒரு பெண் சிரித்தாலே அவளைக் கீழ்த்தரம் என்று எண்ணி விடுவதா? அப்படியானால் பெண்கள் எல்லோரும் உம்மணாமூஞ்சி - சிடுமூஞ்சி - கடுமூஞ்சிகளாகி விட வேண்டுமா என்று ஆத்திரமல்லவா வரவேண்டும்?

வந்தது. அவளைத் தவறாக எண்ண அவனுக்கு என்ன தைரியம்!

செய்ததும் செய்து விட்டுச் சிரிப்பு வேறா?

"வேறு வேலை இல்லாவிட்டால் நான் போகிறேன் சார். இந்தக் கடிதம் ரெடி பண்ணிக் கொண்டு வருகிறேன்'', என்று எழுந்தாள்.

"பொறு'' என்றவன் ஆராயும் விதமாய் அவளை நோக்கினான்.

அவள் தரையைப் பார்த்தபடி நிற்கவும், "இன்றிலிருந்து உன் வேலை மாறுகிறது. மிசஸ் சரோஜாவைக் கம்பெனி செகரட்டரியின் உதவிக்கு அனுப்பப் போகிறேன். அவர்களை

வேறு எங்கே அனுப்பினாலும் பதவி இறக்கம் செய்தது போல் ஆகிவிடும். சரோஜாவின் இடத்துக்கு, எம்.டி.யின் செகரட்டரியாக - அதாவது, என் காரியதரிசியாக நீ வரப் போகிறாய். உன் பழைய வேலைக்கு, டைப்பிங் பிரிவில் சீனியர் மோஸ்ட் யாரோ அவர்களை நியமிக்க வேண்டும். இந்த மூன்றுக்கும் தேவைப்படும் கடிதங்களையும் தயார் செய்து என் கையெழுத்துக்கு கொண்டுவா. இப்போதிலிருந்து உன் இடம் அதோ'' என்று அருகிலேயே புதிதாக பிளைவுட்டால் அமைக்கப்பட்டிருந்த சிறு கேபினைக் காட்டினான்.

அவன் அறையின் ஓர் ஓரப் பகுதிதான் அந்த கேபின். இதன் அர்த்தம், நாள் முழுவதும் இவன் அறையிலேயே உட்கார்ந்து வேலை செய்ய வேண்டும்.

அதுபிடிக்காமல், ''ஹாலில் எல்லோருடனும்.. என்று தொடங்குமுன், அவன் இடைமறித்தான். ''அங்கே ஏ.சி. இல்லை என்று நினைவு இல்லையா? கம்ப்யூட்டருக்கு ஏ.சி. இருப்பது நல்லது. அத்தோடு என் செயலாளரிடம் ஒன்று சொல்வதானால் ஹாலுக்கு வந்து அழைத்துச் சொல்வது எனக்குச் சரிப்படாது'' என்றான் அழுத்தத்துடன்.

முதலாளி அதிகாரமா என்று புகைந்தபடி, தடுப்பின் உள்ளே சென்று வேலையைத் தொடங்கினாள் நயனதாரா.

கடிதங்கள் கையெழுத்துக்குப் போன போது, அவனிடமிருந்து அவளுக்குப் பாராட்டு கிடைத்தது. ''தப்பே இல்லையே!'' என்று.

உள்ளூரச் சற்றுமனம் குளிர்ந்த போதும், கூடவே எச்சரிக்கை மணியும் அடிக்கவே, எதையும் வெளிக்காட்டிக் கொள்ளாமல் அப்படியே நின்றாள் நயனதாரா.

அவளுக்குள் ஒரு குறுகுறுப்பு. எம்.டி.. என்பதன் மேல் அவன் என்னவென்று கையெழுத்திடப் போகிறான்? அவனது பெயர் என்ன? எல்லோரும் புது எம்.டி., எம்.டி., என்றார்களே தவிர அவன் பெயரைச் சொன்னார்களில்லை... ஆனால் அவனது பெயர் தெரிந்து ஆகப் போவதும் எதுவுமில்லை. அதுவும் இனி நிச்சயமாக இல்லை.



அவன் பிரகாஷ் என்று கையெழுத்திடுவதைச் சலனமற்ற முகத்துடன் பார்த்துக் கொண்டிருந்து விட்டு, கடிதங்களை அவற்றுக்குரிய கவர்களில் இட்டு ஒட்டி, டெஸ்பாட்சிங்கிற்குத் தயாராக வைத்தாள்.

பிரகாஷ், நயனதாராவுக்கு வேலை அதிகம் கொடுத்தான். ஆனால் செய்து முடிக்க முடியாத அளவுக்கு அல்ல. கம்ப்யூட்டர் வேறு, அவன் கொடுத்த வேலையைத் துரிதமாகச் செய்ய உதவியது. ஏற்கனவே அவன் கம்ப்யூட்டரில் ஃபீட் பண்ணி வைத்திருந்தது வேறு அவளுக்கு வசதியாக இருந்தது.

வேலை அதிகம் இருந்தது அவளுக்கு நல்லதாகவும் தோன்றியது. வேறு நினைப்புகளுக்கு நேரம் இல்லையல்லவா? தன் வேலையில் அவன் குற்றம் கண்டுபிடிக்கும்படி ஆகிவிடக் கூடாது என்ற பிடிவாதம் வேறு இருந்ததால் மற்ற நினைவுகளை அடியோடு ஒதுக்கி, முழுக் கவன்த்தையும் வேலையில் செலுத்தினாள் அவள்.

மதியம், உணவு இடைவேளையின் போது பழைய செயலாளர் சரோஜாவைத் தேடிச் சென்றாள் நயனதாரா. ''சாரி மேடம். நான் சும்மா இருக்கிற நேரத்தில் என்று இந்தக் கம்ப்யூட்டர் கோர்ஸ் படித்தேன். ஆனால் அது உங்களுக்குத் தொந்திரவாகும் என்று நினைக்கவே இல்லை, மேடம்'' என்று அவள் வெகுவாக வருத்தம் தெரிவிக்கவும், அதுவரை அவள் மேல் ஆத்திரப்பட்டுக் கொண்டிருந்த அந்த அம்மாள் இளகிப் போனாள்.

''பரவாயில்லை.. நயனா எப்படியும் புது எம்.டி..யின் வேகத்துக்கு என்னால் வேலை செய்ய முடியாது என்று எனக்கே தோன்றி விட்டது. எனக்கும் வயதாகி விட்டது பார். அத்தோடு இப்போதுதான் பிரகாஷ் சார் டெலிஃபோனில்

என்னைக் கூப்பிட்டுப் பேசினார். என் அனுபவம் கம்பெனி முழுவதற்கும் பயன்படுவதற்காகவே, கம்பெனி செகரட்டரியிடம் அனுப்புவதாகச் சொன்னார். அவரவர் தகுதி தெரிந்த மனிதர். முப்பது ஆண்டு சர்வீசுக்கு மதிப்பு கொடுக்கிறார். அத்தோடு போர்டுமீட்டிங் ஒவ்வொன்றுக்கும், தனியாகப் பணமும் தருவதாகச் சொன்னார். எல்லாம் நல்லதற்குத்தான் என்று வைத்துக் கொள்வோம்'' என்றாள் சமாதானமாக.

பரவாயில்லை, கெட்டிக்காரன்தான் என்று நயனதாரா நினைத்தாள். அனுபவத்தைச் சொல்லி ஓர் 'ஐஸ்' வைத்து, வருமானத்தைக் கூட்டி அது ஓர் ஆசை காட்டித் தன்னை நல்லவனாக்கிக் கொண்டு விட்டான். பணிபுரிவோரிடையே ஓர் அனாவசிய மன வேறுபாட்டையும் தவிர்த்து விட்டான்.

மதிய உணவு முடிந்து திரும்பினால் மீண்டும் வேலை சரியாக இருந்தது. 'இந்த லெட்டர் நாலு காப்பி எடு, இந்தக் கடிதம் இந்தப் பத்துக் கம்பெனிக்கும் இரண்டு காப்பிகளோடு எழுது. இந்தச் சார்ட் தயார் செய்...' என்று வேலை கொடுத்துக் கொண்டே இருந்தான். எல்லாமே கம்ப்யூட்டரின் உதவியோடும், அதில் அவள் ஏற்கனவே ஃபீட் பண்ணி வைத்திருந்தவைகளைக் கொண்டும் இலகுவாகவே செய்ய முடிந்தது.

சொக்கலிங்கம் சாரிடம், சர்க்குலரும் கடிதங்களுமாகப் பத்துப் பதினைந்து டைப் செய்து, இடையில் அரட்டை அடித்திருந்தது மாறி, அன்றைக்குச் செய்து முடித்திருந்த வேலையைப் பார்க்க அவளுக்கே மலைப்புதான். ஆனால் இப்படியே முழு நேரமும் வேலை இருப்பதும் நல்லதுதான்; வேறு நினைவுக்கு இடம் தராது என்று தோன்றியது அவளுக்கு.

அன்றைய வேலை முடிந்து, மாலையில் கிளம்பும் போது பிரகாஷ் மீண்டும் பழைய பேச்சை எடுத்தான். பழைய கேள்விகளையே கொஞ்சம் மாற்றிக் கேட்டான்.

''சென்ற வாரம் முழுவதும் 'சிக்லீவு' என்று பார்த்தேன். அன்றிலிருந்துதானா? என்று அந்த அன்றுக்கு ஓர் அழுத்தம் கொடுத்து விசாரித்தான்.



''ஆமாம்'' என்றாள் அவள் சுருக்கமாக.

''அதனால்தான் ஓட்டலிலிருந்து திடீரென்று போகும்படி ஆயிற்றா?''

அன்றைய வேதனையும் அழுகையும் நினைவுவர, உதடுகளை இறுக மூடித் திரையில் பார்வையைப் பதித்தாள் அவள்.

அவள் முகத்தைச் சில வினாடிகள் கூர்ந்து நோக்கிவிட்டு, ''விவரம் தெரிந்து கொள்ளாமல் உன்னைப் போய் வா'' என்று அனுப்பக் கூட அச்சமாக இருக்கிறது. நல்லபடியாக வேலை செய்கிற பெண், மீண்டும் அந்தர்த்தானம் ஆகிவிட்டால் அடுத்து வேலைக்கு என்ன செய்வது என்று எனக்கு ஒரு கவலை'' என்று அவன் புன்னகை செய்த போது அவள் இமைகளைக் கூட உயர்த்தவில்லை.

பிரகாஷின் முறுவல் மறைந்தது. எழுந்து மேசையைச் சுற்றிக் கொண்டு அவள் எதிரே வந்து நின்றான்.

''நயனதாரா, நான் அன்றையப் புதிரை இலகுவாகவே விடுவிக்க முயற்சி செய்கிறேன். நீ ஒரேயடியாகப் பூட்டிக் கொண்டால் எப்படி?'' என்றான் குரலில் சிறு அழுத்தத்துடன்.

''எனக்கு நேரமாகிறது'' என்றாள் நயனதாரா மொட்டையாக.

''எதற்கு?'' என்று அவன் ஒருமாதிரிக் குரலில் கேட்கவும் அவள் சீறிக் கொண்டு நிமிர்ந்தாள்.

''நீங்கள் அளவுமீறிப் பேசுகிறீர்கள். வேலை நேரம் முடிந்த பிறகும் இங்கே நின்று இதைக் கேட்டுக் கொண்டிருக்கும் அவசியம் எனக்கு இல்லை'' என்றவள் திரும்பி நடக்க, சட்டென அவள் கையைப் பற்றி நிறுத்தினான் அவன்.

அனிச்சை செயலாய் அவன் கையை உதறி, ''என்னைத் தொடாதீர்கள்'' என்றாள் அவள் சினத்துடன்.

''எப்படி எப்படியோ ஒட்டிக் கொண்டு ஆடியவள் வாயி லிருந்து உதிரும் முத்துக்கள் ரொம்பவும் நிறம் மாறித் தெரிகின் றனவே!'' என்ற ஏளனமான வார்த்தைகளில் அவள் மனம் குன்றி, நிறம் கன்றிப் போனாள்.

உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால் வரை சூடாக ரத்தம் பரவி, சருமம் கன்றிச் சிவப்பதை அவனால் உணர முடிந்தது.

ஏதேதோ கனவு கண்டு என்ன மடத்தனமாக நடந்து கொண்டு விட்டாள். இதை அவனிடம் சொன்னால் கூட ஒத் துக் கொள்ளக் கூடுமா? ஒத்துக் கொள்வது இருக்கட்டும்; புரிந்து கொள்வதே சந்தேகம் அல்லவா? சும்மாவே மட்டமாக எண்ணியவன், இப்போது எம்.டி.க்கு வலை போடுகிறாயா என்றுதானே கேட்பான்? அவளது மூடத்தனம் எத்தகைய அவமானத்தை இழுத்து வந்து விட்டது!

இவனிடம் என்னவென்று சொல்வது என்று அவள் புரி யாமல் கலங்கும் போதே அவன் குரல் கேட்டது. ''இந்த மாதிரிக் குங்குமமாய் முகம் சிவப்பது எல்லாம் சங்க காலத் தோடு முடிந்து விட்ட விஷயம் என்றல்லவா நினைத்திருந் தேன். வினாடிக்குள் ரத்தம் பாய்வதும் மெல்ல வடிவதும் என்ன ஆச்சரியம்'' என்றான் அவன் வியப்பும் ரசனையுமாக.

ஒரு முடிவுக்கு வந்தவளாக அவனை நிமிர்ந்து பார்த் தாள் நயனதாரா. ''அன்று விருந்தில்.. வந்து.. அன்று நடந்தது எல்லாம் ஒரு பிசகு சார்.. அன்று என் தோழியின் திருமணம் தொடர்பாக நான் ரொம்பவும் சந்தோஷமாக.. இருந்து.. அதில் கொஞ்சம் நிலை தடுமாறி....''

''கொஞ்சம் நிலை தடுமாறியா? சாரிம்மா.. அன்று நீ நடந்து கொண்ட மாதிரிக்கு ஆங்கிலத்தில் ஒரு மட்டமான பெயர் உண்டு. 'டீஸ்' என்பார்கள். சும்மா இருந்தவனைப் பார்வையால் பிடித்து முறுவலால் அழைத்தது.. என்ன?'' என்று அவள் ஏதோ பேச முயல்வதைக் கண்டு பேச்சை நிறுத்திக் கேட்டான் அவன்.



ஆனால் அவள் சொல்ல வாயெடுத்ததை உள்ளேயே அடக்கிக் கொண்டு சில கணங்கள் பேசாமலே நின்றாள். உதடுவரை வந்த உண்மை வெளியிடத் தகுந்தது அல்ல. எப் படி விவரித்தாலும் நம்ப மாட்டான். ஒரு பெண் சிரித்ததி லேயே அழைத்ததாகக் கூறுகிறவன், உடன் சேர்ந்து நடனமாடி யதாலேயே அவனோடு இரவைக் கழிக்க அழைக்கிறவனுக்கு இதன் புனிதமும் மேன்மையும் என்ன புரியும்? யானையின் காலிடைப்பட்ட தாமரைப் பூ போல அதன் அருமை தெரியாத வனுக்கு அவள் விஷயம் அலட்சியமாகத்தான் தோன்றும்.

அதைவிடவும் மோசமாக, ஏங்கிக் கிடந்தவள் தானே என்ற எண்ணத்தில் கை நீட்டவும் தோன்றலாம்.

முதலில் எடுத்த முடிவே மேல் என்று தோன்றிவிட, ''அதெல்லாம் எனக்குத் தெரியாது சார். அன்றையத் தினம் ஒரு பிசகு. நான் அதை மனதிலிருந்து ஒதுக்கி விட்டேன். நீங்களும் ஒத்துழைத்தீர்கள் என்றால் நன்றாயிருக்கும். ஒத்து ழைப்பீர்கள் என்பது என் நம்பிக்கை சார். இனி நின்றால் என் பஸ் போய் விடும். நான் கிளம்ப வேண்டும்'' என்று முடிந்த வரை அமைதியைக் காட்டிப் பேசினாள் நயனதாரா.

அவளது கண்களையே பார்த்துக் கொண்டிருந்த அவ னும் அதற்குமேல் அவளைத் தடுக்கவில்லை. ''போய் வா. ஆனால் இந்தப் பேச்சு இத்தோடு முடிந்தது என்று எண்ண வேண்டாம்'' என்று கூறி அவளை அனுப்பி வைத்தான்.

இத்தோடு முடியவில்லை என்றால் என்ன அர்த்தம்?

இரவு முழுவதும் குழம்பிக் கலங்கினாள் நயனதாரா.

# 6

இரவு முழுவதும் நயனதாராவுக்கு இதே யோசனை; கலக்கம்; பயம்; தவிப்பு.

இது முடியவில்லை என்றால் என்ன அர்த்தம்? மீண்டும் இதே பேச்செடுத்துத் தூண்டித் துருவுவான் என்பதா?

அன்றி, அனிதாவின் விசேஷத்தில் தொடங்கியதைத் தொடரலாம் என்று முயன்றான் என்றால்... அவன் கன்னத்தில் ஓங்கி அறைந்து விட்டுக் கால் கடுதாசியை எழுதிக் கொடுத்து விட்டு வந்துவிட வேண்டியதுதான்.

ஆனால் இதில் பெரும் துன்பம் என்னவென்றால் அன்று ஓட்டலில் அவன் நடந்து கொண்ட விதத்தை நியாயப்படுத்தும் வரை அவளிடம் பிரகாஷுக்கு மதிப்பு இராது. ஓரளவேனும் நடத்தை கெட்டவளாக, குறைந்தபட்சமாய் அவன் சொன்னானே, 'டீஸ்' என்று - அப்படிப்பட்டவளாகத்தான் கருதுவான். அந்தமாதிரிப் பெண்களுக்குரிய மரியாதைதான் அவனிடமிருந்து அவளுக்குக் கிடைக்கக் கூடும்.

எந்தவழியிலும் போக முடியாமல் தவிப்பதை விட இந்த வேலையை விட்டு விடலாமா என்றும் நயனதாரா யோசித்துப் பார்த்தாள்.

ஆனால் என்ன காரணத்தினால் வேலையை விடப்போவதாக வீட்டில் சொல்வது? அத்தோடு அவசரப்பட்டு இந்த வேலையை விட்டு விட்டால் இதுபோல வேறு வேலை கிடைப்பது எளிதல்லவே! மாதம் ஆயிரத்து ஐநூறு ரூபாய்! இதை நம்பித் தொடங்கிவிட்ட ரெக்கரிங் டெப்பாசிட் என்ன ஆவது?....

வேலையை விட்டு விடக்கூடாது என்பதற்கான காரணங்களை அடுக்கும்போதே உள் மனத்தின் இயல்பான நேர்மை அவளை இடித்துரைத்தது. இந்த வேலையை விட்டு விடக் கூடாது. இதிலேயே நீடிக்க வேண்டும் என்பதற்கு இந்தச் சின்னச் சின்ன விஷயங்களா காரணம்? வேலையை விட்டு விட்டால் பிரகாஷைக் காண முடியாமலே போய் விடக் கூடுமே என்றல்லவா அதைத் தடுப்பதற்காக இத்தனை காரணங்களைத் தேடிக் கண்டுபிடிக்கிறது இந்தப் பேதைமனம்.



மறுநாள் வேலைக்குச் செல்லும் போது நயனதாராவின் மனதில் ஓர் உறுதி இருந்தது.

பிரகாஷைக் காணுகிற வாய்ப்பை அடியோடு விட்டு விடக் கூடாது என்பதற்காகவே இந்த வேலையைத் தொடர்வது அவளது நெஞ்சறிந்த உண்மையே. ஆனால், அது அவனை நெருங்கும் வாய்ப்பிற்காக அல்ல. அதேசமயம், அவளை நெருங்கும் வாய்ப்பை அவனுக்கு அளிக்கவும் அவள் தயாரில்லை. அவளை அறிந்து கொள்ளத் தவறியது மட்டுமின்றி, அவளைக் குலமகளாகக் கூட மதியாது அவமானப்படுத்திய அவனுக்கு அவளை நெருங்கும் தகுதி அணுவளவும் கிடையாது.

அவள் ஒருநாளில் அறிந்த அளவில் பார்க்கும்போது அவனது நடத்தை மோசமானதாகத்தான் இருக்க வேண்டும் என்பது தெளிவு. இன்னமும் அவனது குணாதிசயங்களை நன்கு அறிந்தால், பல ஆண்டுகளாக அவளது இதயத்தைச் சுற்றிப் பின்னிப் படர்ந்து விட்ட இந்த வலையை அடியோடு அறுத்து எறிவது எளிதாகி விடக்கூடும். ஊர் உலகத்தில் உள்ள மற்ற பெண்களைப் போல அவளும் வாழ வேண்டுமானால் அந்த விடுதலை அவளுக்கு மிகவும் அவசியம். அதற்காகவே அந்த அலுவலகத்துக்கு அவள் தொடர்ந்து போகப் போகிறாள்.

மற்றபடி அவனாக அவளை நெருங்க முயற்சித்தால், அதற்கு இடம் தர அவள் தன்மானம் அற்றவள் அல்ல. அன்று அவன் அவமானப்படுத்திய விதம் இந்தப் பிறவியில் மறப்பதற்கு இல்லை. எனவே எட்ட நின்று பழகுவது அவளுக்குக் கடினம் அல்ல.

எப்போதுமே நயனதாரா குனிந்து நடப்பவள் இல்லை என்றாலும், இப்போது அவளது தோற்றத்தில் தனி நிமிர்வு இருந்தது.

அவள் கண்களில் இருந்த திடத்தைக் கவனித்து விட்டு, ''அந்த சினேகிதியின் இழப்பிலிருந்து நயனி ஒருவாறு மீண்டு விட்டாள் என்று தோன்றுகிறது. பழைய சிரிப்பு முகத்தில் வரவில்லை என்றாலும், ஏழெட்டு நாளாக இருந்த சோகம் மாறித் தைரியம் வந்து விட்டது'' என்று கணவரிடம் கலந்து திருப்தியுற்றாள் கவுசல்யா.

அலுவலகத்தில் நயனதாராவைப் பார்த்ததும், வியந்த பாவனை போல் புருவங்களை உயர்த்தி, ''அப்பாடி! வந்து விட்டாயே, பெரிய கவலை தீர்ந்தது! முன்போல மறைந்து விடுவாயோ என்று பயந்திருந்தேன்'' என்று பிரகாஷ் கேலிக் குரலில் பேசியபோது, அமைதியாகக் ''குட்மார்னிங்'' சொல்லி விட்டுத் தன் இருப்பிடம் சென்று கைப்பையை வைத்துவிட்டுத் திரும்பினாள் அவள்.

''உடனடி வேலை ஏதாவது இருக்கிறதா சார்? இல்லை என்றால், நீங்கள் நேற்று மாலையில் சொன்ன அட்டவணையை முடித்து விடலாம் என்று பார்க்கிறேன்'' என்று அவள் பிசிரற்ற குரலில் கேட்ட போது, சில வினாடிகள் அவளை நேராகப் பார்த்து விட்டு, ''செய்'' என்று அனுமதி கொடுத்தான் அவன்.

அத்தோடு அவனும் பழைய பேச்செடுப்பதை அடியோடு விட்டு விட்டான் என்று இல்லை. ஆனால் அவன் நேரடியாகவும், குறிப்பு கொடுத்தும் பேசியதை அவள் அடியோடு கவனியாதவள் போல நடந்து கொள்ளவும் அந்த மாதிரிப் பேச்சுகள் மெல்லக் குறைந்து போயின.

அவனுக்கு வேலை முக்கியமாக இருந்ததும் அதற்கு ஒரு காரணம் ஆயிற்று. அன்றாட வேலைகள் போக, பழைய ஃபைல்களிலிருந்த விவரங்கள் பலவற்றையும் கம்ப்யூட்டரில் ஸ்டோர் பண்ண வேண்டியிருந்ததால் கிட்டத்தட்ட முழு நேரமும் வேலையில் கழிந்தது.



அவ்வப்போது அருகில் வந்து இப்படிச் செய், அப்படிச் செய் என்று காட்டிய போதும் அவன் கருமமே கண்ணாயினனாக இருந்ததால் பிரச்னை ஏதும் எழவில்லை.

அதற்காக பிரகாஷ் அடியோடு அந்தப் பேச்சை விட்டு விடவும் இல்லை. ஆனால் கேட்ட முறையில் வித்தியாசம் உண்டாயிற்று.

''அன்று எப்படியோ... ஏதோ ஒரு வகையில் உனக்குச் சினமூட்டியிருக்க வேண்டும் என்று தோன்றுகிறது.. ஆனால் ஏன் என்று தான் தெரியவில்லை'' என்றான் ஒருநாள்.

அவன் கையெழுத்திட்ட கடிதங்களை எடுத்துக் கொண்டு, காது கேளாதவள் போலப் போனாள் அவள்.

இன்னொரு நாள் கடைசிக் கடிதத்தில் கையெழுத்திடாமல் வைத்துக் கொண்டு, அதே கேள்வியைக் கேட்டான்.

வேண்டுமென்றே நிறுத்திவைத்துக் கொண்டு அவன் பேசுவது புரிந்தது. சட்டென அவன் கையெழுத்திட்ட மற்ற கடிதங்களை எடுத்துக் கொண்டு, ''நான் இதையெல்லாம் டெஸ்பாட்சிற்குத் தயார் செய்கிறேன் சார். அது கையெழுத்திட்டதும் சொல்லுங்கள்'' என்று உரைத்துவிட்டுத் திரும்பிப் பாராமல் தன்னிடத்துக்குச் சென்றுவிட்டாள்.

கடைசிக் கடிதத்தை அவனே கொணர்ந்து கொடுத்தான்.

அவள் அதை உறையிலிட்டு ஒட்டுவதைப் பார்த்திருந்து விட்டு, ''ஆனால், ஏன் நயனதாரா? அன்று நானாக ஏதும் செய்தேனில்லையே.. நீ தான் முதலில் என்னைப் பார்த்து, முறுவலால் அழைத்தது எல்லாம்...'' என்று அவன் மீண்டும் தொடங்கவும் அவளுக்கு நெஞ்சு கனன்றது.

அழைத்தாளாமே! ஆமாம். அழைத்தாள் தான். ஆனால் ஒரு பெண்ணின் அழைப்பு உடனே ஓடிப் போய்ப் படுக்கையில் விழுவதற்காக மட்டும்தான் இருக்குமா? தன்னைப் போலப் பிறரை நினைக்கும் பரந்த மனமா? எல்லோரும்

அவனைப் போலவே வெறி பிடித்தவர்களாக இருப்பார்களா, என்ன?

தன் தீர்மானத்தை மறந்து, ''நான் ஒன்...'' என்று சினத்துடன் தொடங்கியவள் உடனே நிறுத்தினாள்.

யோசனையோடு, ''நீ ஒன்றும்...'' என்று தூண்டினான் பிரகாஷ்.

அவள் உதடுகளை இறுக மூடி நிற்கவும், ''சொல்லு நயன தாரா. நீ சொன்னால் தானே எனக்குத் தெரியும். சொல்லப் போனால் அப்படி அரைகுறையில் விட்டுப் போனதற்கு நான் தான் உன் மேல் ஆத்திரப்பட வேண்டும். ஆனால் அதை விட்டு ஏதோ விஷயம் என்று உணர்ந்து தானே உன்னிடம் விவரம் கேட்கிறேன். நீயும் சொன்னால் தானே எனக்கும் புரிந்து கொள்ள முடியும்'' என்று மேலும் விடாமல் கேட்டான் அவன்.

இனி நீ புரிந்து கொண்டு ஆகப் போவது என்ன என்று கசப்புடன் நினைத்தாள் நயனதாரா. ஆனால் அவன் வழி மறைத்து நின்று கேட்ட விதம், ஒரு பதில் பெறாமல் அவன் விலகப் போவது இல்லை என்பதை உணர்த்தவும், ''நான் அந்த மாதிரிப் பெண் இல்லை'' என்றாள் மரத்த குரலில்.

''அது இப்போது புரிகிறது, ஆனால்...'' என்றவன் பேசு முன் நயனதாரா குறுக்கிட்டுப் பேசினாள். ''சார்.. இந்த அலுவலகத்தில் நீங்கள் மானேஜிங் டைரக்டர், நான் உங்கள் காரியதரிசி. அத்தோடு நம் பேச்சுவார்த்தைகளை நிறுத்திக் கொள்வது நல்லது என்று நினைக்கிறேன். தயவு செய்து வழிவிட்டு விடுகிறீர்களா?'' என்று பழைய குரலிலேயே கேட்டு விட்டுக் கைப் பையை எடுத்தாள்.

முகத்தில் யோசனையோடு வழி விலகினான் பிரகாஷ்.

அதன்பிறகு அவன் இந்தப் பேச்சை எடுக்கவில்லை என்றாலும் அவ்வப்போது அவன் பார்வை யோசனையாக அவள் முகத்தில் படிவதை அவள் உணர்ந்தாள். அவனுக்கு இன்னமும் விஷயம் தெளிவாகாத போதும், இவளிடம் கேட்டுப் பயனில்லை என்பதால் விட்டு விட்டான் என்று நினைத்தாள்.



உள்ளூர இருந்த வேதனை தவிர, வேலை, வீடு என்று அமைதியாக நாட்கள் கடந்தன.

வீட்டிலும் திருமணம் வேண்டாம் என்பதை விடுத்து, ''கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்கள் அம்மா. அப்புறம் நீங்கள் மாப்பிள்ளை என்று மரப்பாச்சியைக் கொண்டு வந்து நிறுத்தினாலும் கழுத்தை நீட்டி விடுகிறேன்'' என்று சொல்லி விட்டதால் அங்கும் அமைதியே நிலவியது.

இதற்கிடையே அலுவலகத்தில் பணிபுரிந்த அத்தனை பேருக்கும் பிரகாஷ் தன் வீட்டில் ஒரு விருந்து கொடுத்தான்.

அது அவனுடைய தகப்பனார் வசித்த வீடுதான். ஆனால், அவர் இனி இங்கு வந்து வசிக்கப் போவது இல்லை என்று ஆகிவிட்டபடியால் மகன், தன் விருப்பத்திற்கேற்றபடி வீட்டை மாற்றி விட்டிருந்தான். புதுமனை புகுவிழா என்று இல்லாவிட்டாலும் அவன் அந்த வீட்டில் குடிபுகு விழா என்று அதில் பங்கு கொள்ள அனைவரையும் அழைத்திருந்தான்.

எல்லோரும் செல்லும் போது தான் மட்டும் போகாதிருந்தால் நன்றாயிராது என்றே நயனதாராவும் சென்றிருந்தாள். வீட்டு அலங்காரத்தையும் வண்ணப் பொருத்தங்களையும் தனியாகப் பயின்றிருந்த அவளுக்குப் பொதுவாக எந்த வீட்டுக்குச் சென்றாலும் இதை இப்படிச் செய்திருந்தால் இன்னமும் அழகாக இருந்திருக்குமே என்று தோன்றாமல் இருந்ததே கிடையாது.

ஆனால் பிரகாஷின் பங்களா அவளது கவனத்தை மிகவும் கவர்ந்தது. தளத்தில் பதிக்கப்பட்டிருந்த கற்கள், பொருத்தமான வண்ணத்தில் சுவர்ப்பூச்சு, சுவர்களில் அங்கங்கே அழகிய வேலைப்பாட்டுடன் கூடிய சட்டங்களுடன் கண்ணைக் கவர்ந்த சித்திரங்கள், நவீனமான முறையில் அமைக்கப்பட்ட ஒளிவிளக்குகள், அந்தந்த அறைக்குப் பொருத்தமான முறை

யில் போடப்பட்டிருந்த திரைச்சீலைகள், சோபா, மோடா, மேசை, நாற்காலிகள், ஸ்டாண்டுகள் போன்றவைகள், தோட்டம்.. எல்லாமே ஒரு கலை வண்ணத்தோடு காட்சி அளித்தன.

இப்படிப்பட்ட கலா ரசிகன் எப்படி ஒரு குணக்கேடனாக இருக்க முடியும்?

ஆனால் இருந்தானே! இங்கிதமற்று அவளிடமே நடந்து கொண்டிருக்கையில் எப்படி இருக்க முடியும் என்று எண்ணுவதே முட்டாள்தனம் அல்லவா? ஏன், இந்த வீட்டின் அலங்காரங்கள் எல்லாம் அவனது சொந்த ஐடியா என்று என்ன நிச்சயம்? யாராவது 'இன்டீரியர் டெக்கரேட்டரிடம்' காசை வீசியிருப்பான். அவர் உட்கார்ந்து உட்கார்ந்து யோசித்து இவன் வீட்டை அழகுபடுத்தினால் பெயரை இவன் தட்டிச் செல்வதா?

எல்லோரும் வீட்டையும் அவனையும் புகழ்ந்து துதிபாடிய போது, அவள் மட்டும், ''இப்படி ஒரு நல்ல இன்டீரியர் டெக்கரேட்டர் கிடைத்தது உங்கள் அதிருஷ்டம் சார், ரொம்ப நன்றாகச் செய்திருக்கிறார்'', என்று அவனது அதிருஷ்டத்தைப் பாராட்டினாள்.

அவனது விழிகள் பளிச்சிட்ட விததத்தில் பிரகாஷ், அவளது மனதில் உள்ளதைக் கண்டு கொண்டானோ என்று தோன்றியது அவளுக்கு. அவளை ஒட்டியே, ''உன் பாராட்டுதலை அவரிடம் சொல்கிறேன்'' என்றது அவளது ஐயம் உறுதியாகி விட, எதிலோ தோற்றாற் போல உணர்ந்தாள் நயனதாரா.

ஒருநாள், டைப்பிங் பிரிவில் உள்ள ஒரு பெண்ணும், கிளெரிகல் பகுதியைச் சார்ந்த ஓர் இளைஞனுமாக, வெற்றிலை பாக்குத் தட்டில் ஓர் திருமண அழைப்பிதழை வைத்துப் பிரகாஷுக்குக் கொடுத்தார்கள்.

காதல் திருமணமாம்! ''அவங்க இந்த கட்டிடத்துக்குள்ளே சாலடி எடுத்து வைத்த வினாடியிலிருந்து 'லவ்' பண்ணுகிறோம் சார்,'' என்றான் இளைஞன் பெருமையோடு.



கொஞ்சம் நாணம் காட்டியபோதும் அவளுக்கும் பெருமைதான். ''இங்கேதான் முதலில் வேலைக்குச் சேர்ந்தேன் சார். பயந்து கொண்டே வந்த போது இவரைப் பார்த்தேனா, அந்த செகன்டிலேயே எனக்குத் தெரிந்து போயிற்று, இவர் தான் நம் கணவர் என்று. கடவுள் அருளால் பெரியவர்களும் சம்மதித்து விட்டார்கள்'' என்றாள் மகிழ்ச்சியோடு.

நயனதாராவுக்கும் ஓர் அழைப்பு கொடுத்தார்கள்.

இந்த இருவரின் காதலைப் பற்றி ஏற்கனவே அறிந்திருந்த நயனதாரா புன்னகையோடு அவர்களை வாழ்த்தினாள்.

வெறுமனே அழைப்பை மட்டும் எடுத்துக் கொண்டு அனுப்பிவிடாமல், அவர்களிடம் சகஜமாக உரையாடினான் பிரகாஷ்.

சுமார் என்று சொல்லக்கூடிய தோற்றமுள்ள அந்தப் பெண் கருணா, பேரழகியாகத் தோற்றமளிப்பதை வியப்புடன் கண்டாள் நயனதாரா. உள்ளத்தின் பூரிப்பல்லவா முகத்தை இப்படி மாற்றியிருக்கிறது என்று எண்ணும் போது ஓர் ஏக்கம் பெரும் அலையாக அவளுள் எழுந்தது.

''நயனதாரா!'' என்று பிரகாஷின் குரல் சற்று உரக்க ஒலிக்கவும் திடுக்கிட்டுத் திரும்பினாள் அவள். ''என்ன யோசனை? இவர்களுக்குத் திருமணப் பரிசாக, கம்பெனியிலிருந்து ஆயிரம் ரூபாய் கொடுக்கும்படி காஷியருக்கு ஒரு கடிதம் அடித்துக் கொண்டுவா,'' என்று அவளை அனுப்பினான்.

மணம் புரியப் போகிறவர்கள் இருவரும் சென்று விட வழக்கமான வேலை தொடர்ந்தது.

வேலையின் நடுவே திடுமெனப் பிரகாஷ் கேட்டான். ''அன்று உனக்கும் அப்படித்தான் இருந்ததா, நயனி?''

அவ்வப்போது கருணாவின் பூரிப்பை மனதுக்குள் பார்த்துக் கொண்டே இருந்தவளுக்குத் தூக்கிவாரிப் போட்டது. ''எ... எப்படி சார்?''

''அதுதான் பார்த்த வினாடியிலேயே, இவன் தான் வாழ்க்கைத் துணை என்று!''

அன்றில்லை, அதற்கு முன்பிருந்தே என்று சொல்லிவிட நயனதாராவின் நாவு துடித்தது.

ஆனால் அப்படிச் சொல்வது எந்த மறைப்பும் இல்லாமல் அவளது இதயத்தை அவன் முன்னே வைத்து, என்ன வேண்டு மானாலும் செய்து கொள்; எப்படி வேண்டுமானலும் வெட்டிக் கூறுபோட்டுக் கொள் என்பது போல் ஆகாதா?

அவள் சொல்வதறியாமல் மருண்டு விழிக்கையிலேயே அவன் மேலும் தொடர்ந்தான். ''அதனால்தான் அன்று என்னி டம் அப்படி நடந்து கொண்டாயா? என்னிடம் கூட ஒரு பாதிப்பு இருக்கத்தான் செய்தது நயனி?...''

சுளீரென்று கொதி நீரை முகத்தில் விசிறி அடித்தாற் போல உணர்ந்தாள் நயனதாரா.

பாதிப்பாமே! அது என்ன விதமான பாதிப்பு அன்றே அக்கினிக் குழம்பாய்த் தலையில் கொட்டி விட்டானே! இன் னும் என்ன?

ஆத்திரத்துடன் நிமிர்ந்தாள் அவள்.

''மற்றபடி...'' என்று ஏதோ சொல்லிக் கொண்டு இருந்த வனை இடைமறித்து, ''இல்லை அன்றைக்கு எனக்கு அப்படி எதுவும் தோன்றவில்லை,'' என்றாள் அழுத்தம் திருத்தமாக.

ஐயத்துடன் நோக்கியவனிடம், '' அலுவல் வேலை தவிர வேறு பேசப் பிடிக்கவிலலை என்று முன்பே சொல்லியிருக்கி றேன் சார். வேறு வேலை இல்லை என்றால் சொல்லுங்கள் நான் இன்று சற்று சீக்கிரமாக வீடு திரும்ப வேண்டியிருக் கிறது'' என்றாள் கண்டிப்பான குரலில்.

சிறு மவுனத்தின் பின் தோளைக் குலுக்கிவிட்டு வேலை யைத் தொடர்ந்தான் பிரகாஷ்.

பழைய சகஜநிலைவரச் சிலநாட்கள் பிடித்தன.



இன்னொருநாள் பிரகாஷ் வெளியே சென்றிருந்த போது, அவனுடைய தந்தையிடமிருந்து அவனுக்கு டெலிஃ போன் வந்தது.

அவள் அங்கிருப்பதை அறிந்து அவர் பேசியதைக் கொண்டு, இங்கு நேர்ந்திருக்கும் மாற்றங்கள் குறித்து பிரகாஷ் தந்தைக்குத் தெரிவித்திருப்பதை நயனதாரா உணர்ந்து கொண் டாள்.

சில பொதுப்படையான கேள்விகளின் பின், அவர் தன் மகனைப் பற்றிப் பேசினார். ''பொதுவாகத் தன்னைப் பேணிக் கொள்ளத் தெரிந்தவன் தான் பிரகாஷ். ஆனால் ஏதாவது முக்கியமான வேலை வந்து விட்டால், பசி, தாகம், தூக்கம் ஒன்றுமே பார்க்க மாட்டான். தூக்கம் பற்றி மற்றவர்கள் எது வும் செய்வதற்கில்லை. ஆனால் அவனது பசி, தாகம் பற்றிக் கொஞ்சம் கவனித்துக் கொள்ளம்மா. இது ஆபீஸ் வேலை இல்லை தான். ஆனால் யாராவது கவனித்துக் கொண்டால், எனக்குக் கொஞ்சம் நிம்மதியாக இருக்கும். செய்வாயா, அம்மா?'' என்று அவர் கேட்ட போது அவள் சரியென்று தான் சொல்லும்படி ஆயிற்று.

ஆனால் அவரது கவலை அனாவசியம் என்று தான் நயனதாராவுக்குத் தோன்றியது. முக்கியமான, பழைய பல விவரங்களைக் கம்ப்யூட்டரில் கொடுத்து ஸ்டோர் பண்ணி முடிக்கிற வரையிலும் காலையில் சீக்கிரமாக வந்து மாலையில் தங்கியிருந்து சென்ற போதும் அவன் ஒன்றும் உணவு பான வகையறாக்களை ஒதுக்கி உடல் மெலிந்ததாக அவளுக்குப் படவில்லை. ஆனால் பெற்ற மனம் பித்தாக ஒரு பெரியவர் பேசும் போது மறுத்துப் பேச மனம் வராமல் ஒத்துக் கொண்டு விட்டாள்.

''உன் பதவி காரணமாக நீதான் அலுவலகத்தில் அதிக நேரம் அவனுடன் அங்கே இருக்க முடியும் என்பதால் தான் உன்னிடம் இந்த உதவி கேட்டேன்'' என்று மேலும் விளக்கி விட்டு, ''இன்னொன்று அவனிடம் சொல்லு, நயனதாரா.

அவன் கேட்ட விவரங்கள் கூரியரில் அனுப்பி இருக்கிறேன். நாளைக்கு அவன் கைக்கு வந்து சேரும் என்று சொல்லிவிடு'' என்று கூறி ரிசீவரை வைத்தார் அவர்.

கூரியர் விவரம் அறிந்த போது பிரகாஷ் சற்றுப் பரபரப் புற்றது போலத் தோன்றியது நயனாவுக்கு.

அவன் பரபரப்புறும் அளவுக்கு என்ன விவரங்கள் வரக் கூடும்? திருமண விஷயமா? பெண்ணின் படம் மற்றும் விவ ரங்களா?

எவ்வளவோ முயன்றும் அடக்க மாட்டாமல், ''கூ... கூரியரில் வருவது உங்கள் க.. கல்யாண விஷயமா, சார்? பெ.. பெண் பற்றிய விவரங்களா?'' என்று கேட்டு விட்டாள்.

வியப்பினால் மலர்ந்த விழிகளில் குறும்பு பரவ அவளை நோக்கினான் அவன். சுட்டு விரலை நீட்டி, விளையாட்டாய்ப் பத்திரம் காட்டி, ''இங்கே ஆபீஸ் விஷயம் தவிர வேறு பேசி னால் பிடிக்கவில்லை என்று யாரோ அடிக்கடி சொன்னதாக எனக்கு ஞாபகம்'' என்று சிரிக்கவும் அவள் விசுக்கெனத் திரும்பி நடந்து விட்டாள்.

ஆனால், ''நயனதாரா'' என்ற அவனது குரல் அவளைத் தேக்கியது. ''கூரியரில் எதுவும் கல்யாண சமாச்சாரம் இல் லை'' என்றான் அமைதியான குரலில்.

இப்போது திரும்பி அவனது முகத்தைப் பார்ப்பது மிக வும் சிரமமாகிப் போயிற்று அவளுக்கு.

சொந்த விஷயம் பற்றிப் பிரகாஷ் பேசியபோதெல்லாம் அப்படிப் பந்தா காட்டி விட்டு, அவளே இப்படி - அதுவும் திருமண விஷயமா என்று கேட்டு விட்டாளே! அவளைப் பற்றி அவன் என்ன நினைப்பான்? வேறென்ன, பேசியதெல் லாம் வேஷம் என்று நினைப்பான். அவ்வளவுதான்.

கூச்சமும் குமுறலுமாக அவள் தவித்த போது அபயகரம் காட்டினாற் போல, கூரியர் மூலம் பிரகாஷுடைய தந்தை அனுப்பிய விவரங்கள் வந்து சேர்ந்தன.



# 7

தீகப்பனார் அனுப்பிய தகவல்கள் பிரகாஷின் மனதிற்கு உகந்தவையாக இருந்தன போலும். கத்தைக் காகி தங்களைப் பிரித்து மேலோட்டமாய்ப் பார்க்கையிலேயே அவன் முகம் மலர்ந்தது.

கையில் குறிப்புப் புத்தகத்துடன் எதிரே அமர்ந்திருந்தவ ளைப் பார்த்து முறுவலித்து விட்டு, ''இப்போது உடனடியாகக் குறிப்பெடுக்க ஒன்றும் இல்லை, நயனி. இதையெல்லாம் இன் னமும் தெளிவாகப் படிக்க வேண்டும். அதன் பிறகு... அதன் பிறகு பெரிய வேலை இருக்கிறது'' என்றான்.

''ஆனால் படித்த வரையில் நல்ல சேதியாகத் தெரிகிறது'' என்று கேட்டாள் அவள்.

''ம்.. சர்வ நிச்சயமாய்! இன்று எல்லாமே நல்ல சேதியா கத் தெரிகிறது. இன்றைக்கு எனக்கு மிகவும் நல்ல நாள் என்று நினைக்கிறேன்'' என்றவனின் குரலில் உற்சாகம் கொப்பளித் தது.

அவன் கையிலிருந்ததை மட்டுமாகச் சொல்லவில்லை என்று நயனதாராவுக்குத் தோன்றியது.

அன்றாட வேலைகளைக் கூட, மிக முக்கியமான சிலது தவிர மற்ற வேலைகள் அனைத்தையும் நயனதாராவின் பொறுப்பில் விட்டுவிட்டு அந்தக் காகிதங்களிலேயே மூழ்கி விட்டான் பிரகாஷ்.

மதிய உணவை முடித்துக் கொண்டு வந்த நயனதாரா, அவன் இருக்கையை விட்டு அசையக் கூட இல்லை என்பதை அறியவும் கொஞ்சம் அதிர்ந்தாள்.

இதுதான் அவனுடைய தந்தை சொன்ன பசி, தாகம் பாராத தன்மையா?

''சா..ர்'' என்றாள் மெதுவாக.

அவன் கண்டு கொள்ளவில்லை என்றானதும் சற்று உரக்கவே அழைத்து அவனது கவனத்தை ஈர்த்தாள்.

ஏதோ கனவிலிருந்து விழித்தாற் போல அவன் பார்க்கவும், ''நீங்கள் சாப்பிடப் போகவில்லையே?'' என்று கேட்டாள்.

''பசி.. பரவாயில்லை, இரவு சேர்த்துச் சாப்பிட்டுக் கொள்ளலாம்'' என்று மீண்டும் காகிதத்தில் கண்ணைப் பொருத்தினான். படிப்பதும், அருகில் இருந்த பெரிய கணக்கு நோட்டில் ஏதோ குறிப்பதுமாக மீண்டும் வேலையைத் தொடங்கி விட்டான்.

ஏதோ, சொல்ல வேண்டியது, சொல்லியாயிற்று கடமை தீர்ந்தது; என்று மேசை மேல் இருந்த மற்ற கடிதங்கள், குறிப்புகளை எடுத்துக் கொண்டு தன் இருப்பிடத்துக்குச் சென்றவளுக்கு ஏனோ இருப்பு கொள்ளவில்லை.

எப்படியும் ஒரு பெற்றவருக்கு வாக்குக் கொடுத்திருக்கிறாளே!

மணிக்கட்டைத் திருப்பிப் பார்த்தாள். உணவு நேரம் கிட்டத்தட்ட முடிகிற வேளை ஆகிவிட்டிருந்தது.

ஓரளவு யோசித்தவள், ஒரு துண்டுக் காகிதத்தில் வரப் பத்து நிமிடம் தாமதம் ஆகும் என்று எழுதி எடுத்துக் கொண்டு போய் அவன் மேசையில் வைத்து, மேலே பேப்பர் வெயிட்டையும் வைத்தாள்.

அவன் அவளைக் கவனிக்கவே இல்லை என்பதைக் காணவும் விசித்திரமான வகையில் அவளுக்குச் சிரிப்புதான் வந்தது.

கைப்பையை எடுத்துக் கொண்டு அவசரமாக வெளியே சென்றாள்.



அந்த அலுவலகத்தின் அருகிலேயே ஓர் உயர்தர ஓட்டல் இருந்தது. அங்கே ஒரு மினிலஞ்ச் பாக்கெட்டை வாங்கிக் கொண்டு சென்ற வேகத்திலேயே திரும்பி வந்தாள்.

முன்போலவே இரண்டு, மூன்று தரம் அழைத்து, அவன் நிமிர்ந்து பார்த்ததும், ''சாப்பிட்டு விட்டு வேலையைப் பாருங்கள், சார். நீங்கள் எழுந்து போய்ச் சாப்பிடக் கூடத் தேவையில்லை. நானே வாங்கி வந்து விட்டேன். மேசை மேல் வைத்து, அப்படியே ஐந்து நிமிடத்தில் சாப்பிட்டு முடித்து விடலாம்'' என்று உணவு பாக்கெட்டையும் பிளாஸ்டிக் ஸ்பூனையும் அவன் அருகே வைத்தாள். ஓடிப் போய் தம்ளரைக் கழுவி, ஃபில்டர் தண்ணீர் பிடித்து வந்து தட்டு கொண்டு மூடி வைத்தாள்.

சாப்பிட்டபடியே பிரகாஷின் பார்வை நயனதாராவை ஆராய்ந்தது.

சாப்பாடு காலியாவதைத் திருப்தியுடன் நோக்கிவிட்டுத் திரும்பிச் சென்றவளை நிறுத்தி அவன் கேட்டான். ''என் செகரட்டரியின் வேலைகளில் என் சாப்பாடு விஷயம் எப்போதிலிருந்து அடக்கம், நயனி?''

பாவம் என்று பார்த்தால் அவளையே மடக்குகிறானாமா? ''என் பெயர் நயனதாரா'' என்றாள் மிடுக்காக.

''ஓகே.. ஓகே. நயனதாராதான்'' என்றபடி, காலியாகி விட்டிருந்த அலுமினியத் தாளையும் ஸ்பூனையும் கொண்டு குப்பைத் தொட்டியில் போட்டான் அவன். தம்ளரை எடுத்து ஒருவாய் நீர் அருந்தி விட்டு, ''சொல்லு. நயனதாரா, என் பசி, தாகங்கள் உன் வேலைக் கணக்கில் எப்போது சேர்ந்தன?'' என்று புன்னகையோடு வினவினான் அவன். ''அல்லது உன்னை மீறி என் மேல் பரிதாபம் உண்டாகி விட்டதா?''

''பரிதாபம், என்ன பரிதாபம்? இந்த விவரங்கள் வந்து சேர்ந்ததும் நீங்கள் இப்படிச் சோறு தண்ணீர் இல்லாமல் உட்கார்ந்து விடுவீர்கள் என்று எதிர்பார்த்திருப்பார் போலும் உங்

கள் அப்பா. நேற்றே என்னிடம் உங்கள் சாப்பாடு விஷயம் கவனிக்க வேண்டும் என்று கேட்டார். சரியென்று ஒத்துக் கொண்டு விட்டதால் செய்தேன்'' என்றாள் அவள் குரலில் ஓர் அலட்சியத்தை தருவித்து.

''ஓகோ! அதுதானே பார்த்தேன். என்னடா, நயனதாரா அம்மையாருக்கு என்மேல் திடீர்ப் பரிவு பிறந்து விட்டதே என்று அநியாயமாய் அதிசயப்பட்டுப் போனேனே! எல்லாம் வீண்'' என்று சிரித்தான் பிரகாஷ்.

அவனோடு இணைந்து சிரிக்க மனமற்ற அவள் பேசாமல் நிற்கவும், ''எப்படியோ, மேல் அதிகாரியான எனக்கு மதிப்பு இல்லா விட்டாலும், பொறுப்பில் இல்லாத என் அப்பாவின் சொல்லாவது செல்லுபடியாகிறதே! அதுவே பெரிய நிம்மதி. நாளை பின்னே உன்னிடம் ஏதாவது காரியம் நடக்க வேண்டுமானால் அப்பா மூலம் நடத்திக் கொண்டு விடலாம்!'' என்று வேடிக்கை போலக் கூறியபடியே மீண்டும் பழைய வேலையைக் கையில் எடுத்தான் பிரகாஷ்.

ஏதோ நினைத்தவன் போல மீண்டும் அவளை நோக்கி, ''நாளைக்கும் இதுபோலவே வாங்கி வந்து விடு நயனதாரா. உனக்கும் சேர்த்து, இன்னும் நாலைந்து நாட்களுக்கு, நம் இருவருக்குமே வெளியே போய்ச் சாப்பிட நேரம் இராது. சாப்பாட்டுக்குப் பணம் 'பெட்டிகாஷி'ல் எடுத்துக் கொள்'' என்றவன் அவளது பதிலைப் பற்றிய எண்ணமே இல்லாமல் மீண்டும் வேலையில் முனைந்து விட்டான்.

சிரிப்பதா, கோபப்படுவதா என்று புரியாமல் சற்று நேரம் நின்று விட்டுத் தன் வேலையைத் தொடங்கினாள் நயனதாரா.

இரவு தூங்கினானோ இல்லையோ, மறுநாளைக்குள் அவன், தன் வேலையை முடித்து விட்டு, அவளுக்கான வேலைகளை ஆணையிடத் தயாராக இருந்தான்.

மறுநாள் நயனதாரா அலுவலகம் சென்ற போது, பிரகாஷின் அறையில் ஜி.எம்.மும் இருந்தார்.



அவருக்கு அளித்த சில வேலைகளின் தொடர்பாக ''நான் இங்கே இல்லாவிட்டால் என்னென்ன வேலைகளை எல்லாம் ஏற்றுப் பார்ப்பீர்களோ அதுபோல நடந்து கொள்ளுங்கள். முடிந்தவரை என் வேலைக்கு இடையூறு வராமல் பார்த்துக் கொள்ளுங்கள்'' என்று கூறி அவரை அனுப்பி வைத்தான்.

முஸ்தீபுகள் எல்லாம் பலமாக இருக்கின்றனவே என்று எண்ணியபடி, வழக்கம் போல் குறிப்பு நோட்டும் பென்சிலுடன் அவனிடம் சென்றாள் நயனதாரா.

''முதலில் இவைகளுக்கு வேலையில்லை, நயனதாரா. அதனால் இரண்டையும் மேசை மேல் வைத்து விட்டு நான் சொல்வதைக் கவனி'' என்றான் அவன்.

அவன் 'நயனி' என்று அழைத்து, வீட்டு மனிதர்கள் போலான நெருக்கத்தைக் காட்டவே, அதைத் தவிர்க்க எண்ணி முழுப்பெயர் சொல்லி அழைக்கச் சொன்னவள் நயனதாரா தான். ஆனால் அவனது 'நயனி' பழகி விட்டதாலோ என்னவோ, அவன் 'நயனதாரா' என்று நீட்டி முழக்குவது அவளுக்குக் கொஞ்சமும் பிடிக்கவே இல்லை. பழையபடி 'நயனி' என்றே கூப்பிடு என்று சொன்னாலும் இங்கிதமற்றுத் தெரியும் என்பதால் அவனது அழைப்பைப் பேசாமல் சகித்தாள் அவள். அவளுக்குப் பிடிக்கவில்லை என்று அறிந்ததாலேயே வேண்டுமென்றே நீட்டி முழக்குகிறானோ என்று ஒரு சந்தேகமும் அவளுக்கு உண்டு.

''ரகசியக் காப்புப் பிரமாணம்'' என்றால் என்னவென்று உனக்குத் தெரியுமா, நயனதாரா?''

''ம்.. மந்திரிகள் பதவி ஏற்கும் போது, கவர்னர், அவர்களுக்கு ரகசியக் காப்புப் பிரமாணம் செய்து வைப்பார்'' என்று சிறு திகைப்புடன் பதிலளித்தாள் அவள்.

''எதற்கு?''

''பாதுகாப்பு, மற்றும் அரசாங்க ரகசியங்களை வெளியிடாது காப்பதற்காக என்று நினைக்கிறேன்...''

''அதேபோல நீயும் இந்த வேலை தொடர்பான எதுவும் வெளியே தெரிந்து விடாமல் பாதுகாக்க வேணடும், நயன தாரா. உன்னால் முடியுமா?''

''முடியும்'' என்று அவள் தெரிவித்த பின், வேலை பற்றிய விவரங்களைச் சொல்லத் தொடங்கினான் பிரகாஷ்.

சென்னையில் ஒரு பெரிய தொழில் நிறுவனம் இருக்கிறது. அதில் பிரகாஷுக்கும், அவனுடைய தந்தைக்கும் கணிசமான பங்குகள் இருக்கின்றன.

ஆனால் அந்த நிறுவனத்தின் சேர்மன், பெரும்பாலும் தன் ஆட்களையே டைரக்டர்களாக நியமித்து நிறுவனத்தின் பணத்தைப் பல வகையிலும் சுரண்டிக் கொண்டு இருக்கிறார்.

பங்குதாரர்களுக்கு டிவிடன்டே கொடுப்பது இல்லை. கம்பெனி நஷ்டத்தில் இருப்பது போல ஒரு பிரமையை உண்டாக்கி இருக்கிறார். கம்பெனிக்குச் சொத்து பத்துகள் என்று பெரிதாக இல்லாதது போல ஒரு தோற்றம்.

ஒருவரவும் இல்லாமல் பலகோடி ரூபாயை இந்தக் கம்பெனியில் முடக்கி வைத்திருப்பதை விட, அந்தப் பங்குளை விற்கலாம் என்றாலோ பங்குகளின் விலை வாங்கியதில் பாதியாகப் பாதாளத்தில் இருந்தது.

இந்த நஷ்ட மாயை, சொத்தின் பிரமை இரண்டுமாகப் பங்கு மார்க்கெட்டில் கம்பெனியின் விலையை வீழ்த்தி விட்டன.

''ஆனால் எனக்கு ஒரு சந்தேகம். எனவே ரகசியமாக விசாரித்தேன். கிட்டத்தட்டப் பத்து ஆண்டுகளாக அவர் கம்பெனியின் சொத்து மதிப்புக்களை மாற்றவே இல்லை. ஆடிட்டரைக் கையில் போட்டுக் கொண்டு இந்த வேலை செய்திருக்கிறார்கள். கம்பெனியின் சொத்துக்களுக்கு இன்றைய விலை போட்டால் பத்து மடங்குக்கு மேல் மதிப்பு அதிகமாகியிருக்கிறது'' என்றான் அவன்.



இப்போது வைரத்தை வைரத்தால் அறுக்க இருக்கிறான் பிரகாஷ்.

ஏற்கனவே நிறுவனத்தில் இருபத்தெட்டு சதவீதப் பங்குகள் பிரகாஷிடமும் அவன் தந்தையிடமுமாக இருக்கின்றன.

கம்பெனி சேர்மனிடம் எந்த வகையிலும் தொடர்பற்ற பங்குதாரர்களைத் திரட்டி, அவர்களிடமிருக்கும் பங்குகளை வாங்கியோ, அல்லது அவர்களைத் தன் புறம் திருப்பியோ ஐம்பது சதவீதப் பங்குகளைச் சேர்த்து விட்டால் அதன் பின் அந்த நிறுவனத்தின் அதிகாரத்தைப் பிரகாஷ் கைப்பற்றி விடலாம்.

குடியினும், கெட்ட கேளிக்கையிலுமாக விரயமாகும் பணத்தைக் கொண்டு நிறுவனத்தை லாபகரமாக நடத்தி அதன் மதிப்பை உயர்த்துவதோடு பங்குதாரர்களுக்கும் டிவிடன்ட், போனஸ் என்று கொடுக்கலாம்.

அந்த நிறுவனத்தின் தனிப்பட்ட பங்குதாரர்களில் கொஞ்சம் கணிசமான அளவு பங்கு உடையவர்களில் நூற்று இருபது பேர்களின் முகவரி கிடைத்திருக்கிறது. அவர்கள் அத்தனை பேருக்கும், கடிதம் எழுத வேண்டும். வந்த பின் விவரம் கூறி அவன் பக்கம் சேர்க்க வேண்டும்.

இவையெல்லாம் இப்போது விரைவாகச் செய்ய வேண்டிய வேலைகள். நிறுவனத்தின் தற்போதைய சேர்மன் இதை உணர்ந்து மாற்று ஏற்பாடு எதுவும் செய்ய அவகாசம் இராதபடி அவசரமாகச் செய்ய வேண்டிய வேலைகள்.

பிரமிப்போடு பார்த்துக் கொண்டிருந்தவளை நோக்கி முறுவலித்தான் பிரகாஷ். ''கூட்ட அழைப்புக்கான கடிதம் நானே எழுதி வைத்திருக்கிறேன். அதைக் கம்ப்யூட்டரில் ஸ்டோர் பண்ணி விடு. அப்புறம் இந்த முகவரிகள் அத்தனைக்கும் ஒரு பிரின்ட் அவுட் எடுத்து விடு. நூற்று இருபது பேருக்கும் ஒரே நாளில் கடிதம் அனுப்ப வேண்டும். கடிதங்களை தயார் பண்ணி விட்டுச் சொல்லு'' என்றான் அவன்.

கடிதங்கள் ரெடியாகி அனுப்பியதும், சொத்து மதிப்புப் பட்டியல் பல காப்பி எடுக்கச் சொன்னான்.

'மீட்டிங்'கில் பேசுவதற்கு சொற்பொழிவு ஒன்று தயாரா யிற்று.

ஓட்டல் ரிசர்வேஷன், மாலை விருந்துக்கான மெனு, நாள், நேரம் ஒன்று விடாமல் அவன் திட்டமிடுவதைக் காணக் காண அவனிடம் மதிப்பு உண்டாயிற்று நயனதாராவுக்கு.

கூட்டத்திற்கு வருவதாக ஒத்துக் கொண்டு கடிதங்கள் வந்து குவியலாயின.

இத்தோடு எண்பத்தி ஒன்பது ஒப்புதல் கடிதங்கள் ஆயின. இனி இது.. என்று அடுத்த கடிதத்தைப் படித்த நயன தாரா அதிர்ந்து போனாள்.

ஏனெனில் அது ஒரு மிரட்டல் கடிதம். ''தொடர்ந்து உயிர் வாழும் ஆசை இருந்தால் இந்த முயற்சியை இத்தோடு விட்டு விடு. இல்லாவிட்டால் பத்தாம் தேதிக்கு மேல் உன் உடலில் உயிர் இராது'' என்று பயங்கரமாக எச்சரித்தது கையெழுத்தில் லாத அந்தக் கடிதம்!

## 8

கடிதத்தைப் படித்ததும் நயனதாரா வெகுவாக மிரண்டு போனாள்.

''சா...ர்'' என்று அழாக்குறையாகப் பிரகாஷிடம் நீட்டி னாள்.

அவள் முகத்தைப் பார்த்து விட்டு, ''என்னம்மா?'' என்று கடிதத்தை வாங்கி அவசரமாகக் கண்களை அதன் மேல் ஓட்டி யவன் சட்டென வாய் விட்டுச் சிரித்தான்.



''எதற்குச் சிரிக்கிறீர்கள்?'' என்று அவள் எரிச்சலும் கோபமுமாகக் கேட்கவும், ''குலைக்கிற நாய் கடிக்காது என்ற பழமொழி தெரியுமல்லவா, நயனி?'' என்று பதில் கேள்வி கேட்டான் பிரகாஷ். ''நாள் குறித்துச் சொல்லி விட்டுக் கொல்ல இவன் என்ன அழகர் மலைக் கள்ளனா? கையெழுத் துப் போடக் கூடத் தைரியம் இல்லாத கோழை!'' என்றான் அலட்சியமாகவே.

''ஆ...னால் ஆனால் இது உண்மையாக இருந்தால் என்ன சார், செய்வது? அடியாட்கள், பணத்துக்காக யாரை வேண்டுமானாலும் கொலை செய்கிற தொழில்ரீதிக் கொலை காரர்கள் என்று எத்தனை படங்களில் பார்க்கிறோம்? எத் தனை புத்தகங்களில் படிக்கிறோம்?'' என்றாள் நயனதாரா நடுக்கத்துடனேயே.

அவள் மெய்யாகவே அஞ்சுவதை உணர்ந்ததும், அவ ளது நடுங்கும் கைகளைப் பற்றித் தன் கரங்களுள் வைத்துச் சற்று நேரம் பேசாதிருந்தான் பிரகாஷ்.

அவளது நடுக்கம் சற்றுக் குறையவும், ''பார், நயனி. யானை மிதித்துப் பிழைத்தவனும் உண்டு; புல் தடுக்கிச் செத்த வனும் உண்டு என்று ஒரு பழமொழி உண்டு. அவரவருக்கு விதித்த காலம் முடியுமுன் யார் என்ன முயன்றாலும் ஒருவ ரைச் சாகடித்து விட முடியாது. அதேபோலப் போகிற நேரம் வந்து விட்டதானால், எப்பேர்ப்பட்ட பாதுகாப்புக் கோட் டைக்குள் சென்று ஒளிந்தாலும், அந்தக் கோட்டை இடிந்து விழுந்தாவது அவர் அழிவது நடந்து விடும். ஆனால் இதற் கெல்லாம் பயந்து எதையும் விட முடியாதும்மா'' என்று இத மான குரலில் எடுத்துரைத்தான் பிரகாஷ்.

''அப்படியானால் இதற்காக எதுவுமே செய்யப் போவ தில்லையா?'' என்று அகன்ற விழிகளில் அச்சத்தைத் தேக்கிக் கேட்டாள் அவள்.

அவன் பார்வை கனிந்தது. ''எப்போதும் எச்சரிக்கை யோடு இருக்கிறேன். சரிதானா? வேண்டுமானால் இந்தக்

கடிதத்தைப் போலீசாரிடம் கொடுத்து, வீட்டுக்கும் ஆபீசுக்கும் போலீஸ் காவல் போட்டு விடுகிறேன். இப்போது திருப்தி தானா?''

கொஞ்சம் மனசு சமாதானம் அடைந்த போதும் நயனதாராவினால் முழுக்க முழுக்க நிம்மதியாக இருக்க முடியாமலே போயிற்று. ஒவ்வொரு நாளும் அவனை அலுவலகத்தில் சந்திக்கும் வரை மனம் அமைதியின்றித் தவித்தாள். அலுவலக நேரத்தில் எங்கேனும் வெளியே சென்றானென்றால் அவனோடு தானும் ஒட்டிக் கொண்டு செல்ல முயன்றாள். அவன் மறுக்காமல் அழைத்துச் சென்ற போது, நிறுத்தி இறங்க வேண்டிய இடங்களில் அவனுக்கு முன்பாக இறங்கி, பாதுகாப்பு கமாண்டோ போலப் பார்வையால் அங்கும் இங்கும் அலசினாள். பிரகாஷின் கேலிப் பார்வையை அவள் கண்டு கொள்ளவே இல்லை. மறுநாள் அவனைப் பார்க்கக் கூடுமா என்ற பயத்துடனேயே வீடு திரும்பினாள். தினமும் அவனுக்காகவே ஓராயிரம் முறை செத்து உயிர் பிழைத்தாள்.

யாரோ ஒருவன்; எந்தவித சொந்தமும் இல்லாத அன்னியன்; அதிலும் எட்ட நின்று பழக வேண்டியவன் என்று முடிவு செய்த ஒருவனுக்காக ஏன் இப்படிப் பயந்து நடுங்குகிறோம் என்று யோசித்துப் பார்த்தும் அவளுக்கே அது புரியவில்லை. கடைசியாக, யாராயிருந்தாலும் மனித உயிர் ஆபத்து என்று தெரிந்த பின் அலட்சியமாய் இருக்க அவளால் ஆகாது. அவ்வளவே என்று தனக்குத் தானே ஒரு காரணத்தைக் கற்பித்துக் கொண்டாள் அவள்.

அவளுக்கு வாக்குக் கொடுத்தது போலவே போலீசில் கடிதத்தைக் காட்டித் தனக்கு ஒரு பாதுகாப்பைப் பிரகாஷ் ஏற்படுத்திக் கொண்டது நயனதாராவின் கவலையைப் பெருமளவு குறைத்தது. குறைந்தபட்சம் காலையில் அவனைக் கண்ணால் பார்ப்போமா என்ற கலக்கம் தீர்ந்தது. அத்தோடு பிரகாஷும் சொன்னான். கொஞ்ச நாளாகவே அவனுக்கு நல்ல காலம் தானாம். நன்மைக்கு மேல் நன்மைதான் வந்து



கொண்டு இருக்கிறதாம். இந்தச் சமயத்தில் கெடுதல் ஏதும் நடக்காதாம். அடித்துச் சொன்னான்.

பகலிலும், சதா சலித்த அவளது பார்வையிலும் வித்தியாசமாக எதுவும் படாது போகவே, மெல்ல மெல்ல அமைதியுறலானாள் அவள்.

இந்நிலையில் பிரகாஷ் கூட்டிய கூட்டம் நடத்தப்பட வேண்டிய நாளும் வந்தது.

இருவருமாகக் காலையில் ஒருதரம் சென்று, ஓட்டலில் ஏற்பாடுகளை மேற்பார்வையிட்டுச் சென்றார்கள்.

முதல் தடவை அந்த ஓட்டலுக்குள் செல்லும் போது மனதுக்குக் கஷ்டமாக இருந்த போதும் தொடர்ந்து நாலைந்து முறை வந்து சென்ற பிறகு அந்த வேதனை ஒருவாறு மறைந்து போயிற்று. மேலும் மனிதர்கள் செய்யும் தப்புக்கு ஓட்டல் என்ன செய்யும்? அந்த மனிதர்களுடனேயே சாதாரணமாகப் பேசிப் பழகும் நிலை வந்து விட்டதே.

கூட்டம் நடைபெறப் போகும் அறை ஏற்கனவே கிட்டத்தட்ட அலங்காரம் செய்யப்பட்டிருந்தது. நெருக்கியடித்தாற் போல இல்லாமல், அதே சமயம் சுமார் நூற்றைம்பது பேருக்கு இருக்கை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அங்கங்கே அழகிய கிண்ணங்களில் பெரிய பெரிய பூங்கொத்துகள் எழிலோடு வீற்றிருந்தன.

இரண்டு மூன்று முறை சுற்றிப் பார்த்த பிரகாஷ், அந்த அறையின் அலங்காரப் பொறுப்பைக் கவனித்துக் கொண்டிருந்தவனை அருகில் அழைத்தான்.

''இந்தப் பூங் கொத்துகள் இப்படியே அடுக்கப்பட்டே வந்தவைகளா?'' என்று விசாரித்தான்.

''ஆமாம் சார்'' என்றான் அவன்.

''நினைத்தேன்'' என்றான் பிரகாஷ்.

புரியாமல் பார்த்தவனிடம், "பாரப்பா, இந்த அறையின் நிறம் கவனி. திரைச்சீலையின் வண்ணம் பார். இந்தப் பூங் கொத்துக்களில் அதே வண்ண ரோஜாக்கள் வெளியே நீட்டிக் கொண்டு இருக்கின்றனவே. சுவரின் பின்னணியில் இவை இருப்பதே கண்ணில் படாதே! ஒன்று அந்தப் பூக்களை அகற்றி விட்டு எதிர்மறை வண்ணப் பூக்களைக் கொணர்ந்து சொருகு; அல்லது இந்தப் பூக்களை உட்புறமாய், இலைப் பின்னணிக்கு மாற்றி, உள்ளிருக்கும் மற்ற வண்ணப் பூக்களை வெளிப்புறம் கொண்டு வா" என்று உத்தரவிட்டான்.

மிகுந்த ஆச்சரியத்துடன் பிரகாஷை நோக்கினாள் நயன தாரா. இவ்வளவு கவனிக்கிறானே, அவனது வீடு கூட எல் லாம் அவனது சொந்த ஐடியாவேதான் போலும் என்று யோசிக்கையில், அவன் தன்னிடமும் அதே கவனம் செலுத்தி யிருப்பது தெரிந்தது.

அலையலையாய்ப் படிந்து பளபளத்த சிகையமைப்பு, அளவாய்க் கத்தரித்த மீசை, நல்ல ஷேவிங்கில் வழவழத்த முகச் சருமம். அழகாக முடிச்சிட்ட டை, சுருக்கம் இல்லாத முழுக்கைச் சட்டை, துளி அழுக்கு இல்லாமல் அளவாக வெட் டப்பட்டிருந்த சுத்தமான நகங்கள், பளபளத்த காலணிகள்!

இவன் எல்லாவற்றிலும் நூறு சதவீதம் தேடுகிறவன். தன்னிடமே கூட. ஆனால் ஒன்றே ஒன்றைத் தவிர அந்த ஒன்று நினைவு வர அவள் மனம் வாடியது.

"என்ன, பாஸ் மார்க் தேறுவேனா?" என்று கிண்டலாகக் கேட்டான் பிரகாஷ்.

அவள் பார்த்ததைக் கவனித்திருக்கிறான்! சற்று முன் நினைத்த நூறு சதவீதமும்.. தொடர்ந்த எண்ணமும் மீண்டும் நினைவு வர, அவள் முகம் கருத்தது. "நீங்களெல்லாம் ரொம் பப் பெரிய மனிதர் சார். உங்களுக்கு மதிப்பெண் போடுகிற தகுதி இந்த முட்டாளுக்கு ஏது?" என்று கசப்புடன் பதிலிறுத் தாள் நயனதாரா.



அவள் அருகே வந்து, "அன்று உன்னை எப்படியோ ரொம்பவும் பாதித்திருக்கிறேன் என்பது புரிகிறது. முதலில் தப்பாக நினைத்ததற்காக என்னை மன்னித்து விடு" என்று தணிவான குரலில் கேட்டான் அவன்.

கொலை செய்து விட்டுப் பிணத்திடம் 'பிணமே பிணமே தெரியாமல் கொன்று விட்டேன், என் பிழையைப் பொறுத்துக் கொள்' என்று மன்னிப்புக் கேட்பதால் என்ன பயன்?

பிரகாஷ் செய்த பிழையும் கொலைக்குச் சமம்; ஆவலு டன் காத்திருந்த இளமனதைக் கொன்றது மன்னிக்கத்தகாத குற்றம் என்பதுதான் நயனதாராவின் முடிவு. ஆனால் அதைச் சொல்லி வாதிடவோ, அன்றி அவன் கோரிய மன்னிப்பை வழங்கவோ விருப்பமற்று, "சார், இத்தனை பேர் நடுவில் இது என்ன பேச்சு? வந்த வேலையைப் பாருங்கள்" என்று கூறி விலகிச் சென்றாள்.

வழக்கம் போலவே அவளை அதற்கு மேல் வற்புறுத்த வில்லை அவன்.

அவன் ஓட்டல் நிர்வாகத்திடம் பேசிக் கொண்டிருந்த போது நயனதாராவின் உள்ளம் முந்தைய பேச்சையே நினைத் தது. எப்போதுமே பிரகாஷ் இப்படித்தான் எதையுமே அந்த நிமிடத்திலேயே பேசி முடித்தாக வேண்டும் என்று அவளிடம் கெடுபிடி செய்தது இல்லை. ஆனால், அத்தோடு அதை, அடி யோடு விட்டு விடுவதும் இல்லை. 'உறுமீன் வருமளவும் வாடியிருக்கும் கொக்கு' போல, சரியான வாய்ப்பு கிடைக்கிற போது அந்தப் பேச்செடுக்காமல் விடுவதும் இல்லை.

கருணா போல எத்தனை பேருக்குக் காதல் பொருத்த மான இடத்தில் தோன்றி இலகுவாக நிறைவேறுகிறது! இவள் வாழ்வு மட்டும் இப்படி விசித்திரமாய்ப் போவானேன்? விசித் திரமும் வேதனையுமாக.

வரும் விருந்தினருக்குச் சிற்றுண்டி, பானம் முதலிய வற்றை, எப்போது, என்னவிதமாய் அளிப்பது என்பது பற்றிக்

கடைசித் தரமாக விவரித்துவிட்டு கூட்டம் நடக்கும் போது அவனை நெருங்குவது கடினம் என்பதால் மேற்கொண்டு தேவைப்படும் ஆணைகளை நயனதாராவிடமே பெறுமாறு கூறி முடித்தான் பிரகாஷ்.

திட்டங்களில் ஏதேனும் மாற்றம் இருந்தால் அங்கே யாரை அணுக வேண்டும் என்று நயனதாராவுக்குக் காட்டிக் கொடுத்ததோடு அங்குள்ள வேலை முடிந்துவிட இருவரும் கிளம்பினர்.

கார் செல்லுகையில், கூட்டம் பற்றிய அவளது கடைசி நேரச் சந்தேகங்களைத் தீர்த்து முடித்த பின், பிரகாஷ் மீண்டும் பழைய பேச்செடுத்தான். "உன்னை அருகிலிருந்து பார்க்கப் பார்க்க, அந்த முதல் நாள் மர்மம் மேலும் மேலும் பெரிதாகிக் கொண்டே போகிறது, நயனதாரா. யாரையும் பார்த்த மாத்திரத்தில் இலகுவாகத் தன் வசமிழந்து அந்த அளவுக்குப் போவது உன் இயல்பே அல்ல. பின்னே, அன்று ஏன் அப்படி நடந்து கொண்டாய்? என்னை வீழ்த்திக் காட்டுவதாக யாராவது தோழிகளிடம் சவால் விட்டாயா? நான் உன் அளவை மீறி போகவும் பயந்து ஓடிவிட்டாயா?... சொல்லு நயனி."

வெறும் சவாலுக்காக அவனோடு உடல் ஒட்டி ஆடி விடுவாளாமா? அவளைப் பற்றி ரொம்பத் தெரிந்தாற் போலப் பெரிய பேச்சுவேறு!

பதிலேதும் கூறாமல் தலையை வெளிப்புறம் திருப்பிக் கொண்டாள் அவள்.

மீண்டும் பேசியபோது அவன் குரலில் சிறு கண்டிப்பு இருந்தது. "நயனதாரா, நான் அறிந்து கொள்ளத்தான் விரும்புகிறேன். ஆனால் அதற்கு நீயும் கொஞ்சம் இடம் தர வேண்டுமில்லையா?"

சீறிக் கொண்டு வந்தது அவள் பதில். "எங்கே? உங்கள் இடத்திலா? என் இடத்திலா?



# 9

"ஏ.. ஏய் ஏய் நயனி, நீ அப்படிப்பட்டவள் அல்ல என்று தெரிந்து கொண்டு விட்டேன் என்றேனில்லையா? தப்பாக எண்ணியதற்கு மன்னிப்பும் கேட்டுவிட்டேனே. அதற்கு மேலும் கோபமா? பாரம்மா. நான் இவ்வளவு தூரம் உன்னிடம் ஏன் கேட்கிறேன் என்று புரியவில்லையா? நான் உன்னோடு பழக விரும்புகிறேன், உன்னை அறிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்; இன்னும் வாழ்விலே கூட..."

"ப்ளீஸ் சார்!" என்று வேதனையும் வெறுப்புமாகக் குறுக்கிட்டாள் நயனதாரா.

"என்னம்மா?"

என்னம்மாவாம்! பெரிய உருக்கம்தான். நாலுநாள் அருகில் இருந்து பார்த்ததும் ரதியாகத் தோன்றுகிறதாக்கும்! நாலு நாள் பிரிந்திருந்தால் இதே வேகத்தில் மறந்தும் போய்விடும். மற்றபடி அவன் மனதில் மட்டும் கொஞ்சமேனும் உரிய பாதிப்பிருந்தால் அன்று அவளிடம் அப்படிக் கேட்க முடியுமா? அல்லது அடியோடு மறக்கத்தான் முடியுமா?

தன் அந்தரங்கத்தை வெளியிடாமல் இதையெல்லாம் சொல்லி வாதாட முடியாத நிலை வேறு அவளுக்கு எரிச்சலைக் கூட்டியது.

ஓர் ஆத்திரப் பெருமூச்சை வெளியிட்டு, "பாருங்கள், சார் நான் இன்றைய 'மீட்டிங்' வெற்றிகரமாக நடக்க வேண்டும் என்று அதைப் பற்றியே நினைத்துக் கொண்டு இருக்கிறேன். தயவு செய்து கண்டதைப் பேசி என் மூடைக் கெடுக்காதீர்கள்" என்றாள் மனதை மறையாத குரலில் அவள்.

நம்பாத பார்வை ஒன்று அவள் மேல் படிந்து மீண்டும் சாலைக்குத் திரும்பியது. ''கூட்டம் வெற்றிகரமாகத் தான் நடக்கும். அதற்குரிய ஏற்பாடுகளை எல்லாம் சரிவரச் செய்து முடித்து விட்டதால் அதைப் பற்றிக் கவலைப்பட ஒன்றுமில்லை. ஆனால் உன்விருப்பம்'' என்று வழக்கம் போலவே விட்டுக் கொடுத்தான் பிரகாஷ்.

மீண்டும் இந்தப் பேச்சு எடுப்பான் என்று தெரிந்த போதும், அதுவரை நல்லபடியாக மூச்சுவிடலாம்...

திடுமென கார் நிற்கவும் திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தாள் நயனதாரா. அவள் வீடு!

''சார், ஆபீஸ் போகவில்லை?''

''இல்லை. நீ கொஞ்சம் ஓய்வெடுத்துக் கொண்டு, நன்றாக டிரஸ் பண்ணிக் கொண்டு மூன்று மணிக்குத் தயாராய் இரு. கார் அனுப்புகிறேன்'' என்று இறங்குவதற்காகக் கார்க் கதவைத் திறந்தான் பிரகாஷ்.

இப்போது இவனை வீட்டுக்கு அழைக்க வேண்டும்? இந்த அம்மா வேறு ஒரேயடியாக உருகத் தொடங்கி விடுவார்களே!

''நீங்கள் என்னை ஏதாவது பஸ் நிறுத்தத்திலேயே இறக்கி விட்டிருக்கலாம். எதற்காக வீண் சிரமம்?'' என்றாள் அவள்.

''என்ன சிரமம்? தோளிலா சுமந்து வந்தேன்? கார் தானே...'' என்று இறங்கி நின்று அவள் வீட்டைப் பார்த்தான். ''இதுதான் உன் வீடா?''

காரில் இருந்து வேண்டாவெறுப்பாய் இறங்கிக் கார்க்கதவைக் கண்ணாடி ஏற்றிச் சாத்திக் கொண்டிருந்த நயனதாராவுக்கு எரிச்சல் வந்தது. ''தெரிந்து தானே கொண்டு வந்து விட்டீர்கள்?'' என்றாள் வெடுக்கென்று.



அன்னை வந்து சேருமுன் இவன் கிளம்பி விட மாட்டானா என்றிருந்தது அவளுக்கு.

சிறுவியப்புடன் அவளை நோக்கினான் பிரகாஷ். ''மீட்டிங் பற்றி அனாவசியமாய் மனதில் இறுக்கமாய் இருக்கிறாயே. சும்மா, கொஞ்சம் வெறும் பேச்சுக் கொடுக்கலாமே என்று பார்த்தேன். உன் வீட்டில் ஒரு டீ கிடைக்குமா, நயனி?''

''எங்கள் வீட்டில் டீயே கிடையாது, சார். கா..பி தான்.. அதுவும் இந்த நேரத்தில்...'' என்று சொல்லிக் கொண்டு இருக்கும்போதே அவள் அஞ்சிக் கொண்டிருந்ததற்கிணங்க, வீட்டுக்கதவு திறந்தது.

''யா..ர்? நயனியா? என்னம்மா இந்த நேரம்... இது.. இவர் யார்?'' என்று விசாரித்தபடி முன்னே வந்து கேட்டைத் திறந்தாள் கவுசல்யா.

தாயின் சுபாவம் அறிந்த நயனதாராவுக்குப் பிரகாஷை அன்னைக்கு அறிமுகம் செய்து வைக்கவே பிடிக்கவில்லை.

ஆனால் அவள் புறம் ஒரு பார்வையைச் செலுத்திய பிரகாஷ், அவள் பேசாதிருக்கவும், தானே பேசத் தொடங்கினான். ''என் பெயர், பிரகாஷ் அம்மா.. நயனதாராவின் ஆபீசில் மேனேஜிங் டைரக்டர். முகஜாடையைப் பார்த்தால், நீங்கள் நயனதாராவின் தமக்கை அல்லது தாயாராக இருக்க வேண்டும்'' என்று கூசாமல் ஐஸ் வைத்தான்.

அவ்வளவுதான். கவுசல்யாவுக்கு உச்சி குளிர்ந்து விட்டது. முகமெல்லாம் புன்னகை பரவ, ''நான் நயனிக்கு அம்மா தான் சார், நயனி என் மூத்த பெண். சின்ன வயதிலேயே பிறந்து விட்டதால்.. உள்ளே வாருங்கள் சார். ஒரு வாய் காஃபி குடித்து விட்டுப் போகலாம்'' என்று உபசாரம் செய்யலானாள்.

''அம்மா அவர் டீ தான் குடிப்பார். அதனால்...'' என்று தாயின் விருந்தோம்பலுக்கு அணைகட்ட முயன்றாள் மகள்.

''சரி டீயே போட்டுக் கொடுக்கலாம்... அன்றைக்கு நீயும் நர்மதாவும் செய்த கேக் வேறு இருக்கே...''

''அம்மா! அவருக்கு நம் வீட்டு டீ பிடிக்காது!''

''அதை நானல்லவா சொல்ல வேண்டும்? நீங்கள் வாருங்கள், அம்மா. உள்ளே போகலாம். உங்கள், டீயையும் கேக்கையும் ருசி பார்க்காமல் நான் போகப் போவது இல்லை. ஆனால் ஒரே ஒரு சின்ன உதவி நான் 'சார்' இல்லை. என் பெயர் பிரகாஷ். நீங்கள் அப்படி அழைப்பதுதான் எனக்கு மகிழ்ச்சி''

பேசியபடியே இருவரும் உள்ளே சென்று விட, செல்லிடம் அற்ற ஆத்திரத்துடன் உள்ளூரப் புகைந்தபடி அவர்களைப் பின்தொடர்ந்தாள் நயனதாரா.

பிரகாஷோடு உட்கார்ந்து பேசி உபசாரம் செய்ய, நயனதாராவுக்கு மனமில்லை. டீ போடுகிற சாக்கில் ஒதுங்கி விடலாம் என்றாலோ, அப்புறம் அம்மாவின் விருந்தோம்பல் மதிய உணவு, மறுநாள் விருந்து என்று தொடர் கதையாகி விடும் என்பது தெரிந்ததால், கவுசல்யாவை டீ போட அனுப்பி விட்டு, 'கேக்'கையும் இரண்டு முறுக்கையும் தட்டில் எடுத்துப் போய் அவன் முன்னே டீபாயில் வைத்தாள்.

அவளது உபசாரத்துக்காகக் காத்திராமல் கொஞ்சம் கேக்கை விண்டு சாப்பிட்டு விட்டு, ''ஆகா! வெகு ருசி!'' என்று பாராட்டினான் பிரகாஷ். ''இந்த கேக் நீயும் யாரோவும் சேர்ந்து செய்த கேக் என்றார்களே, உன் அம்மா. பிரமாதம்.... அனேகமாக, நான் ரொம்பவும் அதிர்ஷ்டக்காரனாகி விடுவேன் என்று நினைக்கிறேன்''

ஒரு காலத்தில் குறிப்பு காட்டும் இந்தப் பேச்சிலேயே அவள் பூரித்துப் போயிருக்கக் கூடும். ஆனால் இன்றோ பொடியும் பூடகமும், குறிப்பும் சூசகமும் எல்லாமே எரிச்சலைத்தான் ஏற்படுத்தின. போதும். இவன் சங்காத்தமே வேண்



டாம். ஏதோ அலுவலக அளவில் நல்ல முதலாளியாக நடந்து கொள்கிறான். அந்த அளவில் நின்று கொள்வதே நலம்.

அவன் உண்பதை ஒரு மரக்கட்டை முகத்தோடு, பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள் அவள்.

வாசலில் ஒரு கடமுடா கேட்டது. சைக்கிளை அவசரமாக ஸ்டான்ட் போட்டு விட்டு தடதடவென்று உள்ளே வந்தான், வீட்டின் கடைசி மெம்பர், ''ஹாய், நயன், வாசலில் பார்த்தாயா? சூப்பர் கார். யாரோ நம் வீட்டின் முன்னால் நிறுத்தி விட்டுப் போயிருக்கிறான். கலர் பார்த்தாயா? சில்வர் கிரே பென்ஸ் வண்டி. உட்கார்ந்தால் மிதப்பது போலப் போகும்...''

தமக்கையின் ஜாடைகளைக் கவனிக்காமல் அவன் பேசிக் கொண்டே செல்ல முறுவலித்து, ''அது என் கார். நான் உன் அக்கா நயனியின் 'பாஸ்''' என்று இரண்டாம் தடவையாகத் தன்னைத்தானே அறிமுகம் செய்து கொண்டான் பிரகாஷ்.

'ஓ! அப்படியா? கிளாட்டு மீட்யூ சார். என் பெயர் நரேன் சார். நரேந்திரன், நரேன் என்பார்கள். இந்த மாதிரி ஒரு கார் கிடைக்க, நீங்கள் ரொம்ப லக்கி சார்''

''வருகிறாயா? ஒரு 'ரைட்' போய் விட்டு வரலாம்?''

வாயைப் பிளந்த தம்பி, சமாளித்துச் சம்மதம் சொல்லு முன் அவசரமாகக் குறுக்கிட்டாள் நயனதாரா. ''என்னடா, கல்லூரி இல்லை? கட் அடித்து விட்டுச் சுற்றினால் அப்பாவுக்குப் பிடிக்காது, தெரியாது?'' என்று அதட்டினாள்.

''ச்சு.. லெக்சரர் வரவில்லை. அதனால் மதியம் ஃப்ரீ.. ஆனால் அதை விடு'' என்று தமக்கை பேச்சை அலட்சியப்படுத்தி விட்டு, ''நிஜமாகவா சார் சொல்லுகிறீர்கள்?'' என்று தன் கனவுக் காரின் சொந்தக்காரனிடம் கண்கள் பிரகாசிக்கத் திரும்பினான். ''நிஜமாகவே என்னை ஒரு சுற்று அழைத்துப் போகிறீர்களா?''

''இல்லை, வேண்டாம்'' என்றாள் நயனதாரா குரலில் கண்டிப்புடன்.

''ஏன்?''

''அது.. வந்து இப்போது நீ உட்கார்ந்தால் கார் அழுக்காகி விடும்'' என்று வாய்க்கு வந்த காரணத்தைச் சொல்லித் தடுக்க முயன்றாள் அவன் சகோதரி. அவளுக்குத் தன் குடும்பம் பிரகாஷோடு பழகுவது கொஞ்சமும் பிடிக்கவில்லை.

''ஆமாமாம். நீ உட்கார்ந்தே அழுக்காகவில்லை. நான் உட்காருவதால்தானா அழுக்காகி விடும்?'' தன்னைத் தமக்கை அழுக்கென்று சொன்ன ஆத்திரத்தில் தூக்கி எறிந்து பேசினான் நரேந்திரன். ''உங்களுக்குத் தெரியுமா, சார் மூலைக் கடையில் சோப் அதிகம் விற்பதே இவளால் தான். வாரம் இரண்டு சோப். உடம்பில் அவ்வளவு அழுக்கு. தேய்த்துத் தேய்த்து...''

''உனக்கு வருடத்துக்கு ஒரு சோப். அழுக்கைத் தேய்த்தால் தானே?'' என்று திருப்பினாள் தமக்கை.

''இருந்தால்தானே தேய்க்க. எனக்கு இயற்கையிலேயே சுத்தமான உடம்பு. உன்னைப் போலவா?''

''ஷ்... ஷ்... உங்கள் வழக்கமான சண்டைக்கு வேறு நேரம் கிடைக்கவில்லையா? பிரகாஷ் சார் உங்களைப் பற்றி என்ன நினைப்பார்?'' என்று கண்டித்தபடி டீயைக் கொண்டு வந்து வைத்தாள் கவுசல்யா.

''நினைப்பதற்கு என்னம்மா? இந்த மாதிரி ஜாலியாகச் சண்டை போடக் கூடப் பிறந்தவர்கள் என்று யாருமே இல்லையே என்ற ஏக்கம் தான். மற்றபடி...'' என்று நயனதாராவைப் பார்த்தான் அவன். ''உங்கள் பெண் ஆபீசில் காட்டுகிற பந்தா என்ன? இங்கானால் தம்பியோடு மல்லுக்கட்டுகிறாளே!'' என்று சிரித்தான்.

உதட்டைக் கடித்துக் கொண்டு மவுனமானாள் நயனதாரா. இவன் முன்னிலையில் சிறுபிள்ளைத்தனமாக நடந்து கொண்டு விட்டாளே! எல்லாம் இந்த நரேந்திரனால் வந்தது!



நிமிர்ந்து பார்த்து, ''சார், உங்களுக்கு மாலையில் பெரிய வேலை இருக்கிறது. இங்கே வெட்டியாய்ப் பொழுது போக்கிக் கொண்டு இருப்பானேன் என்றுதான் சொன்னேன்'' என்றாள்.

''எப்போதுமே பெரிய வேலைகளுக்கு முன் சற்றும் சம்பந்தமற்ற சின்ன விஷயங்களில் மனதை ஈடுபடுத்தி 'ரிலாக்ஸ்' செய்து கொள்வது நல்லது, நயனதாரா. நீயும் செய்து பார், வருகிறாயா நரேன்?'' என்று டீ கப்பை வைத்து விட்டு எழுந்தான் பிரகாஷ்.

அரைமணி நேரம் கழித்து ஆனந்தமே உருவாய் நரேந்திரனை இறக்கிவிட்டு விட்டு, அவன் கிளம்பிய போது சாப்பிடாமல் போகிறானே என்று வருத்தப்பட்டாள் கவுசல்யா. ''நல்ல பிள்ளை.. பந்தாவே இல்லாமல் எப்படிப் பழகுகிறார்!''

அவன் சொன்னது போல மூன்று மணிக்குக் கார் வந்தது. பளிச்சென்ற உடை தரித்து, காரில் ஏறிச் செல்வது அவளுக்கும் கொஞ்சம் பெருமையாகத் தான் இருந்தது.

ஆனால் அலுவலகம் சென்ற பிறகோ அவளது மன நிலை அடியோடு மாறிவிட்டது.

அலுவலகத்தில், பிரகாஷின் கையிலேயே சேர்ப்பிக்கப் பட வேண்டியது, கூரியர் மூலம் ஒரு கவர் வந்தது.

ஏதாவது 'லெட்டர் பாமா'' என்று ஒரு சிறு சோதனை செய்து விட்டுக் கவரைப் பிரித்தான் பிரகாஷ்.

உள்ளே ஓர் அட்டையில், ரத்தம் சொட்டச் சொட்ட ஒருவன் விழுந்து கிடப்பது போல் ஒரு படம் ஒட்டப்பட்டிருப்பதைப் பார்த்ததும் அலறி விட்டாள் நயனதாரா.

''வேண்டாம் சார்.. இத்தோடு விட்டு விடுங்கள். என்ன இருந்தாலும் உயிரைவிட இந்தக் கம்பெனியும் பணமும் பெரிதில்லை, சார்.. வேண்டாம்'' என்று ஒரேயடியாய் மன்றாடினாள்.

தலையசைத்து முறுவலித்தான் பிரகாஷ். ''இந்தப் பயம் பயப்படுகிறாயே! யோசி, என் உயிர் எனக்குப் பெரிதில் லையா? இவ்வளவு வேலை செய்கிறேன், உயிரை மட்டும் அனாவசியமாய் விட்டு விடுவேனா? இருந்து அனுபவிக்க எத்தனையோ புதிய ஆசைகள் வேறு உண்டாகி இருக்கின்ற னவே! என் பாதுகாப்புக்காக பலமான ஏற்பாடு செய்யப்பட்டி ருக்கிறது. நானும் எச்சரிக்கையுடனேயே தான் இருப்பேன். அதனால் கவலைப்படாமல் கிளம்பு'' என்று வற்புறுத்தி அவளை அழைத்துச் சென்றான் அவன்.

ஓட்டலில் ஒவ்வோர் மூலை முடுக்கிலும் அவளது பார்வை பாய்ந்து அலசி ஆராய்ந்தது.

பிரகாஷ் சொன்னது சரியே. பாதுகாப்புக்கென்று சாதா ரண உடையில் பலர் சுற்றினர். சீருடையிலும் கூட. அழைப்பி தழ் உள்ளவர்களை மட்டுமே ஹாலுக்குள் அனுமதித்தனர்.

அழைக்கப்பட்டவர்கள் வந்து சேர்ந்ததும் கதவுகள் மூடப்பட்டு விட்டன.

கூட்டத்தில் பிரகாஷின் பேச்சு பெரும் வெற்றியாக அமைந்தது. அந்த இடத்தில் வைத்தே பலர் தங்கள் 'பிராக்சி' யாகச் செயலாற்ற அவனுக்கு அதிகாரம் எழுதிக் கொடுத்தார் கள். மற்றவர்கள் தங்கள் பங்குகளை அவனிடமே விற்க முன் வந்தார்கள்.

கூட்டத்திற்கு வந்தவர்கள் திருப்தியோடு கலைந்து சென் றுவிட, கணக்குகளை முடித்துக் கொண்டு, நயனதாராவும் பிரகாஷும் கிளம்புகையில் அது நேர்ந்தது.

கூட்டம் வெற்றிகரமாக முடிந்து விட்டதால், வேலை முடிந்தது என்ற மெத்தனம் வந்து விட்டதோ என்னவோ, பாதுகாப்புக்கென்று அலைந்த காவல் துறையினர் யாரும் அங்கே கண்ணில் படவில்லை. பிரகாஷும் சற்று அலட்சியமா கவே கார்க்கதவைத் திறந்து கொண்டு இருந்த அந்த நேரத்தில் ஒரு காரின் பின்னிருந்து வேகமாகப் பறந்து வந்த கத்தியை அவனும் கவனித்தாற்போலத் தெரியவில்லை.



ஆனால் அன்று வந்த பயமுறுத்தல் கடிதத்தைப் பார்த்ததி லிருந்து, பிரகாஷின் பாதுகாப்பையே மிகவும் முக்கியமாகக் கருதி நடமாடிய நயனதாரா கத்தி வருவதை முதலிலேயே கவனித்து விட்டாள்.

மின்வெட்டும் நேரத்தில் கத்திக்கும் பிரகாஷிற்கும் இடையே பாய்ந்து வந்தவள், அவனுக்குப் பதிலாகக் கத்தி யைத் தன் உடலில் ஏற்றாள்.

செங்குருதி பீறிட்டு அடிக்க, வலி தாங்காமல் மயங்கிச் சாய்ந்தாள்.

# 10

நயனதாராவுக்குத் தோள்பட்டையில் பயங்கரமாக வலித் தது. கொஞ்சம் புரண்டு படுத்தால் வலி குறையக்கூடுமோ என்று திரும்ப முயன்றால் உடம்பை அசைக்கக் கூடச் சக்தி இல்லை.

என்ன இது என்று யோசிக்கையில் சட்டென அந்தக் கத்தி நினைவு வந்தது. பிரகாஷின் மீது பாய வந்த கத்தியைக் குறுக்கே வந்து ஏற்றது ஞாபகம் வந்தது.

சினிமாக்களில் வருகிற மாதிரி ஒரே கத்தியை வீசி விட்டு, வீசிய கத்தி, வேறொருவரைக் காயப்படுத்தியதும் பயந்து ஓடி விட்டானா அல்லது இன்னொரு கத்தி கொண்டு பிரகாஷையும் ஏதாவது...

பெருமுயற்சி செய்து கண்களைத் திறந்த போது, ''அவ ளுக்கு நினைவு திரும்புகிறது'' என்று கூறியபடி யாரோ அவ ளைக் குனிந்து பார்த்தார்கள்.

மசமசவென்று தெரிந்த உருவத்திடம், ''அவர்.. பி.. பிர காஷுக்கு ஒன்றுமில்லையே...'' என்று பெரும் சிரமப்பட்டுக்

கேட்டவள், பதிலைப் பெறுமுன்பே மீண்டும் மயங்கிப் போனாள்.

மீண்டும் அவள் கண் விழித்த போது தோளில் வலி குறைந்திருந்தது. அவளை உறுத்திய கேள்விக்குப் பதில் சொல்லப் பிரகாஷே அருகில் இருந்தான். ''எனக்கு ஒன்றும் இல்லையம்மா'' என்ற அவனது பதிலில் பெரும் ஆறுதலுற்ற வளாக மீண்டும் தூங்கிப் போனாள் அவள்.

நல்லவேளை! சினிமா மாதிரிதான் நடந்திருக்கிறது!

இளவயது; ஆரோக்கியமான உடம்பு என்பதால் நயன தாரா வேகமாகக் குணமடையலானாள்.

குடும்பத்தில் யாராவது ஒருவர் எப்போதும் துணையி ருந்தார்கள். பிரகாஷின் குரலும் பெரும்பாலும் கேட்டது.

ஒருநாள் விழித்த போது பிரகாஷ் படுக்கை ஓரமாய் ஒரு நாற்காலியில் அமர்ந்திருந்தான்.

குனிந்து, அவளது முன்னுச்சி மயிர்ச் சுருளை மிருதுவாக ஒதுக்கி, ''என்ன வேலை செய்து விட்டாய், நயனி?'' என் றான் குரலில் அடைப்புடன்.

அவனது செயல், முன்னொருதரம் அவளுடைய அன்னை இதேமாதிரி, பரிவுடன் முடியை ஒதுக்கி விட்டதை அவளுக்கு நினைவுபடுத்தியது.

இவனுக்கும் அதேமாதிரி அன்பு இருக்கக்கூடுமோ?

அவனையே பார்த்தவள், மெல்லக் கேட்டாள். ''அந்த ஆளை.. கத்தி வீசியவனைப் பிடித்து விட்டீர்களா? உங்க ளுக்கு இனி ஆபத்தில்லையே?''

அவள் கையைப் பற்றி அழுத்தி அவன் சொன்னான். ''அந்தக் கும்பலையே பிடித்தாயிற்று. ஆனால் என்றுமே நீ நினைத்த அளவு ஆபத்து இருக்கவில்லை, நயனி''

புருவத்தைச் சுருக்கி, ''ஆனால்...'' என்று அவள் தொடங்கவும், ''கத்தி வீசினானே என்கிறாயாம்மா? ஒரு தாக்



குதலை எதிர்பார்த்துத்தான் இருந்தோம். அதுவும் அன்றைக்கு நிச்சயம் முயற்சி செய்வார்கள் என்றும் தெரியும்தான். கையும் களவுமாய்ப் பிடிப்பதற்காகவே காவலர்கள் போய் விட்டது போல் தோன்ற வைத்திருந்தோம். கத்தி வந்ததை நானும் கவனித்தேன். வீச்சிலிருந்து விலகிக் கொண்டிருந்த போது தான் நீ வந்து.. என்னைக் காப்பாற்றிக் கொள்வேன் என்றால் நம்பிக்கை இல்லையா? அனாவசியமாய் உன்னை ஆபத்துக் குள்ளாக்கிக் கொண்டாயே?'' என்றான் அவன் வருத்தத்து டன்.

ஏதோ யோசித்து விட்டுத் தலையசைத்தாள் அவள்.

அவன் என்னவென்று கேட்கவும் சொன்னாள். ''அன் றைக்குத் தான் தாக்க வேண்டும் என்று என்ன கட்டாயம்? முட்டாள்தனமாக இருக்கிறது'' என்றாள்.

''மூடத்தனம்!'' என்றான் அவன். ''நிர்மூடத்தனம். ஆந் திராவில் எனக்குப் பழக்கமான ஒரு பெரிய போலீஸ் ஆபீசர் மாற்றலாகி இப்போது இங்கே இருக்கிறார். முதல் கடிதம் வந்ததுமே, இன்னார் வேலைதான் என்று ஊகித்து அவர்கள் வட்டத்திலேயே ஆள்பிடித்து விட்டார் அவர். எந்நேரமும் குடிதானே. குடிவெறியில் இன்று என் கதையை முடிப்பதாகச் சபதம் செய்தது தெரிய வந்தது. கையும் களவுமாகப் பிடித்து மாட்டி விட்டால் தான் கூட்டத்தையே பிடிக்க முடியும். மீண் டும் முயற்சி செய்யும் துணிவை அழிக்க இயலும் என்றுதான் அப்படி செய்தது.

''ஆனால்...''

''என்ன ஆனால்?''

''அந்த ஆள் துப்பாக்கியோடு வந்திருந்தால்?''

''அப்போது வேறு ஏற்பாடு செய்திருப்போம்''

''துப்பாக்கியைப் பயன்படுத்தப் போவதில்லை என்று தெரிந்த பிறகு தான் இப்படித் திட்டமிட்டதே. உன்னிடமும்

சொல்லியிருப்பேன். ஆனால் நீ வீணாகப் பயப்படுவாயே என்று சொல்லாமல் விட்டேன். அது... நயனி, உன் மேல் கத்தி பாய்ந்து விட்டதும் எப்படி வெலவெலத்துப் போனேன், தெரியுமா? ஆனால் ஏன் நயனி, அப்படிச் செய்தாய்? உன் உயிரை விட என் உயிர் அப்படி என்ன வெல்லக்கட்டி?''

'வெல்லக்கட்டி தான். அன்று அந்தக் கத்தி பாய்வதைக் காணும் வரை அவளே கூட அறிந்திராத அளவு இனிப்பான வெல்லக்கட்டி தான். ஆனால் அனுபவிக்க முடியாத இனிப்பு?

முதலில் அந்த மிரட்டல் கடிதம் வந்ததிலிருந்து, அவனது உயிருக்காக அவள் மிகவும் கவலைப்பட்ட போது கூட, இந்த அளவுக்குத் தன் மனம் இன்னமும் ஈடுபட்டிருக்கும் என்று அவள் எண்ணவில்லை. ஒரு மனித உயிரின் மேலான பரிவு மட்டுமே என்று நினைத்ததெல்லாம் எவ்வளவு பெரிய பொய்!

எதிர்காலம் இல்லாத இந்த அன்பைச் சுமந்து கொண்டு வாழ்வதை விட, இந்தக் கத்திக் குத்தில் இறந்தே போயிருக்கலாம்.

பதிலுக்காக அவன் தன் முகத்தைப் பார்த்தபடி காத்திருப்பதை உணர்ந்து ''வலிக்கிறது'' என்று முகம் சுளித்தாள் நயனி.

சில கணங்கள் அவளை நேராகப் பார்த்தவன், தோளைக் குலுக்கி விட்டு, நர்சை அழைத்தான். நர்ஸ் வருமுன் ஒன்று மட்டும் கேட்டான்.

''இன்னமும் மறைத்துத்தான் ஆக வேண்டுமா, நயனி?''

நகரில் மிகவும் பிரபலமான மருத்துவமனை ஒன்றில் நயனதாராவுக்கு சிகிச்சை நடந்தது.

ஐந்து நட்சத்திர ஓட்டலின் சூட் போல ஏ.சி. அறையையும், சிட் அவுட்டையும் காண இதன் செலவுக் கணக்கு நயனதாராவின் மனதுள் உதைத்தது.

மெல்லத் தந்தையிடம் வினவிய போது, ''தன்னைக் காப்பாற்ற வந்து காயப்பட்டாள். சிகிச்சைச் செலவு முழுவதும் தன்னது என்று பிரகாஷ் சொல்லி விட்டாரம்மா. இங்கே எல்லாம் ஏற்பாடு செய்து விட்ட பிறகு தான் அவர் எங்களிடம் விஷயம் சொன்னதே'' என்றார் அவர்.



அவருக்கும், குடும்பத்தில் அனைவருக்கும் இது உடன்பாடாக இருப்பதைக் காணவும் நயனதாராவால் மறுத்து ஏதும் கூற முடியவில்லை. ஆனால் தனக்காக அவன் செலவு செய்வதை ஏற்கப் பிடிக்காமல் உள்ளூரக் குமைந்தாள்.

பிடிக்காமல் சகித்தது அதை மட்டுமல்ல. வீட்டினர் எல்லாருமே பிரகாஷோடு கலகலப்பாகப் பழகுவதும் கூட அவளுக்குப் பிடிக்கவில்லை.

ஏதோ அவனுக்கு உரிமை உள்ளது போல நடந்து கொள்வதும் கூடத்தான்.

ஆனால் யாரோடும் வாதாடி வெல்லும் தென்பு இல்லாத காரணத்தாலும், மற்றவர்கள் போக்கோடு சேர்ந்து கொள்ள மனம் வராத காரணத்தாலும் முடிந்த அளவு வாயோடு கண்களையும் மூடிக் கொண்டே தூங்குவது போலக் கிடந்தாள். உடம்பு பலவீனத்தால் அவ்வப்போது தூங்கவும் செய்தாள்.

அன்று மாலையில் பிரகாஷ் வந்த போது நயனதாரா உறங்கிக் கொண்டு இருக்கவே, சிட் அவுட்டில் உட்கார்ந்து மற்றவர்கள் பேசிக் கொண்டு இருந்த போது, சொந்த ஊர்ப் பேச்சு வந்தது.

''தஞ்சைப் பக்கமாய் ஓர் அரண்மனை பரம்பரை பரம்பரையாகக் குடும்பத்தில் இருக்கிறது. தன் உயிரைக் காப்பாற்றியதற்காக, சரபோஜி வம்சத்தில் ஒரு சிற்றரசர் எங்கள் மூதாதை ஒருவருக்குப் பரிசாகக் கொடுத்தது'' என்று அடக்கமாகப் பெருமை அடித்துக் கொண்டார் மகேசுவரன்.

''பொய்! அதெல்லாம் கதை!'' என்றனர் நர்மதாவும், நரேந்திரனும். ''அப்படிப் பெரிய வீரதீரம் எல்லாம் இந்த வம்சத்து ஆண்களுக்குக் கிடையாது, பிரகாஷ் சார். சும்மா, பராமரிப்புச் செலவை மிச்சம் பிடிப்பதற்காக தாத்தாவுக்குத்

தாத்தாவுக்குத் தாத்தாவுக்கு அந்த ராஜா கொடுத்தாராம். அப்படித்தான் எங்கள் அத்தை பெண் பிருந்தா சொன்னாள்'' என்றாள் நர்மதா.

''சீ.. உளறாதே. அப்பா, நான் எல்லாம் இருப்பதை மறந்து வம்சத்துக்கே வீர தீரம் கிடையாது என்கிறாயே!'' என்று கோபமாய் ஆட்சேபித்தான் நரேந்திரன்.

''மறக்காததால் தான் அப்படிச் சொல்கிறேன்'' என்று திருப்பி விட்டு அம்மாவின் பின்போய் ஒளிந்து கொண்டாள் நர்மதா.

நரேந்திரன் ஆவேசமாய் எழவும், ''அமைதி, அமைதி'' என்று சமாதானப்படுத்தினான் பிரகாஷ். ''ஆனால், நீயும் அப்பா சொன்னதை ஒப்பவில்லையே, வேறுகதையும் உண்டா, நரேன்?'' என்று அவனிடம் வினவினான்.

''உண்டு, உண்டு'' என்றான் சின்னவன். குரலைத் தணித்து, ''இது சின்ன வீட்டு சமாசாரம், பிரகாஷ் சார். சின்ன வீட்டு அம்மாள் இருந்த இடம். கிழட்டு ராஜா நோயில் விழுந்த பிறகு, பெரிய ராணியம்மாள், சின்னவளை ஊரை விட்டு விரட்டும் பொறுப்பை - அது உலகத்தை விட்டே விரட்டும் பொறுப்பு என்பது எங்கள் சந்தேகம் - அந்தப் பொறுப்பை எங்கள் கொள்ளுத் தாத்தாவுக்குக் கொள்ளுத் தாத்தாவிடம் கொடுத்ததாகவும், அதை அவர் வெற்றிகரமாக நிறைவேற்றியதற்காகக் கிடைத்த பரிசு இது என்றும் வரலாறு'' - என்றான் அவன்.

''ஆ..மாம். இது மிகவும் வீரதீர பராக்கிரமச் செயலாக்கும். உடல் வளமையற்ற ஒரு பெண்ணை...''

''பெண்களா வலிமை அற்றவர்கள்?! யப்பா.. அஆ...!'' என்று நரேந்திரன் நடிக்கவும் எல்லோருக்கும் சிரிப்பு வந்து விட்டது.

சிரித்து முடித்ததும், ''அங்கே ஓர் அரண்மனை இருப்பது நிஜம், பிரகாஷ். முன்பு, என் தகப்பனார் இருந்தவரையில்



அந்த இடத்தை விட்டு அசையவே மறுத்து விட்டார். ஆண்டு தோறும் அவரைப் பார்க்க நாங்கள் தான் போக வேண்டும்'' என்றார் மகேசுவரன்.

''ஆ...மாம் பெரிய லீவுக்குக் கட்டாயம் அங்கே தான் போயாக வேண்டும். ஒரு காஸ் அடுப்பு கிடையாது. சினிமா, நாடகம் என்று ஒன்றும் இல்லாமல் நானும் இவருடைய தங்கைகளும் என்ன பாடுபடுவோம் தெரியுமா?'' என்று தன் குறையை வெளியிட்டாள் கவுசல்யா.

''உண்மைதான். வயதானவரின் திருப்திக்காகச் செய்தது'' என்று ஒத்துக் கொண்டார் அவளுடைய கணவர். ''ஆனால் ஓடிப்பிடித்து விளையாட நன்றாகயிருக்கும்'' என்றாள் நர்மதா.

''இப்போது அங்கே யார் இருக்கிறார்கள்?'' என்று பிரகாஷ் விசாரித்தான்.

''யாரும் இல்லை. அதாவது குடும்பத்தினர் என்று ஒருவரும் இல்லை. அப்பாவுக்குப் பிறகு ஒரே ஆண்வாரிசு என்று எனக்கு வந்தது. நான் இங்கே வேலை பார்க்கிறவன். அங்கே போய் இருக்க முடியுமா? விற்று விடலாம் என்று பார்த்தால் நயனி ஒரே அழுகை. வெள்ளை யானை மாதிரி வீண் செலவு என்றால் கேட்கவே இல்லை. நல்லவேளையாக, அரசாங்கத்தில் ஒரு நண்பன் இருந்தான். கோடவுனாகப் பயன்படுத்த அரசாங்கம் வாடகைக்கு எடுத்துக் கொள்ளும்படி அவன் ஏற்பாடு செய்தான். பராமரிப்பு அவர்கள் செலவு. இரண்டு அறை மட்டும் நமக்கு. நிலத்தைக் குத்தகைக்கு விட்டதில் கொஞ்சம் வருகிறது. ஆண்டுதோறும்...''

''அப்பா...'' என்று நயனதாராவின் குரல் அடுத்த அறையிலிருந்து ஒலித்து அவர் பேச்சை நிறுத்தியது.

''என்னம்மா?'' என்று எழுந்து சென்றார் அவர்.

''நம் கதையெல்லாம் சொல்லிப் போரடிக்காதீர்கள். அப்பா.. பேச்சு சத்தத்தில் என்னால் தூங்கவே முடியவில்லை...'' என்றாள் மெல்லிய குரலில் அவள்.

''மெல்லப் பேசுகிறோம், கண்ணு''

''வேறே பேசுங்கள்... தாத்தா வீடு பற்றிச் சொல்ல வேண்டாம்ப்பா..'' என்று கெஞ்சுதலாகக் கேட்டவளின் கண்களில் நீர் மல்கியிருப்பதைக் காணவும் பெற்றோருக்கு ஒரு மாதிரியாகி விட்டது.

காரணத்தை வெகுவாக ஊகித்து, ''சரிடாம்மா.. இனி இல்லை நீ தூங்கு'' என்று தட்டிக் கொடுத்து விட்டு வெளியே சென்றார். மனைவியை விளித்து, ''நீ, நயனியிடம் சென்று இரு. அவளுக்குத் தாத்தா நினைவு வந்து விட்டது போலத் தெரிகிறது. பெரிய பேத்தியல்லவா'' என்று அனுப்பினார்.

உள்ளே போய்ப் பார்த்து விட்டு, ''நயனி தூங்கிவிட்டாள்'' என்று மீண்டும் வெளியே வந்து அமர்ந்தாள் கவுசல்யா. அதன்பின் உரையாடல் தணிந்த குரலில் நடந்தது.

கிளம்புமுன் நயனதாராவின் அறைக்குள் வந்தான் பிரகாஷ். கண்மூடிக் கிடந்தவளைப் பார்த்தபடி சற்று நேரம் நின்றான்.

''நீ விழித்திருப்பது எனக்குத் தெரியும் நயனி. இதனாலெல்லாம் என்னை விரட்டி விட முடியும் என்று நினைத்தாயா? நான் பிர்காஷ் தெரியுமல்லவா? உன்னை மாற்றியே தீருவேன்'' என்று மெல்லிய குரலில் உரைத்தவன், குனிந்து, அவளது நெற்றியில் லேசாக இதழ் ஒற்றிவிட்டுப் போனான்.

அவன் மற்றவர்களிடம் விடை பெறுவதும், அவன் சென்ற பிறகு, ''எந்த ராஜகுமாரன் வரப் போகிறான் என்று என் மகளைக் கரித்தாயே! பார், ராஜகுமாரனே வந்து விட்டான்!'' என்று தந்தை உவகையோடு கூறுவதும் அவள் காதுகளில் தெளிவாகவே விழுந்தன.

''அரண்மனை பற்றி இவ்வளவு பேச்சுக்கும் அவனுக்கு ஒன்றுமே தோன்றவில்லையே!''

கட்டுப்பாட்டை மீறிக் கொண்டு நயனியின் கண்கள் கசிந்தன. அவன் உயிரைக் காப்பதற்காகத் தன் உயிரைத் தரவும் தயார் என்று எல்லோரும் அறியக் காட்டிய பிறகு என்ன சொல்லி அவனை மறுக்க முடியும்? ஆனால் முதல் நாள் அப்படிக் கேட்டவனை, கேட்டதற்கு அவளே காரணம் என்றவனை எப்படி மணக்க முடியும்? யாராவது தெரிந்தவர்களோடு சிரித்துப் பேசினால் கூட அவனுக்குச் சந்தேகம் வந்து விடாதா? அத்தோடு.. ஊகூம் இல்லை. குணமானதும் பிடிவாதமாய் விலகியே தீர வேண்டும் என்று உள்ளுர வேதனையோடு முடிவு செய்தாள் நயனதாரா.



கத்திக் குத்துக் காயம் நன்றாக ஆறி, தையல் பிரித்து, ஓரளவு உடல் பலவீனம் தவிர மற்றபடி நன்றாகக் குணமாகி, நயனதாரா வீடு சென்ற மறுநாள் பிரகாஷ் அவளிடம் தன்னை மணக்கக் கோரினான்.

அவனைக் கண்டதும் நர்மதா விலகிச் சென்றுவிட, மாடியறைத் தனிமையில் அவனிடம் மறுப்பதே அவளுக்குப் பெரும் துன்பமாகிப் போயிற்று.

ஏன் என்று துளைத்தவனிடம், ''சாரி.. எனக்குப் பிடிக்கவில்லை'' என்றாளே தவிர வேறு எதுவும் சொன்னாளில்லை. சொல்லப் பிரியமும் இல்லை. அவனுக்கு தெரியாததைச் சொல்வதே அவமானமாகப்பட்டது அவளுக்கு. ஆனாலும் அப்படி ஒரு சிறு நெருடல் கூடவா இல்லாது போய்விடும்?

அவன் வேறு விதமாக ஊகித்து ஒரு விளக்கம் சொன்னான். ''அன்றைக்கு நான் உன்னை மிகவும் வருத்தி விட்டேன் இல்லையா, நயனி? அன்றையப் பேச்சை வைத்து அவனைக் கூட மிகவும் தப்பாக எண்ணியிருப்பாய். ஆனால் நான் கெட்டவன் இல்லை, டார்லிங். எவள் வந்தாலும் இழுத்துக் கொண்டு போவது எனக்குப் பழக்கமும் இல்லை. ஆனால் அன்று.. அன்று என்னுள் இருந்த உணர்வுகள் உன் ஒருத்திக்காக மட்டுமே உருவாகக் கூடியவை என்று நானே அறிந்து கொள்ளவில்லை. நீயும் நெகிழவும், உன்னைப் பிரிய முடியாதது போலத் தோன்றவே.. நயனி, அந்தப் பேச்சுக்காக நம் இருவர் வாழ்வையும் வீணாக்கி விடாதே.. ப்ளீஸ்''

இல்லை. இன்னமும் அவன் கிட்ட வரவே இல்லை. அப்படி வரும்வரை இதெல்லாம் ஒன்றுமே இல்லை.

மடியில் கோர்த்திருந்த விரல்களைப் பார்த்தபடி, ''இல்லை அதற்காக என்று இல்லை'' என்றான் அவன் மெல்லிய குரலில்.

''ஆனால் நான் உங்களை மணப்பதற்கு இல்லை...'' என்றாள் அவள் தன் மெலிந்த குரலில் உறுதியோடு.

## 11

மேலே என்ன செய்வது என்று புரியாமல் சற்று நேரம் அவள் முகத்தைப் பார்த்தபடி நின்றான் பிரகாஷ்.

மவுனம் தாங்க முடியாதது போலத் தோன்றவும், ''நான்.. நான் கொஞ்சம் ஓய்வெடுக்க வேண்டும்... மேலே சொல்ல ஒன்றும் இல்லாததால்.. வந்து.. நீங்கள் கிளம்புகிறீர்களா?'' என்றாள் நயனதாரா.

மறுப்பாய்த் தலையசைத்து, ''இருக்கிறது'' என்றான் அவன். ''என்ன..னவோ இருக்கிறது. எதையோ மறைக்கிறாய். அது...'' என்று அவள் அருகே அமர்ந்து, அவள் முகத்தை நிமிர்த்தினான் பிரகாஷ்.

''நயனி, என்னைப் பார். உனக்காகவே என் இதயம் துடிப்பது உனக்கு இன்னமுமா புரியவில்லை?... இல்லை. இது உனக்குப் புரிகிறது. புரிகிறது தானே? உன் மனதில் எனக்கு இடம் இருப்பது எனக்கும் தெரியும். அப்படி இருக்க ஏன் இந்த மறுப்பு? சொல்லு நயனி. நீ சொன்னால் தானே தெரியும்?''

சொல்லித் தான் தெரிந்தாக வேண்டுமா? அவன் சொல்லுகிற அளவு அன்பு இருப்பது மெய்யென்றால் அவனால்



எப்படி அடியோடு மறக்க முடியும்? அத்தோடு ஒரு முறை மறந்தவன் மறுமுறை மறக்க மாட்டான் என்று எப்படி நம்புவது?

எல்லாவற்றையும் ஒதுக்கி விட்டு, அவனை ஏற்க முடியாததால் இழக்கப் போகும் சொர்க்கத்தை எண்ணுகையில் அவளுக்குக் கண்ணீர் ததும்பியது.

அவளிடம் கண்ணீரைக் கண்டதும் பிரகாஷ் எழுந்து விட்டான். ''நீ இன்னமும் மிகவும் பலவீனமாய்த்தான் இருக்கிறாய் என்று நினைக்கிறேன். இந்த நிலையில் நான் இந்தப் பேச்சை எடுத்ததே பிசகு என்று தோன்றுகிறது. போகட்டும். நீ நன்றாக ஓய்வெடு. உன் உடம்பு நன்றாகி விட்ட பிறகு நாம் இதுபற்றி மேலே பேசலாம்.. ஆனால் ஒன்று மட்டும் மறக்க வேண்டாம் நயனி.. நான் தோல்வியை ஒத்துக் கொள்கிறவன் அல்ல. மீண்டும் வருவேன்.. இப்போது ஓய்வெடு'' என்று கூறிவிட்டுச் சென்றான்.

நாலுநாள் இடைவெளி விட்டு, நயனதாரா அலுவலகம் வருகிறாளா என்று கேட்கலாம் என்று எண்ணி, காலை ஒன்பது மணிக்கு அவள் வீட்டுக்குப் பிரகாஷ் சென்ற போது அவள் அங்கே இல்லை.

வருங்கால மருமகனை வரவேற்று, உட்கார வைத்து உபசரித்தபடி கவுசல்யா சொன்னாள். ''நயனி ஊருக்குப் போயிருக்கிறாளே.. அதுதான்.. அவள் தாத்தா ஊருக்கு. உங்களிடம் சொல்லியிருப்பாள் என்று நினைத்தேன். நீங்கள் முதலில் காபியைக் குடியுங்கள்''

''என்ன திடீரென்று''

''ஆண்டுதோறும் போவதுதான். அதுவும் இன்றைக்குச் சாயங்காலம் நாலுமணிக்குக் கட்டாயமாய் அவள் தாத்தா வீட்டில் இருப்பாள். படுக்கையிலிருந்து இப்போதுதானே எழுந்திருந்தாய், இந்த ஆண்டு வேண்டாம் என்று சொல்லிப் பார்த்தால் கேட்க மாட்டேன் என்று கிளம்பி விட்டாள். திருச்சி

யில் அவள் அத்தை வீட்டில் தங்கி விட்டு, இன்று சாயங்காலம் அரண்மனைக்கு போய் விட்டு, இரவு பஸ்சில் திரும்பி விடு வாள்'' என்று விளக்கினாள் தாயார்.

''இன்று அவளுடைய தாத்தா இறந்த நாளா?'' என்று கேட்டபடி காபியை எடுத்தான் பிரகாஷ்.

''அய்யோ.. இல்லைங்க. அந்த நாளைத்தான் நாங்கள் வீட்டிலேயே கொண்டாடுவோம். இது என்னவோ, ஏழெட்டு ஆண்டுகளாக இந்த நாளை ஒரு விரதம் மாதிரிச் செய்கிறாள். சின்ன வயதில் அப்பா அல்லது நான் கூடப் போவோம். கல்லூரிப் படிப்பு ஆன பிறகு அவளே போய் வருகிறாள்.

எதையோ தீவிரமாக யோசித்தபடி, ''ஏழெட்டு ஆண்டுக ளாகவா?'' என்றான் அவன்.

''ஆமாம். வருஷா வருஷம் போவதில் அங்கே ஒரு சினேகிதி கூடப் பிடித்திருக்கிறாள்... பாவம், அந்தப் பெண் சமீபத்தில் போய் விட்டது. அவள் சினேகிதி அனிதாவின் நிச்சயதார்த்தத்துக்கு 'தாஜ்' ஓட்டலுக்கு அழகாய், ஜரிகைக் கட்டம் போட்ட மைசூர் ஜார்ஜெட் கட்டிக் கொண்டு போன வள் - அந்தச் சேலை கூட உள் முனையில் ஜரிகை கிழிந்து விட்டது - அங்கே தான் அந்த சினேகிதிப் பெண் இறந்தது தெரிந்ததாம். நயனிக்கு இளகிய மனம் வேறு. அழுதாள், அழுதாள், அப்படி அழுதாள். அழுததில் நாலுநாள் காய்ச் சலே வந்து விட்டது'' என்றாள் கவுசல்யா பெருமூச்சுடன்.

''அடடா, காபி குடிக்கிற நேரத்தில் போய்க் கண்டதை யும் பேசிவிட்டேன். சாரி.. நீங்கள் காபியைக் குடியுங்கள். மா... ப்பிள்ளை''

அவனுக்குள் ஒரு வெளிச்சம் ஏழெட்டு ஆண்டுகளாகப் பழகி, அவள் தோழியின் நிச்சயத்தன்று இறந்த தோழி யாரென்று புலப்பட்டாற் போல இருந்தது.

''உங்கள் ஊர், அரண்மனையின் இருப்பிடம், விலாசம் சொல்லுங்கள். இன்று நான் கூட அந்தப் பக்கம் போக வேண்டி



யிருப்பதால், நயனியை நானே அழைத்து வந்து விடுகிறேன்'' என்றான் பிரகாஷ்.

வழக்கம் போலவே உடன் வரத் துடித்த, அத்தை பெண் பிருந்தாவைத் தவிர்த்து விட்டு, தாத்தாவின் அரண்ம னைக்குச் சென்றாள் நயனதாரா.

இது அறுவடை மாதம் அல்ல என்பதால், பொதுவாக இந்தச் சமயத்தில் கோடவுனில் ஆள் நடமாட்டம் இருப்ப தில்லை.

பொறுப்பாளர் என்று ஒரு கிழவனார் மட்டுமே இருப்ப துண்டு.

அவரிடம் சாவியை வாங்கிக் கொண்டு அவர்கள் குடும் பத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த அறைக்குள் சென்றாள் நயன தாரா.

தாத்தாவின் சுவர்க் கடிகாரத்தில் சாவி கொடுத்து நேரம் சரி செய்து ஓட விட்டாள்.

அந்தப் பழைய காலக் கடிகாரத்தின் ரோமன் எண்களில் நாலை நோக்கிச் சின்னமுள்ளும், பனிரண்டை நோக்கிப் பெரிய முள்ளும் நகரலாயின.

அன்று வரை அறியாத வேகத்தோடு காரை ஓட்டினான் பிரகாஷ்.

எட்டு ஆண்டுகள்! அந்தச் சமயத்தில் அவனுக்கு நம் தமிழகத்தின் சிற்பங்கள், சித்திரங்களில் ஒரு பைத்தியம் பிடித் திருந்தது. தமிழ்நாட்டுக் கோயில்கள், அரண்மனைகளில் தூண்களிலும், விதானங்களிலும், சுவர்களிலும் உள்ள சிற்பங் களையும் சித்திரங்களையும் பார்த்து ரசித்துக் கொண்டு தமிழக மெங்கும் சுற்றினான். அதிலும் தஞ்சை, கலைகளின் கருவூல மாகவே பட்டது. எனவே அங்கே ஒரு சின்ன அரண்மனை யைக் கூட அவன் விடவில்லை. ஆனால் அந்தச் சின்ன அரண்மனையில், அதன் அலங்கார மாடிப்படியும், நடுவே இருந்த சிலையும் தவிர விசேஷமாக வேறு எதுவும் இல்லை..

மெத்து மெத்தென்று பூப்பந்தாய் வந்து மோதிய அந்தச் சின்னப் பெண் தவிர..

மணி நாலை நெருங்கவும் நயனதாரா மெல்ல எழுந்து நடந்தாள். மெதுவாகவே படியிறங்கித் தன் வழக்கமான இடத்திற்குச் சென்று நின்றாள். இத்தனை ஆண்டுகளாக மகிழ்ச்சியும், நம்பிக்கையும் வேண்டுதலுமாக வந்தவள். இந்த ஆண்டு அழுகை வந்தது. அந்த இடத்தில் கண்ணீரை வழிய விட மனமின்றி விழிகளை இறுக மூடிக் கொண்டு நின்றாள்.

வெளியே ஏதோ சத்தம் கேட்டது. கார் வந்து நின்றது போல... கார்க்கதவு திறந்து மூடுவது போல..

காலடி ஓசையில் அவளுக்குப் புரிந்து விட்ட போதும் நயனதாரா கண்ணைத் திறக்கவில்லை. பயம்.. எல்லாமே ஆசை கொண்ட மனதின் கற்பனையாகி விட்டால்?

''பிரின்சஸ்?''

அவளது தோள் மேல் மிருதுவாகப் படிந்தன அவனது கரங்கள். அவளது சிப்பி இமைகள் மெல்லத் திறந்து, அகன்ற விழிகளை விசிறியாய்க் காத்து நின்றன.

அந்தப் பார்வையை நேராகத் தாங்கி, அவன் கேட்டான். ''உன் ராஜகுமாரன் வந்திருக்கிறேன், நயனதாரா. எட்டு ஆண்டுகளாக என் ராஜகுமாரி விரதம் காத்ததை அறியாமல், தொழில் வேலை என்று திரிந்து, என் ராஜகுமாரியை மறந்ததை மன்னித்து என்னை மணப்பாயா, கண்மணி?'' என்று அவளது செவ்விதழ்களில் மென்மையாக முத்தமிட்டான் பிரகாஷ்.

சிறு விம்மலுடன் அவன் மார்பில் சாய்ந்தாள் நயனதாரா.